# இலங்கையில் நிலைமாற்றுக்கால நீதியில் சமயத்தின் வகிபாகம்

**இறைநம்பிக்கை மீதான ஓர் ஆய்வு**

**உண்மை, நீதி, மனித தன்மானம் ஆகியவற்றுக்கான உரிமை**

Copyrights © NCEASL and USAID

The NCEASL and USAID retain distribution rights of this report.

This report is made possible by the support of the American People through the United States Agency for International Development (USAID). The content of this report is the sole responsibility of the NCEASL and do not necessarily reflect the views of USAID or the United States Government.

This publication may be reproduced by any organization for use in human rights education activities, provided the source is acknowledged and the National Christian Evangelical Alliance of Sri Lanka and USAID are notified of such use.

Email comments to: legal@nceasl.org / research@nceasl.org

## நன்றி நவிலல்

1952 இல் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக ஐக்கியத்துவமானது (NCEASL), முன்னர் இலங்கை சுவிசேஷக ஐக்கியத்துவம் (Evangelical Fellowship of Ceylon) என அழைக்கப்பட்டது.

தூதுப்பணியும் இறையியலும், மதச் சுதந்திரம் மற்றும் மனித உரிமைகள், நிவாரணம் மற்றும் அபிவிருத்தி என்ற மூன்று பரந்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு NCEASL பணியாற்றுகிறது. உலகளாவிய ரீதியில் 129 நாடுகளைச் சேர்ந்த 620 மில்லியன் கிறிஸ்தவ மக்களுடனான வலையமைப்பான உலக சுவிசேஷக ஐக்கியத்துவம் (WEA) உடன் NCEASL கூட்டிணைக்கப்பட்டுள்ளது. சமூக மாற்றம், மதச் சுதந்திரம், மனித உரிமைகள் செயற்பாடுகளில் புகழ்பெற்ற கொட்ப்ரி யோகராஜா அவர்களின் தலைமையில் NCEASL இன் செயல்பாடுகள் நடைபெறுகிறது. இலங்கையில் கிறிஸ்தவ சமூகத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வன்முறைகள், அச்சுறுத்தல்கள் மற்றும் பாரபட்சங்கள் போன்றன தொடர்பில் NCEASL இன் சமயச் சுதந்திர ஆணைக்குழுவானது (RLC) மேற்பார்வைகளை மேற்கொண்டு அவை தொடர்பிலான ஆவணங்களை இரண்டு தசாப்தத்திற்கு மேற்பட்ட காலங்களாக ஆவணப்படுத்தி வருகின்றது.

பரிந்துரைத்தல், ஆதரவு திரட்டுதல், ஆய்வு மற்றும் ஆவணப்படுத்தல், பயிற்சி மற்றும் கல்வி ஆகியவற்றின் மூலம் இலங்கையில் சமய சுதந்திரத்தை முன்னெடுத்துச் செல்வது RLC இன் நோக்கமாகும். நிலைமாற்றுக்கால நீதி தொடர்பிலான விழிப்புணர்வுகளை மேற்கொள்வது மற்றும் சமாதானத்தை கட்டியெழுப்புதல் ஆகிய பணிகளிலும் RLC ஈடுபட்டுள்ளது.

இவ் அறிக்கையின் தயாரிப்பு மற்றும் தொகுப்பிற்கு அவசியமான களப் பணிகளை செல்வி களனி சுபாசிங்க மற்றும் அருட்தந்தை மில்ராய் பர்னாந்து (சே.ச) ஆகியோர் பொறுப்பேற்றனர். சுயற்செய்யாக இவ் ஆய்வினைத் தொகுப்பது தொடர்பில் அவர்களது அயராத உழைப்பிற்கு NCEASL தனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

## முகவுரை

எமது தேசத்தின் மீது மதம் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தினை அளவிடமுடியாது. கலாசாரப் வளர்ச்சியின் அடிப்படையாகவும், சொல் அகராதியில் ஊடுருவியுள்ள வசனங்களுக்கு காரணமாகவும், அதிகமான பொது விடுமுறைகளுக்கு காரணமாகவும் மதம் அமைந்துள்ளது. ஆனால், இவை வெளியறங்கமாக விடயங்களாகும். தனிநபரைப் பொறுத்தவரையில் சமயம் என்பது அடிப்படையாகும். சமயம் நபர்களுக்கு இடையிலான உறவுகளை வரையறை செய்கிறதுடன் ஒழுக்கத்தை உருவாக்குதல், சடங்குகள் சார்ந்த கடமைகளை தீர்மானித்தல் போன்ற பலவற்றிலும் செல்வாக்கு செலுத்துகிறது. நிலைமாற்றுக்கால நீதியினூடாக நிரந்தர சமாதானத்தைக் கொண்டு வருவதற்காக நிறுவன ரீதியான தீர்வுகளைக் கண்டறிவது நோக்கமாயின் சமயம் பற்றிய ஆழமான பரிசீலனைகளையும் நாம் கவனிப்பது இன்றியமையாததாகும்.

இந்நோக்கத்துடன் இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக ஐக்கியத்துவம் (National Christian Evangelical Alliance of Sri Lanka) "இலங்கையில் நிலைமாற்றுக்கால நீதியில் சமயங்களின் வகிபாகம்" என்ற இந்த ஆய்வினை வெளிக்கொணர்ந்தது. நிலைமாற்றுக்கால நீதிப் பொறிமுறைகளில் இறையியல் சார்ந்த அடிப்படைத் தூண்களை இந்த ஆய்வு ஆராய்கிறது. ஒருவரால் நல்லிணக்கத்தை கிறிஸ்தவ மதத்துடனும், உண்மையை வெளிப்படுத்துவதை பௌத்த கடப்பாடு எனவும் அறியமுடியும், ஆனால் அதற்கும் அப்பாலுள்ள நிலைமாற்றுக்கால நீதித் தூண்களுக்கு உதவுகின்ற இறையியல் அடிப்படைகளை புலப்படுத்தும் முகமாக வேதம், உவமானங்கள் மற்றும் நீதிக்கதைகள் ஆகியவற்றிலிருந்து எடுகோல்கள் இவ்ஆய்வில் காட்டப்படுகின்றன. சமயத்தை முக்கியமாக கொண்ட தனி நபர்களே பாரிய சமூகமொன்றை கட்டியெழுப்பும் தூண்காளாகவிருக்கின்றனர். ஆகவே, நிலைபேறான சமூக சமாதானத்திற்கு சமயங்கள் எவ்வாறு பங்களிப்புச் செய்கிறது என்பதை அறிந்துகொள்வது நிலைமாற்றுக்கால நீதிப் பொறிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கு மிக முக்கியமானதாகும்.

இந்த இறுதி அறிக்கையை வாசிப்பது ஒரு பிரகாசமான அனுபவமாகும். இது நுட்பமானது. இருப்பினும் ஆராய்ச்சியாளர்கள் நிலைமாற்றுக்கால நீதிப் பொறிமுறைகள் மற்றும் சமூக, சமய நடத்தைகளின் மாறுபட்ட அம்சங்கள் ஆகியன தொடர்பிலான விளக்கங்கள் மூலம் பல விடயங்களை முன்னிறுத்தியுள்ளனர். உதாரணமாக இஸ்லாம் மதத்தைப் பொறுத்தவரையில், நீதியெனும் பொழுது இறைவனின் விருப்பப்படி எல்லாப் பொருட்களும் அதற்குரிய சரியான இடத்தில் இருப்பதாகும்: மனிதன் நீதியைக் கடைப்பிடிப்பதானது இறை வழிபாட்டுடன் சேர்த்து புரிந்துகொள்ளப்படுகிறது. இருப்பினும், நீதியைத் தேடுகின்ற பயணத்தில் ஒடுக்குமுறைகள் நிகழ்கின்ற பொழுது, இது இறைவனின் உத்தரவல்ல, ஏனென்றால் இறைவன் யாரையும் ஒடுக்குவதில்லை. இஸ்லாமிய நீதியில் அநீதி இழைப்பதற்கான வாய்ப்புகள் இல்லை. இந்துசமயத்தில் இடைத்தொடர்புகள் ரீதியான எண்ணக்கருக்கள் மூலம் தீங்கு இழைப்பதை தவிர்ப்பதைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. கிறிஸ்ணன் எல்லா உயிர்களிலும் வியாபித்துக் காணப்படுகின்ற பொழுது எல்லா உயிர்களும் கிறிஸ்ணன் தொடர்பில் பங்குபற்றுகின்ற பொழுது, ஒருவர் மற்றவருக்குத் தீங்கிழைக்கின்ற பொழுது இது கடவுளான கிறிஸ்ணனுக்கு இழைக்கப்படுகின்ற தீங்காகவே காணப்படுகிறது. பௌத்தமதம் பற்றிய அத்தியாயத்தில் நல்ல கம்ம அல்லது கெட்ட கம்ம பற்றி எடுத்துரைக்கப்பட்டுள்ளவைகளுக்கு அப்பால் சென்று சங்க மற்றும் புத்தருடைய வாழ்க்கை பற்றிய கதைகள் ஆகியவற்றில் சமாதானத்தைப் பேணுவது தொடர்பிலான திட்டவட்டமான முறைகள் பற்றிக் கூறப்பட்டுள்ளவைகள் ஆராயப்பட்டுள்ளது. கடந்த காலத்தை மறந்துவிடுவதற்குப் பதிலாக எதிர்காலத்தில் முரண்பாடுகள் ஏற்படாமலிருப்பதைத் தடுப்பதற்காகவே நல்லிணக்கப் பொறிமுறைகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. கிறிஸ்தவர்களுக்கு நல்லிணக்கம் என்பது ஒரு சமய ஆணையாகும். கிறிஸ்தவ சபைகளும் அதன் உறுப்பினர்களும் அடிப்படையிலேயே இயேசுவின் பலியினால் நல்லிணக்கத்திற்கு உட்படுத்தப்பட்டவர்களாக நல்லிணக்கச் சமூகமாகவே காணப்படுகின்றனர். நல்லிணக்கத்திற்கான பயணம் என்ற அத்தியாயத்தில் மனம்திரும்புதலுடன் ஆரம்பித்து சமூகத்தில் வாழ்கின்ற ஒருவரோடொருவர் நல்லிணக்கமாக பயணித்து இறுதியில் இறைவனுடனான ஒப்புரவில் முடிவடைகிறது.

இவ் ஆய்வு, நிலைமாற்றுக்கால நீதிப் பொறிமுறைகளை சரியான முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு உதவக்கூடிய வழிமுறைகளை மேற்கொள்ளும் படியும், இவ்வித பொறிமுறைகளைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் சமய நபர்களையும் நிறுவனங்களையும் இவற்றில் ஈடுப்படுத்துவது பற்றி சிந்திக்கும் படியும் கோரியுள்ளது. இலங்கையிலிருக்கின்ற சாதாரண மக்கள் மற்றும் சகல மதங்களையும் சேர்ந்த மதத் தலைவர்கள் உபயோகிக்கக்கூடிய விதத்தில் உண்மைக்கான உரிமை என்ற இந்த ஆவணத்தைச் NCEASL சார்பாக சமர்ப்பிப்பதில் நான் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். எமது நாட்டிற்கும் கலாசாரத்திற்கும் பல ஆயிரம் வருடங்கள் நிரம்பிய ஆன்மீகச் செழுமைகள் காணப்படுகின்றன. எமது நாட்டில் வெற்றிகரமான நிலைமாற்றுக்கால நீதியை ஏற்படுத்தும் முகமாக இதனை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்துவோம்.

**தேசமான்ய கொட்ப்ரி யோகராஜா.**
**இணை செயலாளர் நாயகம்**
**உலக சுவிசேஷக ஐக்கியத்துவம்.**

## அறிமுகம்

“இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல், மனித உரிமைகள் ஆகியவற்றை மேம்படுத்தல்” என்ற தொனிப்பொருளில் 2015ம் ஆண்டு இலங்கை அரசாங்கம் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைகுழுவில் “நிலைமாற்றுக்கால நீதி பொறிமுறை”[1] என்ற ‘தீர்மானம் 30∴1’ யை இணை அனுசரணையாளராக இணைந்து முன்வைத்தது[2]. இத்தீர்மானத்தின்படி, இலங்கை அரசாங்கம் உண்மையைக் கண்டறிவதற்கான ஆணைக்குழு, நீதி, நல்லிணக்கம் மற்றும் மீள்நிகழாமை, காணாமற்போனவர்கள் தொடர்பான உண்மையைக் கண்டறிவதற்கான அலுவலகம், விசேட சபைகளுடன் கூடிய நீதித்துறைப் பொறிமுறைகள், இழப்பீடுகளுக்கான அலுவலகம் ஆகியவற்றை அர்ப்பணிப்புடன் ஸ்தாபிப்பதற்கு இணங்கியது.

வன்முறை மற்றும் ஸ்திரத்தன்மையற்ற சூழ்நிலையிலிருந்து அமைதியும் ஸ்திரமுமான சூழ்நிலைக்கு அரசியல் நிலைமாற்றம் ஏற்படுகின்ற சூழ்நிலையில் நிலைமாற்றுக்கால நீதி பொறிமுறைகள் உபயோகிக்கப்படுகிறது. இச்சமூகங்கள் கடந்தகால முரண்பாடுகளை மீளாய்வு செய்வதன் மூலம் அனைத்து பிரஜைகளுக்கும் நீதியை நிலைநாட்டுவதுடன், பொதுமக்களுக்கு நம்பிக்கையை கட்டியெழுப்பவும், சமூகங்களுக்கிடையிலான நல்லிணக்கம், எதிர்காலத்தில் துஸ்பிரயோகங்களைத் தடுத்தல் போன்றவற்றையும் நிலைநாட்ட வேண்டும். மனித உரிமைகளுக்கு எதிராக இழைக்கப்பட்ட அட்டூழியங்களுக்குப் பரிகாரம் வழங்கும் முகமாக நிலைமாற்றுக்கால நீதியானது நீதித்துறை சார்ந்த மற்றும் சாராத நடைமுறைகளைப் பரிகாரங்களாகக் கொண்டுள்ளன.

தற்சமயம் கலந்துரையாடப்பட்டு வருகின்ற முறைகள், கட்டமைப்புகள், வழிமுறைகள் போன்றவற்றுடன் உண்மையைக் கண்டறிதல் அல்லது உண்மை தொடர்பான ஆணைக்குழுக்கள், நீதி, மறுசீரமைப்புகள், நினைவஞ்சலிகள், மீள்கட்டியெழுப்புதல் போன்றவையும் உள்ளடக்கப்பட்டுள்ளது. கடந்தகால மோசமான சம்பவங்கள் மீண்டும் இடம்பெறாதிருப்பதுடன், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை வழங்குதல் மற்றும் சமாதானம், ஜனநாயகம், நல்லிணக்கத்தையும் உருவாக்குவதும் இத்தகைய அணுகு முறைகளின் அடிப்படை நோக்கமாகும்.

மனிதர்களது உள்ளார்ந்த வாழ்க்கையிலும் சமூக வாழ்க்கையிலும் முக்கிய வகிபாகத்தை சமயம் கொண்டுள்ளது. சமாதானத்திற்கான அர்ப்பணிப்புடன் கூடிய நாகரீகமான வாழ்க்கைக்கான சட்டங்களையும் கொள்கைகளையும் கருத்துக்களையும் சமயங்கள் உருவாக்கியுள்ளன.

இவை பச்சாதாபம், திறந்த மனப்பான்மையுடன் பிறருக்கு அன்பு செலுத்துதல், கட்டுப்பாடில்லாத அகங்காரத்தையும் பொறாமையையும் அடக்குதல், மனித உரிமைகளை நடைமுறைப்படுத்தல், ஒருதலைப்பட்சமாக மன்னித்தலும் தாழ்மையும், கடந்த கால குற்றங்களுக்காக மனம்வருந்தி பொறுப்புக்களை நல்லிணக்கத்திற்கானதோர் அங்கமாக ஏற்றுக்கொள்ளல், உண்மையைக் கண்டறிவதற்கான தாகம், சமூக நீதிக்கான கடும் முயற்சிகள் ஆகியவற்றையும் உள்ளடக்கும்.

பல்வேறு விதமான அனுபவங்களையும் மனிதர்களின் கடந்தகால நடத்தைகளுடன் தொடர்புடையவைகளும் மதம் கொண்டுள்ளபடியால் நிலைமாற்றுக்கால நீதிப்பொறிமுறையில் மதம் முக்கிய இடத்தை வகிக்கின்றது.

இலங்கை மக்களுடைய வாழ்க்கையில் தொடர்ச்சியாக செல்வாக்குச் செலுத்தக்கூடிய வகிபாகத்தை சமயம் வகிக்கின்றது. உண்மையில், இது ஆரோக்கியமான அதிகார மூலத்தை வழங்குவதுடன், நிலைமாற்றுக்கால நீதிப்பொறிமுறைகள் அல்லது செயன்முறைகளின் பொழுது அகத்தூண்டலாகச் செயற்படக்கூடிய வல்லமை பொருந்தியதாகவும் இருக்கின்றது. இலங்கையில் நிலைமாற்றுக்கால நீதிக்கு கடும் அர்ப்பணிப்பு அவசியம். எனவே நிலைமாற்றுக்கால நீதி உபாயங்களை மேம்படுத்துகின்ற பொழுது சமயத்தினதும் சமயத் தலைவர்களினதும் ஈடுபாடு அவசியமாகும்.

## இவ் ஆய்வு பற்றிய விபரங்கள்

இலங்கையின் பிரதான மதங்களாக பௌத்தம், இந்து சமயம், இஸ்லாம், கிறிஸ்தவ சமயம் ஆகியவற்றின் கண்ணோட்டத்தில் நிலைமாற்றுக்கால நீதி தொடர்பான பிரதான கொள்கைகள், நடைமுறைகள் ஆகியவற்றைக் இவ்ஆய்வு கண்டாராய்கின்றது. சம்பவங்கள், வேதங்கள், கதைகள்

---

[1]பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கும் நீதியை வழங்குவதற்கும் நல்லிணக்கத்தை அடையும் முகமாகவும், கடந்த கால பாரிய துஷ்பிரயோகங்களைக் கருத்திற்கொண்டு முழுமையான செயன்முறைகளையும் பொறிமுறைகளையும் உள்ளடக்கிய சமூகத்தின் முயற்சி நிலைமாற்றுக்கால நீதி என வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது. இவற்றுள் நீதித்துறை சார்ந்த மற்றும் நீதித்துறை சாராத பொறிமுறைகள் உள்ளடக்கப்படலாம். தனிப்பட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தல், இழப்பீடுகளை வழங்கல், உண்மையைக் கண்டறிதல், நிறுவன ரீதியான மறுசீரமைப்பு, ஆய்வுகளுக்கு உதவுதல், பதவி நீக்கங்கள் அல்லது இவற்றோடு இணைந்த ஏனையவைகள் (ஐ.நா. செயலாளர் நாயகம் 2004). நிலைமாற்றுக்கால நீதி தொடர்பிலான மேலதி வரைவிலக்கணங்களை அறிந்துகொள்வதற்காக நிலைமாற்றுக்கால நீதிக்கான சர்வதேச நிலையத்துடன் தொடர்புகொள்ளவும். http://www.ictj.org/en/tj. இது தொடர்பிலான எண்ணக்கரு சார்ந்த வரலாறு மற்றும் இது தொடர்பிலான 40 மாற்றங்களில் எவ்வாறு இது பிரயோகிக்கப்பட்டது என்பதை அறிந்துகொள்ள (பார்க்க - Arthur, 2009, McAuliffe, 2011, Elster, 2004, Teitel, 2003). நிலைமாற்றுக்கால நீதி தொடர்பான கல்வி சார் ஆய்வு பற்றிய விபரங்களை அறிந்துகொள்வதற்கும் நிலைமாற்றுக்கால நீதி தரவு மையம் https://sites.google.com/site/transitionaljusticedatabase/transitional-justice-bibliographyஐப் பார்க்க.

[2]கடந்த காலத்தில் இடம்பெற்ற விபரங்கள் தொடர்பில் பூரணத்துவம் மிக்க அணுகுமுறையொன்றைப் பொறுப்பேற்றல், நீதித்துறை சார்ந்த மற்றும் நீதித்துறை சாராத நடைமுறைகளை முழு அளவில் கூட்டிணைப்பதற்கு இணங்குதல். இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல், மனித உரிமைகள் ஆகியவற்றை மேம்படுத்தல். பார்க்க - A/HRC/RES/30/1, 14 October 2015, 4 ஆம் பந்தி.

ஆகியவற்றினூடாக சமயங்களின் நிலைமாற்றுக்கால நீதி தொடர்பாக காணப்படுகின்ற உறுதியான அடிப்படைகள் இங்கு வலியுறுத்தப்படுகின்றன. இலங்கையில் நிலைமாற்றுக்கால நீதி தொடர்பிலும் அதனை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவது தொடர்பிலும் சிறப்பான புரிதல்களை ஏற்படுத்துவதற்கு சமயங்கள் மற்றும் சமயத் தலைவர்கள் வழங்கக்கூடிய பங்களிப்புகள் பற்றி இங்கு ஆராயப்படுகின்றனக.

நிலைமாற்றுக்கால நீதி தொடர்பில் சமயங்களின் வகிபாகங்கள் பற்றிய பல்வேறு விதமான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இருப்பினும், அவை பொதுவான அல்லது பிரபல்யமான கருத்துகள், மக்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், புள்ளிவிபரங்கள் ஆகியவற்றை மையமாகக் கொண்டிருப்பதுடன், ஆபிரகாமின் சமய மரபுகளைப் கொண்டுள்ள லத்தின் அமெரிக்கா, தென்னாபிரிக்க நாடுகள் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளை பின்னனியாக கொண்டவை. இலங்கையில் காணப்படுகின்ற பிரதான சமய கண்ணோட்டங்களை அடிப்படையாகக் கொண்டு நிலைமாற்றுக்கால நீதியின் முக்கிய தூண்களை கலந்துரையாடுவதன் காரணமாக இவ் ஆய்வு தனித்துவம் மிக்கதாகத் திகழ்கின்றது. முரண்பட்ட சூழ்நிலையிலிருந்து சமாதானமான சமூகத்தை நோக்கிப் பயணிக்கின்ற பொழுது ஒரு நிலை மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு சமயம் மற்றும் சமயத் தலைவர்களுடைய பங்களிப்புகள் அவசியம் என்பதே கருத்திற்கொள்ளக்கூடிய முக்கிய விடயமாகும். இவ்விவாதத்தின் அடிப்படையில் இவ்ஆய்வு முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது.

## நிறைவேற்றுச் சுருக்கம்

நான்கு மதங்களைக் கருத்திற்கொண்டு இவ் அறிக்கையானது நான்கு அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து முடிவுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

அத்தியாயம் 1 ஆனது, நிலைமாற்றுக்கால நீதியை பௌத்த கண்ணோட்டத்தில் ஆராய்கிறது. நபர்களுக்கிடையிலான நல்லிணக்கம் மற்றும் ஒருவருடைய செயற்பாட்டிற்கு தானே பொறுப்புக் கூறல் ஆகியவற்றுக்கு அடித்தளமாக அமைகின்ற கம்மா, கருணா (கருணை),மெத்தா (அன்பு)ஆகிய பௌத்த எண்ணக்கருக்களின் அடிப்படையில் இவ் அத்தியாயம் தனது அவதானத்தைச் செலுத்துகின்றது. பௌத்த ஒழுக்காற்று விதிமுறைகள் (வினையபிட்டக) மற்றும் புத்தரின் சொல்லாடல்கள் (சுத்தபிட்டக) ஆகியவற்றினடிப்படையில் நல்லிணக்கம் தொடர்பான எண்ணக்கருக்கள் மற்றும் அதனோடு தொடர்புடைய அம்சங்கள் ஆகியன இங்கு ஆராயப்படுகின்றன.

அத்தியாயம் 2 ஆனது. இந்துமதக் கண்ணோட்டத்தின் அடிப்படையில் உண்மை மற்றும் பிராணி ஆகியவற்றை ஆராய்கின்றது. உண்மையை வெளிப்படுத்துவது பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கும், தர்மத்தின் பிரகாரம் ஒருவருடைய நடத்தைக்குக் காரணமாகவும் அமைகின்றது எனவும் இங்கு விவாதிக்கப்படுகின்றது. உண்மையை நிலைநிறுத்துவதற்கு அவசியமான நோக்கங்களை நிறைவேற்றக்கூடிய விதத்தில் நிலைமாற்றுக்கால நீதியை ஒரு பாதையாக (தர்மமாக) சமர்ப்பிப்பது சமயத் தலைவர்களின் வகிபாகமாகும். அத்துடன், தன்னுடனும், கடவுளுடனும், ஏனையவர்களுடனும் இருக்கும் தொடர்புகளை புரிந்துக்கொள்வதன் மூலம் நீதியைத் தேடுகின்ற அன்பின் அடிப்படையிலான பயணமானது சாதகமானதாகவும் ஆக்கபூர்வமானதாகவும் அமையும்.

அத்தியாயம் 3 ஆனது. இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் நீதி பற்றிய எண்ணக்கரு பற்றி ஆராய்கிறது. இஸ்லாம் ஒரு சமாதான மதமென இங்கு வலியுறுத்தப்படுவதுடன், சரியாச் சட்டத்தின் கீழ் தகுந்த தண்டனை, மறுசீரமைப்புகள் மற்றும் நல்லிணக்கம் ஆகிய முக்கிய அம்சங்களை ஆராய்ந்து நிலைமாற்றுக்கால நீதிக்காக இஸ்லாமிய சட்ட அடிப்படைகள் தொடர்பில் இவ் அத்தியாயத்தில் ஆராயப்படுகின்றன. முக்கிய பெறுமானங்கள் மற்றும் சகல நல்லொழுக்கங்களின் அடிப்படையாக சமாதானம் மற்றும் நீதித்துறை சார்பான சகலவிதமான இஸ்லாமியச் சொல்லாடல்களிலும் நீதி ஒரு பிரிக்க முடியாத அங்கமாக காணப்படுவதாக இவ் அத்தியாயத்தில் விவாதிக்கப்படுகிறது. குர்ரானில் நீதி என்றால் என்ன என்பது பற்றி மட்டும் குறிப்பிடப்பட்டு நிறுத்தாமல் ஒருவர் வணக்கத்தில் ஈடுபடுவதற்கும் நீதியுடையவராகவிருத்தல் வேண்டுமென்றும் குறிப்பிடப்படுகிறது. மனிதர்கள் என்ற முறையில் நீதி தொடர்பில் எமது பொறுப்புக்கள் பற்றியும் இங்கு வலியுறுத்தப்பட்டுள்ளன.

அத்தியாயம் 4 ஆனது, இல் நல்லிணக்க எண்ணக்கரு தொடர்பில் கிறிஸ்தவ மதக் கண்ணோட்டத்தில் ஆராய்கிறது. இங்கு நல்லிணக்கம் கிறிஸ்தவ நற்செய்தியின் மையம் எனவும் நல்லிணக்கத்தைப் முன்னெடுக்கும் முயற்சிகளில் இரண்டு முக்கிய படிகளான நீதி மற்றும் உண்மையை கண்டறிவதற்கான தீர்க்கதரிசன அழைப்புகள் பற்றி இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் வெளிக்கொண்டுவருதல் குணப்படுத்தலுக்கும் - நல்லிணக்கம் குணப்படுத்தலுக்கும் காரணமாகும் எனவும் கூறுகிறது. நீதியும் நல்லிணக்கமும் ஒன்றுடனொன்று பிரிக்க முடியாதவை என இங்கு குறிப்பிடப்படுவதுடன், நல்லிணக்கம் தொடர்பான நற்செய்தி மறைக் கல்வி மற்றும் மத ரீதியான நம்பிக்கைகளை உருவாக்குதல் ஆகியவற்றில் முக்கிய இடத்தினை வகிக்கின்றது.

கல்வியயலாளர்களும், நிலைமாற்றுக்கால நீதி தொடர்பான செயற்பாட்டாளர்களும் மற்றும் இலங்கை அரசாங்கமும் இலங்கையில் நிலைமாற்றுக்கால நீதியை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் முக்கிய பங்காளர்களாக சமயத்தையும் சமயத் தலைவர்களையும் பரிசீலித்தல் வேண்டுமென இறுதியாக அழைப்பு விடுக்கப்படுகின்றது.

# முதல் அத்தியாயத்தின்; சிறு விமர்சனம்

**கலாநி சுனில் விஜயசிரிவர்தன**
**விரிவுரையாளர்**
**கொழும்பு பல்கலைக்கழகம் மற்றும் களனி பல்கலைக்கழகம்**

போருக்கு பிந்தைய காலகட்டத்தில் இலங்கையானது எதிர்கொள்ளும் அடிப்படை சவால்களுள் ஒன்றானது, அதிசசிகரமான சமூக பேரழிவில் இருந்து எவ்வாறு மீண்டு வருவதுடன், சமாதானம் மற்றும் நல்லிணக்கம் என்பனவற்றை அடையும் பாதையை கண்டறிவதும் ஆகும். இச்சவாலை எதிர்கொள்ள கட்டமைப்பு (அரசியல் மற்றும் ஆழ்ந்த சமூக கட்டமைப்புக்கள்) மற்றும் கலாச்சார ரீதியான எனத்தெந்தப் பரிமாணங்கள் வன்முறையுடன் கூடிய முரன்பாற்றிக்கு இட்டுச்சென்றதென ஆராய்ந்து அப்பரிமாணங்களில் நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்தல் வேண்டும். இம்மாற்றத்திற்கு தயாராகும் போது அதன் பின்னணியில் நிலைமாற்றுக்கால நீதி பொறிமுறைகளை உள்ளடக்குவது மிக முக்கியமானதாக கருதப்படுகின்றது.

எமது மத ரீதியான மரபுகளிலிருந்து அறிவுசார் மற்றும் ஆன்மிகம்சார் வளங்களை கண்டறிந்து அதனை இக்கலக்கடத்தின் தேவைக்கு ஏற்ப பயன்படுத்துவது பாராட்டத்தக்க விடயமாகும்.

பின்வருவது, பௌத்த தத்துவத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட படிப்பின் ஒரு சிறய திறனாய்வுடனான விமர்சனமாகும்.

இந்த ஆய்வறிக்கையை வாசிக்க எனக்கு கிடைத்த வாய்ப்பை நான் மனதிற்குகந்த அனுபவமாக கருதுவது குறிப்பிடத்தக்கவிடயமாகும். இவ்வத்தியாயமானது எட்டு தலைப்புகளுக்கு கீழ் ஆராயப்பட்டுள்ளது. அவையாவன; பௌத்த சமயத்தில் நீதிக்கான அடித்தளம், நீதித்துறை சார்ந்த பொறுப்புகள், நல்லிணக்கம் தொடர்பில் பௌத்த அணுகுமுறைகள், பழி கூறுவதை நேர்மையாக ஏற்றுக்கொள்ளல், நல்லிணக்கத்தை வலுப்படுத்துகின்ற கலாசார ரீதியான விழுமியங்கள், உண்மை, கம்மா, நலன் மீட்பு நீதி, தனிப்பட்ட பொறுப்புகள் - மனப்பாங்கு ரீதியான மாற்றம்.

பௌத்த மாதகுருமார்களுக்கான பிட்டாக மற்றும் ஒழுக்கம்சார் கோட்பாடுகள் இங்கு விரிவான முறையில் ஆராயப்பட்டுள்ளது. மேலும், பௌத்த அறிவுவாற்றல் மிகுந்தவர்களின் கருத்துக்களும் இங்கு உள்ளடப்பட்டுள்ளது சிறந்த விடயமாகும்.

கல்விசார் கண்ணோட்டத்தில் நோக்குகின்ற போது இவ்வத்தியாயமானது பௌத்த மதம் மற்றும் நிலைமாற்றுக்கால நீதியின் முழுமையான ஆய்வுப்பயணம் என ஐயமின்றி குறிப்பிடலாம்.

தன்னைப்போலவே அனைத்து மனிதர்களை நோக்குவது, அணைத்து மனிதர்களும் உயிரியலின் அடிப்படையில் ஒன்று என்பது போன்ற புத்த பெருமானின் கருத்துக்கள் இங்கு சிறப்பம்சமாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆய்வாளர் இது தொர்பாகசமூகத்தில் காணப்படும் தடைகளைப் பற்றி கவனத்துடன் தனது ஆய்வுகள் மேற்கொண்டது இவ்வாத்தியத்திற்கு மெருகூட்டியுள்ளது.

போர் மற்றும் முரண்பாடான சூழ்நிலைகளில் இவ்வாய்வானது புத்த பெருமான் எவ்வாறு, சமூக எதிர்ப்புக்கள் மற்றும் உள-சமூக பிரச்சனைகள் இருந்து முரண்படுகின்றவர்களை சரியான பாதையில் வழிநடத்தவேண்டும்மென தெரிவித்த கருத்துக்களை துல்லியமாக தேவையானவளவு ஆராய்ந்துள்ளது.

பௌத்த பிக்குகளின் நீதியான நிறுவனப்பொறிமுறைக்கள் பற்றி கருத்திற்கொண்டு ஆய்வாளர் போருக்கு பிந்தைய சமூகத்தில் ஸ்தாபிக்கவேண்டிய சரியான சட்ட மற்றும் நீதித்துறை அடித்தளங்களைப் பற்றி விளக்கியுள்ளார். இந்த நிறுவனசார் பொறிமுறைகளை மட்டுமல்லாது தனிமனிதனுக்கும் சமூகத்திற்கும் இவ்வறிக்கை கலாசார மற்றும் ஆன்மீக விழுமிடங்களின்கள் பற்றி தெளிவுபடுத்துகிறது.

இந்த பௌத்த பகுப்பாய்வு உண்மை, கர்மா மேட்டரும் ஐந்து கட்டளைகள் என்பவற்றின் பௌத்த பகுப்பாய்வு நீதி மற்றும் அதனை ஸ்தாபித்தல் தொடர்பான தெளிவான விளக்கத்தை தருகின்றது. பௌத்த அடிப்படையில் குற்றம் மற்றும் தண்டனை என்பன இவ்வத்தியாயத்தின் முழுவதுமாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது சிறப்பம்சமாகும்.

இந்த சமூகத்திதில் அதிகமாக பிரச்சனைகளும் சூழ்நிலைகளும் காணப்படுமிடத்து, பௌத்த கோட்பாடானது குற்றமிழைத்தவருக்கு எதிராக தீர்ப்பளிப்பதும் அவரை தண்டிப்பதும் சிறுபிள்ளைத்தனமானது என கருதுகின்றது.

எனவே, அவ்வகையான நடத்தையினை விளங்கிக்கொள்வதுடன் நடத்தைகளுக்கான அடிப்படை காரணத்தினை கண்டறிந்து தார்மீக மற்றும் சமூக முயற்சிகளின் அடிப்படையில் கூட்டுப்பொறுப்புக்கூறலினை ஊக்குவிக்கவேண்டும். இறுதியாக போருக்கு பிந்தைய சவால்களை எதிர்கொள்கின்ற போது மிகவும் எளிதான முறையில், பகுதியான மற்றும் குறுகியகால தீர்மானங்களை மேற்கொள்ளாமல், பௌத்த மதம் கூறுவது போல் அணுகுமுறை சரிந்த ஒரு மாற்றத்தினை மூலம் நிரந்தரமான தீர்வையும், மனிதாபிமான சமூகத்தையும் கட்டியெழுப்பலாம்.

# அத்தியாயம் 1

## பௌத்தமும் நிலைமாற்றுக்கால நீதியும்

"இந்த உலகில் வெறுப்பை வெறுப்பினால் இல்லாதொழிக்க முடியாது;
அதனை அன்பினால் மாத்திரமே இல்லாதொழிக்க முடியும்;
இதுவே நித்திய சட்டமாகும்"
- *வசனம் 5, யமக்க வாகா (இரட்டை வசனம்) தம்மப்பத* -

### 1.1 அறிமுகம்

இவ் அத்தியாயத்தில் பௌத்த ஒழுக்காற்று விதிமுறைகள் மற்றும் புத்தரின் சொல்லாடல்களுக்கு அமைய கௌதம புத்தா் அவா்களது போதனைகள் எவ்வாறு நவீன நிலைமாற்றுக்கால நீதிக்கு பங்களிப்பு செய்கின்றது என்பது தொடா்பில் ஆராயப்படுகின்றது. அதுமட்டுமின்றி, சமத்துவம், நல்லிணக்கம், கடந்த கால நடவடிக்கைகள், உண்மையைக் கண்டறிதல், அன்பு, கருணை போன்றவற்றின் அடிப்படையில் சமூக நல்லிணக்கத்திற்கும்[3] முரண்பாடுகளற்ற தன்மையையும் தோற்றுவிக்கக்கூடிய கொள்கைகள் ஆகியவற்றினடிப்படையில் நீதி தொடா்பான எண்ணக்கரு எந்தளவிற்கு முக்கியம் என்பது பற்றி இங்கு ஆராயப்படுகிறது. நிலைமாற்றுக்கால நீதியின் தூண்களில் ஒன்றான மீள் நிகழாமை "விநாய பிட்டக" இன் அடிப்படை விதிகளுடன் நெருங்கிய தொடா்பை கொண்டுள்ளதும் இங்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

### 1.2 பௌத்த சமயத்தில் நீதிக்கான அடித்தளம்

மனிதர்களுக்கிடையான சமத்துவம் நீதிக்கான அவசியமான முன்நிபந்தனை ஆகும். புத்தர் அவர்கள், பிறப்பினடிப்படையில் பிரித்துவைப்பதையோ அல்லது பாரபட்சம் காட்டுவதையோ முற்றுலும் நிராகரித்து தம்மாவின் அடிப்படையில் அல்லது ஒழுக்கம் சாா்ந்த நடத்தையின் அடிப்படையில் மனிதா்களின் அந்தஸ்த்து மதிப்பீடு செய்யப்படல் வேண்டும் என குறிப்பிட்டுள்ளாா். வஸ்த்தா சுட்டாவில் புத்தா் அவா்கள் வரலாறு, உயிரியல், உளவியல் மற்றும் ஒழுக்கம் என்பவற்றின் அடிப்படையில் சகல மனிதா்களும் ஒரே குலத்தைச் சோ்ந்தவா்கள் எனவும் குறிப்பிடுகின்றாா்.[4]

"ஒருவா் பிறப்பினால் பிராமணா் ஆவதில்லை,
பிறப்பினால் பிராமணா் அல்லாதவராவதுமில்லை,
தனது செயலினாலேயே ஒருவா் பிராமணாகின்றாா்,
தனது செயலினாலேயே ஒருவா் பிரமணரல்லாதவருமாகின்றாா்."

ஆகவே பௌத்த விழுமியத்துக்கமைய சகல மனிதர்களும் சமமானவர்கள் ஒருவருக்கு நிகராக மற்றவர் நடத்தப்பட வேண்டியது அடிப்படை கொள்கையாகும்.

### 1.3 நீதித்துறை சாா்ந்த பொறுப்புகள்

ஜனநாயக ஆட்சியின் மூன்று தூண்களுள் ஒன்றாக, நீதித்துறை சார்ந்த தீா்மானங்கள் கருதப்படுகின்றன. இத் தீா்மானங்கள் இறுதித் தீா்ப்பாகவும், இத் தீா்ப்புக்கள் சட்டமாகவும் மாறுகின்றன. எனவே, எந்தவொரு தனிமனிதனின் பார்வையிலும் நீதித்துறை சார்ந்த சேவை அதி உயர் பொறுப்புக்களில் ஒன்றாக கருதப்படுகின்றது. மேலும், சட்டத்தைப் பாதுகாக்கின்ற பாதுகாவலா்கள் சட்டத்திற்கு அடிபணிந்து நடக்கின்ற அதேவேளை, சட்டத்திற்கு ஏற்பவும் பக்கச்சாா்பற்றவா்களாகவும் நடந்துகொள்ள வேண்டியது அவசியமானதாகும். தம்மபதவின் ஓா் பிரிவான தம்மட்டவாகாவில் புத்தா், "ஒரு மனிதன் வெறுமனே வழக்குகளை வேகமாகவும் சரியான கவனமற்றும் விசாரிப்பதால் நீதிபதியாவதில்லை. ஒரு ஞானமுள்ள நீதிபதி தீர விசாரித்து அவரது தீர்ப்பினை பக்கசார்பற்று வழங்குவர்" எனக் குறிப்பிட்டுள்ளாா் (வாசகம் 256, தம்மாதா வாகா). மேலும், அரசன் ஒருவன் தனது நீதித்துறை சாா்ந்த கடமைகளில் ஈடுபடுகின்ற

[3] சிங்களத்தில் நல்லிணக்கத்தை குணப்படுத்தல் எனவும் அழைக்கலாம் (சுவபத் வீம). இங்கு உடல் ரீதியான காரணிகளை விட உள ரீதியான காரணிகளுக்கே முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது – வண. கல்கந்த தம்மானந்த தேரருடனான கலந்துரையாடல்.

[4] வண. வல்ஸ்வெவ ஞானரத்தின தேரருடனான கலந்துரையாடல் (புத்தரின் விதமான சொல்லாடல்கள், பக்கம் 798)

பொழுது அந்த அரசன் கோபப்படக்கூடாது, இரண்டு தரப்பினரையும் சமமாக செவிமடுத்தல் வேண்டும், இரண்டு தரப்பினருடைய விவாதங்களை நன்கு செவிமடுத்ததன் பின்னர், எவ்வித பக்கச்சார்புமின்றி, வெறுப்போ, அச்சமோ, மடமையோ அற்ற நிலையில் தனது தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டுமென தேசகுண ஜாதக விளக்குகின்றது.

மனித நடத்தைகளின் ஒவ்வொரு அம்சம் பற்றியும் நீதித்துறைப் பொறுப்புகளை சமத்துவமாகவும் மனிதாபிமான அடிப்படையிலும் புரிதலுடனும் நிறைவேற்றுவது தொடர்பான வழிகாட்டிகளை புனித எட்டு பாதைகள் தன்னகத்தே கொண்டுள்ளது. இதன் அடிப்படையில், சரியான புரிதல் என்பது விடயங்களை உள்ளவாறே நோக்குவதாகும். அவற்றை, நாம் எவ்விதம் பார்க்க நினைக்கின்றோமோ அதனடிப்படையில் நோக்குவதல்ல. இப்புரிதலானது பற்றின்மை மற்றும் ஊக்கம் ஆகிய எண்ணக்கருக்களுடன் தொடர்புடையதாக காணப்படுகிறது. அன்பான சிந்தனைகள், பாதிக்கப்பட்டவர்களை மற்றும் பிரச்சினைகளை ஏற்றப்படுத்துபவர்களை நோக்கியதாக இருப்பதுடன், அவர்களை நல்வழியில் இட்டுச்செல்வதாகவும் இருக்க இருக்கின்றது. மேலும், சரியான சிந்தனை எனும் பொழுது, எண்ணம் தூய்மையானதாகவும் தீய சிந்தனைகளற்றதாகவும் கொடூரமற்றதாகவும், பக்கச்சார்பு, கோபம், பொறாமைகள் மற்றும் பகைமை ஆகியன அற்றதாகவும் இருத்தல அவசியமானதாக கருதப்படுகின்றது. நீதிபதியின் அடிப்படைக் கடமை சரியான மற்றும் பக்கச்சார்பற்ற பேச்சாகும். இதற்கிணங்க, அவர் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் உண்மைக்கு அடிபணிந்து நடப்பதுதான், அச்சத்தின் காரணமாக பொய் உரைப்பவராகவிருத்தல் கூடாது. இதுமட்டுமன்றி, சுய ஆக்கிரமிப்புகள் மற்றும் நிதி ரீதியான நன்மைகள பெறுபவராக, அமைதியீனத்தை ஏற்படுத்துபவராக அல்லது வெறுப்பினைத் தூண்டுபவராக இருத்தல் கூடாது. எனவே, நீதிபதியினது சரியான செயல் என்பது, சரியான நேரத்தில் அர்ப்பணிப்புடையவராகவும் நீதித்துறைக் கோட்பாடுகளுக்கு ஏற்ப எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நடந்துகொள்பவராகவும், சரியான வாழ்வாதாரம் என்பது, நேர்மையாகவும் நியாயமாகவும் அவதூறுகள் அற்றநிலையில், நேர்மையாக தனது வாழ்வாதாரத்தை ஈட்டக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும. இதற்குமேலாதிகமாக, சட்டத்தையும் உண்மையான விடயங்களையும் நன்கு ஆராய்ந்து கிரகிக்கக் கூடியவராக நீதிபதி இருப்பது அடிப்படையாகும்.

மேலும், அவரது சரியான முயற்சி, என்பது உண்மை, சட்டம் போன்றவற்றைக் கற்பதற்காக மேற்கொள்ளப்படும் முயற்சிகள் மற்றும் ஒரு செயல் இலக்கை அதன் இறுதிவரை கண்டறிவதற்கான துணிவு ஆகியவற்றை உள்ளடக்கியிருப்பதுடன், இம்முயற்சியானது நேர்மையான சிந்தனையுடன் நெருங்கிய தொடர்புடையது. இதனுடன், நேர்த்தியான அல்லது சரியான கிரகித்தல் என்பதை ஒற்றுமை, இணங்குதல், ஒவ்வொரு கனப்பொழுதிலும் அமைதியாகவிருத்தல், எதிர்மறையான உணர்வுகளைப் புரிந்துகொள்ளல், வெறுப்பற்றவராகவிருத்தல் எனக்கருதப்படுகின்றது. இவற்றுக்கமைய உண்மையான நம்பிக்கையின் அடிப்படையில் தனது கடமைகளை நிறைவேற்றுவது இதன் அம்சமாகும். ஆகவே, நீதிபதியானவர் இருதரப்பினருக்கு மத்தியிலான முரண்பாடுகள் தொடர்பில் தீர்மானங்களை எடுப்பவராக மட்டுமல்லாது இத்தீர்மானங்கள் எதிர்காலத்தில் தாக்கத்தை விளைவிப்பதால் எதிர்காலத்திற்கான முன்னுதாரணமாக அமையுமாறும் தீர்மானத்தை எடுக்க வேண்டும்.

## 1.4 நல்லிணக்கம் தொடர்பில் பௌத்த அணுகுமுறைகள்

மன்னர்களுக்கிடையில் ஏற்பட்ட பல்வேறு விதமான முரண்பாடுகள் தொடர்பில் பாளி நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், புத்தரின் உறவினர்களுக்கு மத்தியிலும் அவர்களது அமைச்சினுள்ளும் ஏற்பட்ட முரண்பாடுகள் பற்றியும் இதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மாறுபட்ட சூழ்நிலைக்கும் மாறுபட்ட பங்கீடுபாட்டாளர்களுக்கும் ஏற்றவிதத்தில் மாறுபட்ட அணுகுமுறைகளை புத்தர் பிரயோகித்துள்ளார். உதாரணமாக, ரோஹினி ஆற்றின் நீரைத் தமக்குள் பகிர்ந்துகொள்ளும் முகமாக புத்தரின் உறவினர்களான சக்கியாஸ் மற்றும் கோலியாஸ் ஆகியோர் யுத்தத்திற்காக அணிதிரண்ட பொழுது புத்தர் இதில் தலையிட்டு யுத்தத்தை முடிவுறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார். அச்சந்தர்ப்பத்தில் அவர் முக்கியமான ஒன்றை வினவினார், அதாவது, தண்ணீர் மற்றும் மனித உயிரின் மதிப்பு என்ன? மேலும், யுத்தத்திற்குப் பின்னரான அழிவுகளையும் அதன் பயனற்ற தன்மைகள் பற்றியும் புத்தர் எடுத்துரைத்தார். அந்த இரு தரப்பினர் மத்தியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தியதுடன் எவ்வித வெறுப்போ அல்லது பகைமையோ இன்றி எவ்வாறு வாழ்வதென அவர்களுக்குக் கற்றுக்கொடுத்தார்.
தம்மபதவில் காணப்படுகின்ற இந்த வரிகள் பொறுமை மற்றும் சமாதான சகவாழ்வு ஆகியன பற்றி எடுத்துரைக்கின்றது.

"இந்த உலகில் வெறுப்பை வெறுப்பினால் இல்லாதொழிக்க முடியாது;
இதனை அன்பினால் மாத்திரமே இல்லாதொழிக்க முடியும்;
இதுவே நித்திய சட்டமாகும்"

\- *வசனம் 5, யமக்க வாகா (இரட்டை வசனம்) தம்மப்பத* -

"யுத்தத்தில் நாம் அழிந்துவிடுவோம் என்பதை சிலா் உணா்ந்துகொள்வதில்லை; யாா் இதனை உணா்ந்துகொள்கின்றாா்களோ அவா்கள் தமது யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவாா்கள்"
- வசனம் 6, யம்மக்க வாகா (இரட்டை வசனங்கள்), தம்மப்பத -

"வெறுக்கிறவா்களுக்கு மத்தியில் வெறுப்பற்றவா்களாக மகிழ்ச்சியுடன் நாம் வாழ்வோம்; வெறுப்புடன் வாழ்கின்றவா்களுக்கு மத்தியில் வெறுப்பற்றவா்களாக நாம் வாழ்வோம்"

- வசனம் 197, சுகாஹ வாகா (மகிழ்ச்சி), தம்மப்பத -

மேலும், தனது சொந்த மருமகன் அஜாதசத்தூவினால் 3 முறை தோற்கடிக்கப்பட்ட பசனதி கோசல என்ற அரசன் மிகவும் கவலையுற்றவனாகக் காணப்பட்டவேளையில் யுத்தத்தினாலும் தோற்கடிப்பதனாலும் ஏற்படுகின்ற பயனற்ற தன்மைகள் பற்றி புத்தா் விளக்கமளித்தாா்.

"வெற்றியானது வெற்றிகொண்டவா் மீது வெறுப்பினை ஏற்படுத்துகின்றது. தோல்வியடைந்தவா் துன்பத்துடன் வாழுகின்றாா்.
வெற்றி, தோல்வி ஆகிய இரண்டையும் கைவிடுகின்றவா்கள் அமைதியாக வாழ்கின்றாா்கள்"
- வசனம் 201, சுகாஹ வாகா (மகிழ்ச்சி), தம்மபத -

இதன் அடிப்படையில், வெற்றியின் பின்னா் தோல்வியடைந்தவா்களுக்கு உதவுவதும் அவா்களது துன்பங்களை களைந்தெறிவதும் வெற்றி பெற்றவா்களுடைய தாா்மீகப் பொறுப்பாகவிருக்கின்றது. வெற்றி பெற்றவர்களையும் தோற்கடிக்கப்பட்டவா்களையும் சமூகத்தின் இரு கூறுகளாக நாம் வைத்திருக்கின்ற பொழுது, வெறுப்பினையும் கோபத்தையும் தொடா்ந்தும் வைத்திருப்பவா்களாகவே நாம் இருக்கின்றோம். ஆகையால்,பயங்கரவாதியாகவிருப்பினும் அல்லது அரசாங்கமாகவிருப்பினும், தத்தமது எதிராளிகளை உண்மையின் ஓா் அங்கமாக நாம் நோக்குவதன் மூலம் சமாதானத்தை ஏற்படுத்த முடிவதுடன், இதனால் தீா்வின் ஒரு அங்கமாக எதிர்தரப்பினரை பார்க்கலாம் (ஆரியரத்ன அவா்களது தலைமை உரை).

மதத் தலைவர்கள் அல்லது துறவிகள் எவ்வாறு தமது குற்றங்களை ஒப்புக்கொள்ள வேண்டும், நீண்டகாலப் பிரச்சினைகளை எவ்வாறு தீா்ப்பது, ஒருவருக்கும் மற்றொருவருக்கும் இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது, சங்காவில் காணப்படுகின்ற பிளவுகளை எவ்வாறு சாந்தப்படுத்துவது போன்றன தொடா்பிலான முறைகளும் அறிவுறுத்தல்களும் திருபீடகத்தின் விநயபிட்டகாவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விநயபிட்டக்காவில் கம்மக்கஹந்தகவானது ஐந்து மாறுபட்ட கம்மக்களை அல்லது துறவி மடங்களைச் சோ்ந்த உறுப்பினா்கள் நிந்திக்கக் கூடிய விதத்தில் நடந்துகொள்கின்ற பொழுது எவ்வாறு தண்டனை வழங்கப்பட வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது (திரிசேகர 2004, பக்கம் 224 முதல் 235 வரை). இவற்றுள் ஒன்றான,

**பட்டிசரணிய கம்ம –** நல்லிணக்கச் செயற்பாடு, இதன் பொழுது குற்றம் இழைத்தவா் பாதிக்கப்பட்டவரிடம் மன்னிப்புக் கோர வேண்டும். இதனை மதகுருமாா் தொடா்பில் நோக்குகையில், அவா்களது நடத்தை காரணமாக சாதாரண மனிதன் பாதிக்கப்படுவதும், ஒரு பௌத்த பிக்கு புத்த, தம்ம, சங்க ஆகியவற்றையும் துஷ்பிரயோகம் செய்வதுமாகும்.

துறவி மடங்களில் மேற்கொள்ளக்கூடிய மாறுபட்ட ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடா்பிலான சட்டம் பற்றி காண்டகசின் சமதக்கஹந்தகவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இச்சட்டத்துடன் மேலதிகமாக, வழக்குகளைத் தீா்த்து வைக்கின்ற 7 முறைகளான மோதல், ஞாபகத்தின் பிரகாரம்,கடந்தகால ஆரோக்கியமற்ற நிலைமை, ஏற்றுக்கொள்ளல், பெரும்பாண்மை அபிப்பிராயம், மோசமான நடத்தையை எடுத்துரைத்தல், புற்களினால் மூடப்பட்ட நிலைமை (இது பற்றி கீழே விபரிக்கப்பட்டுள்ளது) ஆகியனவும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. (பிக்கு போதி, பக்கம் 853 முதல் 860 வரை).

புற்களினால் மூடப்பட்டுள்ள நிலைமை எனப்படும் பொழுது இதுவோா் இதுவோர் உவமையாக இங்கு பிரயோகிக்கப்பட்டுள்ளது. இதனை 'தின்னவதாரக' எனக்குறிப்பிடுவா். அதாவது, மண்ணில் புதைக்கப்பட்ட சாணம் அல்லது கழிவானது மண்ணின் ஓா் அங்கமாக மாறி இறுதியில் அதன் மேல் புல் வளா்ந்து அது புற்களினால் மூடப்பட்டதொரு இடமாகிறது. அதேபோல், குற்றமிழைத்த இரண்டு தரப்பினரும் தமது குற்றங்களை ஒப்புக்கொள்கின்ற போது ஒருவா் மற்றொருவா் மீது இழைத்த சிறிய குற்றங்கள் பற்றிய விடயங்களுடன் மீள குற்றம் சாடுவதில்லை என வாக்குறுதியளிக்கின்றனா். இதன் காரணமாக தமது பிரதான குற்றங்கள் மீது அக்கறை செலுத்துவதற்கான வாய்ப்புகள் கிடைக்கின்றன. அதாவது, பிரச்சினைக்குக் காரணமான அல்லது அதனை அதிகரிக்கச் செய்த விடயங்கள் மீது கவனத்தைச் செலுத்துவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கின்றன. இதன் காரணமாக மேலதிக புலனாய்வுகள் மேற்கொள்ளப்படாததுடன், எந்தத் தரப்பும் தண்டனைக்குள்ளாக்கப்படுதோ அல்லது அவற்றின் மீது குறைகூறப்படுவதோ இல்லை. எனவே, இவர்களுக்கிடையில் ஓர் நட்பு மலர்கின்றது. இதுவே

அவ்வுவமையின் விளக்கமாகும் (அஜான் பிராமாவங்சோ 2011). மேலும், இக் கொள்கை இலங்கைச் சூழமைவில் நல்லிணக்கத்துடன் நெருங்கிய தொடர்புடையதாக காணப்படுகின்றது[5].

துறவிகள் மடத்தின் இசைவினைப் பாதுகாப்பதற்கு அவசியமான ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பான முயற்சிகள் பற்றிய விடயங்கள் 'தினவட்டகாரக' வில் குறிப்பிடப்பட்டுள்ளன. அதாவது சங்கவில் முரண்படுகின்ற தரப்பினர்களுடைய இருப்பினை ஏற்றுக்கொள்கின்ற அதேவேளை, தமது பிரிவு சார்ந்த வேற்றுமைகளுக்கு ஏற்ப அவற்றில் ஏற்படக்கூடிய பிளவுகள் பற்றியும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளன. இதனடிப்படையில், குற்றங்களை ஒப்புக்கொள்ளல், மன்னிப்புக் கோருதல், எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு தீய நடவடிக்கைகளில் ஈடுபடாதிருத்தல், முரண்பட்ட தரப்பினர்கள் மத்தியில் ஒற்றுமையைப் பேணிப் பாதுகாத்தல் போன்ற பரந்த நோக்கங்கள் தற்போதைய நல்லிணக்கச் செயற்பாடுகளுடன் இவை ஏற்புடைனவாகவும் பிரயோகிக்கப்படக்கூடியனவாகவும் காணப்படுகின்றன.

### 1.4.1 பழி கூறுவதை நேர்மையாக ஏற்றுக்கொள்ளல்

"தனது வரம்பு மீறிய செயலை வரம்பு மீறிய செயலாகப் பார்ப்பவர்,
தனது வரம்பு மீறிய செயலை ஒப்புக்கொண்டவரை முறையாக மற்றவர் மன்னிக்கின்ற பொழுது இவ் இருவரும் அறிவாளிகள்"

"தனது வரம்பு மீறிய செயலை வரம்பு மீறிய செயலாகக் கருதாதவர்,
தனது வரம்பு மீறிய செயல் தொடர்பில் ஒப்புக்கொண்டு மன்னிப்புக் கோருகின்றவரை முறையாக மன்னிக்காதவர்,
இவ் இருவரும் மடையர்கள்
- பால-பண்டித்த சுதா, அங்குத்தர நிகாய -

பழிச் செயலை ஏற்றுக்கொள்கின்ற முறையை ஒரு நேர்மையான விடயமாக புத்தர் அங்கீகரிப்பதுடன், மன்னிப்பு வழங்குதல் அறிவாளிகளின் தன்மையெனக் குறிப்பிட்டுள்ளார். மேலும், குற்றமிழைத்தவர் நல்லிணக்கத்தை வெற்றிக்கான பாதையாக பயன்படுத்துவது இங்கு ஊக்குவிக்கப்படுவதுடன், மற்றவர் மீது குற்றம் சுமத்துவது, பழி தீர்ப்பது, வெட்கப்படக்கூடிய நிலைமைகள், பல விடயங்களை இழத்தல் ஆகியவற்றை விட நல்லிணக்கம் சிறப்பானது எனவும் கருதப்படுகின்றது. உதாரணமாக, 'சமன்னபாஹல சுதா' வில் தனது தந்தையைக் கொலை செய்த அரசன் அஜாசது அதன் உண்மையான தாத்பரியத்தை உணர்ந்து குற்றத்தை ஒப்புக்கொண்ட பொழுது புத்தர் பின்வருமாறு குறிப்பிட்டார், "நீ உனது பழி தீர்த்தல் செயலை உணர்ந்து தம்மாவின் பிரகாரம் உன்னைத் திருத்திக்கொண்டுள்ளாய், உன்னுடைய குற்ற ஒப்புதலை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். ஒருவர் தம்மாவின் பிரகாரம் தன்மைத் திருத்திக்கொண்டு குற்ற ஒப்புதலை முன்வைக்கின்ற அதேவேளை, எதிர்காலத்தில் இவ்வாறு நடந்துகொள்ளமாட்டேன் என உறுதியளிக்கும் பட்சத்தில், இது தம்மாவின் அடிப்படையில் ஒரு வளர்ச்சிப் பாதையாக கருதுகின்ற அதேவேளை, ஒழுக்கமுள்ளவர்களாகவும் மாற்றுகின்றது" (சமன்பகல சுதா :திகாநிகாய சுதா 2). மறுபுறம், பௌத்த கொள்கையின் பிரகாரம் ஒருவர் பாவமொன்றை இழைக்கின்ற பொழுது அப்பாவத்திற்கு மன்னிப்பு இல்லை. இதன்பிரகாரம், ஒருவர் தான் இழைத்த பாவத்தை இல்லாதொழிக்க முடியாது, இருப்பினும் அதனைத் திருத்திக்கொள்வதுடன், ஒருவர் தனது குற்றங்களை உணர்ந்து அதனை நல்லிணக்கச் செயற்பாட்டின் ஒரு முக்கிய அங்கமாக ஏற்றுக்கொள்கின்ற பட்சத்தில், இந்நல்லிணக்கத்தை பெற ஆணைக்குழுக்கள் அல்லது வேறு ஏதாவது கட்டமைப்புகள் உதவியாயிருக்கும்.

## 1.5 நல்லிணக்கத்தை வலுப்படுத்துகின்ற கலாசார ரீதியான விழுமியங்கள்

நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற ஆவலை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு நேர்மையான, நிலைபேறான நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாதென வினைய முறைகள் குறிப்பிடுகின்றன. எனவே அடிப்படைக் காரணிகள் மீது பரஸ்பர புரிந்துணர்வு இருக்க வேண்டுமெனவும், எதிர்காலத்தில் இவ்வாறு நடந்துகொள்ளமாட்டோம் என்ற வாக்குறுதி வழங்கப்பட வேண்டுமெனவும் வினைய முறைகள் குறிப்பிடுகின்றன. இதனடிப்படையில், நல்லிணக்கத்திற்கு உதவுகின்ற கலாசார ரீதியான விழுமியங்கள் மற்றும் இத்தகைய செயன்முறைகளின் பொழுது ஏற்படக்கூடிய துஷ்பிரயோகங்கள் போன்றன பற்றி கீழே கலந்துரையாடப்பட்டுள்ளது (தனிஸ்ஸாரோ பிக்கு 2011; "மன்னிப்போம் மற்றும் மறப்போம்", 2013).

(அ) **சுய பிரதிபலிப்பு–** அடுத்தவர் இழைத்த பிழையான நடத்தைக்காக குற்றம் சுமத்துவதற்கு முன்னர், தம்மவின் அடிப்படையில் நேர்மையான முறையில் பொறுப்புள்ளவர்களாக சுய வெளிப்பாடுள்ளவர்களாகத் திகழ்வதுடன், அதனையடைய

[5] வெல்லஸ்வெவ ஞாசார தேரருடனான கலந்துரையாடல் (அஜகன் பிரஹ்மா வன்சோ 2011)

அவர் முன்மொழிந்த சரிபார்ப்பு பட்டியல் பின்வருமாறு, "அனைத்து ஒப்புரவாகத குற்றங்களில் இருந்தும் நான் விடுபட்டுள்ளேனா? பழி தீர்த்தலுக்குப் பதிலாக நான் அன்பினால் உந்தப்பட்டிருக்கின்றேனா? எமது பரஸ்பர தராதரங்கள் மீது தெளிவுடையவனாக நான் இருக்கின்றேனா? இவற்றுக்கு ஆம் என்ற பதில் கிடைக்கும் பட்சத்தில் சக மனிதர் தொடர்பான பிரச்சனைகளை பேச அவர்கள் தகுதியடைகின்றனர்.

(ஆ) **சரியான பேச்சு–** சரியான பேச்சு எனும் பொழுது, (பிரிவினையை ஏற்படுத்தக்கூடிய வார்த்தைகளைத் தவிர்த்தல்) உண்மையான வார்த்தைகளை மாத்திரம் கதைத்தல், அன்பினால் உருவான இசைவினை ஏற்படுத்தக்கூடிய மென்மையான வார்த்தைகளைப் பிரயோகித்தல எனப் பொருட்படும்.

(இ) **அகத்தூண்டல்** - இங்கு கூறப்படுகின்ற உந்துதலானது கருணை, சம்பந்தப்பட்ட சகல தரப்பினரதும் நலன்கள் தொடர்பில் அக்கறை செலுத்துதல், பிழையாக நடந்துகொண்டவர் புனர்வாழ்வளிக்கப்பட்டுள்ளார் என்பதற்கான விருப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை சரி, பிழை ஆகியவற்றுக்கிடையிலான உண்மையான நிலைப்பாட்டினை நேர்மையாகப் பேணுவதற்கான விருப்பம் ஆகியவற்றை உள்ளடக்கியதாக உந்துதல் இங்கு காணப்படுகிறது.

மேலும், கலாசார ரீதியான விழுமியங்கள் நல்லிணக்கத்திற்கு இட்டுச் செல்லக்கூடிய ஐந்து அறநெறி ரீதியான பொறுப்புக்களை உள்ளடக்கியதாகக் காணப்படுகிறது.

இவ் ஐந்து அறநெறி பொறுப்புக்களும், மக்கள் குற்றமிழைக்கும் பொழுது தம் மீது ஏற்றப்படுகின்ற பழியைத் தவிர்த்துக்கொள்ளும் உத்திகள் என நவீன சமூகவியலாளர்களால் இனங் காணப்பட்ட அடிப்படை உத்திகளும் ஒன்றுக்கொன்று முரணானவை. (தணிசாரோ பிக்கு, 2011).

| **உபாயம்** | **அறநெறிப் பொறுப்பு** |
|---|---|
| பொறுப்பினை மறுத்தல் | எமது சுய நினைவான தெரிவுகளுக்கு எப்பொழுதும் நாமே பொறுப்புதாரிகள் |
| உண்மையில் தீங்கு இழைக்கப்பட்டுள்ளது என்பதை மறுத்தல். | நாம் எப்போதும் எம்மை மற்றவருடைய நிலையிலிருந்து சிந்தித்தல் வேண்டும் |
| பாதிக்கப்பட்டவர் பெறுமதியானவர் என்பதை மறுத்தல். | எல்லா உயிரினங்களுக்கும் மதிப்பிற்கான அருகதையுண்டு |
| குற்றம் சுமத்தப்பட்டவரைத் தாக்குதல். | எமது குற்றங்களை மற்றவர்கள் சுட்டிக்காட்டுகின்ற பொழுது அவர்கள் உண்மையில் புதையல் ஒன்றையே சுட்டிக்காட்டுவதாக நாம் கருத வேண்டும் |
| உயரிய நோக்கமொன்றின் நிமித்தம் அவர்கள் செயற்படுகின்றனர் எனக்கோருதல். | ஒழுக்கம் சார்ந்த நடத்தைகளின் அடிப்படைப் பண்புகளை மீறுகின்ற செயலை மன்னிக்கின்ற எவ்விதமான உயரிய நோக்கமும் இருக்க முடியாது. |

மேல் கூறப்பட்ட ஐந்து நெறிமுறை கடமைகள், பரந்தளவில் புத்தரின் அடிப்படை போதனைகளை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. அப்போதனைகளாவன, ஐந்து கட்டளைகள், புனித எட்டு வழிமுறைகள், தார்மீகக் காரணிகளுக்கான சட்டம் (கம்மா), பத்து பூரணத்துவங்கள் (தஹச பரமித்த), நான்கு உயரிய நிலைகள். மேலும், இம்முக்கிய போதனைகளில் குறிப்பிடப்பட்டுள்ள பொருத்தமான பல்வேறு வகையான தனித்தனி அம்சங்கள் மற்றும் நிலைமாற்றுக்கால நீதிப் பொறிமுறைகள், நடைமுறைகள் ஆகியவற்றை அமுல்படுத்துவது தொடர்பாக கீழே கலந்துரையாடப்பட்டுள்ளது.

மேற் குறிப்பிடவற்றில் குறிப்பிட்ட, ஐந்து கட்டளைகளானது அறநெறிக்கான நடைமுறை சார்ந்த அணுகுமுறையாகும். இதனுடன், பௌத்த போதனைகள் மற்றும் ஒழுக்கம் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு அவற்றை பூரணப்படுத்துவதற்கும் அவசியமான மூன்று விடயங்களான தார்மீக பொறுப்புச் சார்ந்த நடத்தை, உள ரீதியான ஒழுக்கம், ஞானம் அல்லது மெய் அறிவு ஆகியவற்றை மேம்படுத்துவதே இப் புனித எட்டு வழிமுறைகளின் சாராம்சமாகும். மேலும், பத்து பூரணத்துவங்களாவன (தஹச பரமித்தா); கருணையினால் ஏற்படக்கூடிய, காரணிகளினால் வழிப்படுத்தக்கூடிய, சுயநல நோக்கங்களின் செல்வாக்கிற்கு உட்படாத, பிழையான நம்பிக்கையினால் நெறிப்படுத்தப்படாத, அகந்தையற்ற உணர்வுகளைக் கொண்ட ஆழ்நிலை நல்லொழுக்கமாகும். (நாரத மகா தேரர், 1980).

### 1.5.1 நான்கு உயரிய நிலைகள்

சமூக நல்லிணக்கத்தை அடைவதற்கு புத்தரின் போதனைகளில் குறிப்பிடப்பட்டுள்ள மிக முக்கியமான போதனைகள் இவையாகும்.

1. மெத்தா, அனைத்து உயிரினங்கள் மீதும் அன்பும் கருணையும் செலுத்துவது.

2. கருணா, கருணை அல்லது இரக்கம். ஒருவருடைய துன்ப துயரங்கள் அல்லது வலி தொடர்பில் காத்திரமாக பதிலளிப்பதற்கான வாய்ப்புக்களை இது நல்குகிறது.

3. முதித, ஒத்துணர்வான மகிழ்ச்சி மற்றும் பாராட்டு என்பது, பகைமை, பொறாமை, குரோதம் ஆகியவற்றிலிருந்து மீண்டெழுந்து இன்னொருவருடைய நலனில் மகிழ்ச்சி ஆகும்.

4. உபேக, சகல மக்கள் மீதும் சாந்தமாகவும் சமத்துவமாகவும் நடந்துகொள்ளல், சமாதானம் மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றுக்குத் தடையாகக் காணப்படுகின்ற மனநிலைகள் அல்லது கண்ணோட்டங்கள் ஆகியவற்றை அகற்றுதல்.

### மெத்தா

மெத்தா அனைத்து உயிரினங்கள் மீதும் அன்பும் கருணையும் செலுத்துவதானது, கோபம், வெறுப்பு, ஏனைய எதிர்மறையான நிலைமைகள் ஆகியவற்றை வெற்றிகொள்வதற்காக சாதகமான சிந்தனைகளை எமது மனதில் ஏற்படுத்துவதாகும். இதுவே, தீங்கற்ற சிந்தனைகள் ஆரோக்கியமான உடலுக்கு வழியமைப்பதுடன், அச்சிந்தனையைக் கொண்டுள்ளவருக்கு நன்மையளிப்பதுடன் யாருக்கு நாம் வழங்குகின்றோமா அவருக்கு நன்மையயக்கக்கூடியதாகவிருக்கும். மேலும், அன்பையும் கருணையையும் பழக்கமாக்கிக் கொள்வதன் மூலம் எமது எண்ணங்கள் தூய்மையடைவது மட்டுமல்லாது பக்கச்சார்பற்ற, குரோதமற்ற, பாரபட்சமற்ற, வெறுப்பற்ற நடத்தைகளுக்கு வழிவகுக்கும்.

மெத்தா என்ற சொல், ‘மித்தா’ அதாவது நண்பன் என்ற சொல்லிலிருந்து தோன்றியதாகும். இருப்பினும், ஒரு தாய் தான் பெற்றெடுத்த பிள்ளை மீது செலுத்துகின்ற அன்பானது அப்பிள்ளையின் நடத்தை எவ்வாறிருப்பினும் ஒரு வழிபோக்கானது போன்றது இவ்வன்பும் கருணையுமென வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது.

“ஒரு தாய் தனது எல்லா பலத்தையும் பிரயோகித்து தனது மகனைப் பாதுகாக்கின்றாள், இதைப்போல்தான் ஒருவர் சகல உயிரினங்கள் மீதும் அன்பு செலுத்துதல் வேண்டும். ஒருவரது மனதை எல்லையில்லா அன்பின்பால் இட்டுச்செல்லுதல் வேண்டும்.

கருணையுடன் கூடிய சகல விடயங்களிலும் ஒருவனுடைய மனம் திறக்கப்படல் வேண்டும்.மேல், கீழ், சகல திசைகளிலும்,வெறுப்பு, கோபம் ஆகிய உணர்வுகளிலிருந்து விடுபட்டதாக எவ்வித தங்குதடையுமின்றி பிரவாகித்தல் வேண்டும்”

- காரணிய மெத்தா சுதா (அனைவர் மீதும் அன்பு செலுத்துகின்ற பாடல்)

அதாவது, ஒருவரது நடத்தை எவ்வாறு காணப்பட்ட பொழுதும், சகல உயிரினங்கள் மீதும் அன்பு செலுத்துவதாக மெத்தா திகழ்கிறது. சகல மனிதர்களும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் என்ற கருத்தினடிப்படையிலும் மனிதர்களுக்கான சமத்துவம் மற்றும் ஆன்மீக ஒருமைப்பாடு என்ற கொள்கையிலும் பௌத்த கருத்தான தோழமை அல்லது மெத்தா ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

உயிர்களைக் கொல்லக்கூடாது என்ற பௌத்த கட்டளையானது எதிர்மறையானதல்ல. அது முழுமையான சாதகமான விளைவுகளைக் கொண்டுள்ளது. “ஒருவர் உயிர்கள் கொலை செய்யப்படுவதைத் தவிர்க்கின்ற பொழுது, தடிகளையும் வாளையும் தூர வீசியெறிகின்ற பொழுது, தனது மனசாட்சிக்குப் பணிந்து நடக்கின்ற பொழுது, அவனுக்கு சகல உயிரினங்கள் மீதும் அன்பும் கருணையும் பாசமும் ஏற்படுகின்றது”

பழிவாங்குதல் அல்லது வெறுப்பூட்டுதல் ஆகியவற்றுக்கு எதிராக சகல மனிதர்கள் மீதும் கருணை செலுத்த வேண்டுமென்று பௌத்த தத்துவம் எடுத்துரைக்கிறது. வெறுப்புணர்வு தோல்விக்கு வழியமைப்பதுடன் வெறுக்கப்படுபவரை விட வெறுப்பவருக்கு அதிக பாதகங்களை ஏற்படுத்துகிறது. எனவே, மனதில் குரோதங்கள் குடிகொள்கின்ற பொழுது அது வெறுப்பிற்குப் பங்களிப்புச் செய்கின்றது.

“அவன் என்னைத் துஷ்பிரயோகப்படுத்தினான்; அவன் என்னை அடித்தான்;
அவன் என்னைத் தோல்வியடையச் செய்தான்; அவன் என்னிடமிருந்து திருடினான்”
இத்தகைய சிந்தனைகளைக் கொண்டிருக்கத்தவர்களிடத்து வெறுப்பிருக்காது
“இத்தகைய சிந்தனைகளைக் கொண்டிருப்பவர்கள் மத்தியில் வெறுப்பு எப்போதும் நீங்காது”
வாசகம் 3 மற்றும் 4, யமக்க வாக (,ரட்டை வாசகங்கள்), தம்மப்பத.

உலக சமாதானத்திற்கான அடிப்படை நிபந்தனையாக அனைவர் மீதும் அன்பு செலுத்துதல், அதாவது மெத்தா திகழ்கின்றது. இது எல்லைகளைக் கடந்து சகலமனிதர்கள் மீதும் சகல திசைகளிலும் வியாபித்துக் காணப்படுகிறது. தனி நபர்களது அமைதியானது உலக அமைதிக்கு இட்டுச்செல்கிறது.

**கருணா (கருணை)**

மெத்தா அல்லது அன்பு செலுத்துதல், செயல் பரிமாணத்தை அடைகின்ற பொழுது 'கருணா' அதாவது இரக்கம் அல்லது பரிதாபம் ஏற்படுகிறது. மற்றவர்களது வலி மற்றும் துன்பங்கள் மீது சாதகமான பதிலளிப்புகளை நல்குவதற்கான வாய்ப்பினை இது ஏற்படுத்துகிறது. அதுமட்டுமன்றி, கருணையின் வெளிப்பாடாகவே பகிர்தல், மற்றவர்களுக்கு ஆறுதலளித்தல், தயை, அக்கறை மற்றும் கவனிப்பு ஆகிய இவை யாவும் கருதப்படுகின்றன. கருணையுள்ளம் கொண்ட மனிதர்கள் மற்றவர்களுக்கு துன்பம் விளைவிக்காமழும், மற்றவர்களின் முயற்சிகளை ஒடுக்குகாதும் இருப்பது மட்டுமன்றி அவர்களுக்கு பாதுகாப்பளிப்பதுடன் நிர்கதியான நிலையில் வாழ்பவர்களுக்கு ஆறுதலுமளிப்பனர் என பௌத்த இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. மேலும், சாந்தப்படுத்தல் மற்றும் புத்தரின் ஆழ்ந்த கருத்துக்களை உள்வாங்கிச் செயற்படல் ஆகியவற்றின் மூலம் நீண்டகாலமாக எம் மத்தியில் நிலவி வருகின்ற ஆத்திரம், கோபம், தனிமை, வெறுப்பு, அச்சம், புரிதலின்மையால் ஏற்படுகின்ற விரக்தி ஆகியவற்றைக் களைந்தெறிய முடியும். இதன் மூலம் கருணை, மகிழ்ச்சி, நலன் ஆகியவற்றை நாம் செழுமைப்படுத்த முடியும் (குறுப்பு 2003)

## 1.6 உண்மை

பௌத்தத்தின் பிரகாரம், உண்மையை மறைக்க முடியாது. அவ்வாறு செய்வாரெனில் ஐந்து கட்டளைகளுள் (பஞ்சசீல) ஒன்றான நான்காவது கட்டளையான, பொய்யான பேச்சிலிருந்து தவிர்ந்தல் என்ற கட்டளையை மீறுவதாக அது அமையும்[6]. மேலும், பௌத்த கருத்துக்களின் பிரகாரம், ஏதாவது உண்மை காணப்படும் பட்சத்தில் உடனடியாக அதை ஏற்றுக்கொள்ளும் மனோநிலை எம்மிடம் காணப்பட வேண்டும். அவ்வுண்மை யாரிடம் இருந்து அல்லது எங்கிருந்து வருகின்றதென்பதாய் ஆராய்வது தேவையற்ற விடயமாகும். உண்மை என்பது சீரானது, "உண்மை என்பது ஒன்றாகும், இரண்டாவது உண்மையென ஒன்று இருத்தல் முடியாது".

பத்து பூரணத்துவங்களுள் (பராமிஸ்) ஒன்றாக உண்மை (சாகா) காணப்படுகிறது. இது ஆள் நிலை நல்லெழுக்கமாகும். ஒவ்வொரு போதி சத்தாக்களும் உயரிய பரிநிர்வாணத்தை அடையும் முகமாக இதனை பயிற்சி செய்தல் வேண்டும். ஒருவர் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் உண்மையைப் பேணிப் பாதுகாக்க வேண்டும். உண்மையைக் கூறுவதை இல்லையா எனும் பேரம் பேசுதலில் ஈடுபடக்கூடாதென 'தச ரஜ தம்மா' குறிப்பிடுகிறது. மேலும், உண்மையைப் பேணுவது எனில் ஒருவர் எப்போது உண்மையைக் கதைத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்ட உண்மையின் பிரகாரம், ஒரு அடிப்படை நல்லொழுக்கமாக ஒருவரது விழிப்புணர்வு மற்றும் தொடர்பாடல் ஆகியவற்றுக்கு இடையிலான இசைவாக்கமானது குறிப்பிடப்படுகிறது. புனித எட்டு வழிமுறைகளில் சரியான புரிதல் (தம்ம திதி) முதல் காரணியாகும். இந்தப் பயணத்தின் ஏனைய காரணிகளை இதுவே வழிநடத்துகிறது. அத்தோடு ஒருவர் ஆரம்ப நிலையைப் புரிந்துகொள்வதற்கும் இது உதவுகின்றது. சரியான புரிதல் என்பது இரு வகையாகும். அவையாவன,

1. வெளிப்படையான யதார்த்தம் - சாதாரண மரபு ரீதியான உண்மை – சமுத்தி சாக்கா - இது உலக வரையறைக்குள் செயற்படுவதாக இருக்கின்றது. விஞ்ஞானம், கலை, இலக்கியம், வரலாறு போன்ற சாதாரண உலக அறிவு.

2. இறுதியான யதார்த்தம் - சாரம் மிகுந்த உண்மை – பரமார்த்த சாகா - இவ் உலகத்திலிருந்து விடுதலை பெறுவதற்கு இட்டுச்செல்கின்றது.

சரியான புரிதல் மூலமே ஒருவர் காரண காரியங்களைக் கண்டறிய முடியும். எல்லா விடயங்களினதும் ஆரம்பத்தையும் முடிவையும் உணர முடியும். அத்துடன், வாழ்க்கையின் உண்மையைப் புரிந்துகொள்வதற்கு பௌத்த ரீதியான அணுகுமுறை இதுவாகும் (குறுப்பு 2003). மகிழ்ச்சிக்கு உண்மையை உணர்ந்துகொள்வது அவசியமாகும். ஏனெனில், ஞானத்தின் மூலம் அடிப்படையிலான பிழைகளையும் கறைகளையும் கண்டறிந்து உண்மையின் யதார்த்தத்தை உணர முடியும்.

[6] மதிப்பிற்குரிய வலன்வில்ல விமலரத்தின தேரருடனான கலந்துரையாடல்.

## 1.7 கம்மா

ஒரு பிரஜை அந்நாட்டின் சட்டத்திற்கு கட்டுப்பட்டவர்கள், இதைப்போல் கம்மா சட்டத்திற்கு மேல் எவரும் இல்லையென பௌத்தர்கள் நம்புகின்றனர். கம்மா சட்டத்தின் பிரகாரம், ஒருவருடைய எண்ணங்கள் பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ அவர் விருப்பத்துடன் மேற்கொள்கின்ற செயல்களுக்கான உந்துதலாகவிருக்கின்றது. ஒருவரது நன்னடத்தையாக இருந்தாலென்ன அல்லது மோசமான நடத்தையாகவிருந்தாலென்ன, இந்த உந்துதலின் அடிப்படையிலேயே இடம்பெறுகின்றன. இதன் பிரகாரமே கம்ம விபிக்க உருவாக்கப்படுகிறது. மேலும், ஒவ்வொரு தாக்கத்திற்கும் எதிர்த்தாக்கம் உண்டு. ஒருவர் நல்ல செயல்களைச் செய்வாராயின் அதன் விளைவாக நற்பயனையும் மகிழ்ச்சியையும் பெற முடியும். ஒருவர் மோசமான செயல்களைச் செய்வாராயின் அதன் விளைவாக துன்பமே ஏற்படுகின்றது. இருப்பினும், கரம்வின் சட்டங்கள் அனைத்தும் சாதாரண இணையுணர்வாகவே கூறப்பட்டுள்ளது, இது தனிமனித அறநெறி பொறுப்புக்களுக்கு உத்தரவாதம் அளிக்கின்றது.

கம்மா சட்டத்தின் செயற்பாடுகள் பற்றி உணர்ந்துகொண்ட பௌத்தர் ஒருவர் இவ்வாறு கூறுவார்.

“எந்த விதையை விதைக்கின்றோமோ அதன் அடிப்படையிலேயே மரம் வளர்ந்து வந்து கனியைத் தருகிறது;

நல்ல விடயங்களை விதைத்தவன் நன்மையை அறுவடை செய்வான், தீமையை விதைத்தவன் தீமையை அறுவடை செய்வான்;

விதைக்கேற்பவே தாவரம் வளர்ந்து வருகிறது. அதன் அடிப்படையிலேயே பழத்தின் சுவையை அனுபவிக்க முடியும்”

- சமயத்தாய் - 227 -

‘அறநெறியின் தன்னார்வ முறை’ யாக பௌத்தம் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது எனக் கூற முடியும். இவாறிருக்கும் பட்சத்தில் மனிதன் முழுமையாக கட்டற்றவனாகின்றான். கம்மா எனப்படும் பொழுது கடந்த காலத்திலும் சமகால வாழ்க்கையிலும் மனிதர்கள் மேற்கொண்ட செயல்களின் விளைவேயாகும். எனவே ஒருவர் தான் விரும்பிச் செய்கின்ற செயலுக்கு ஏற்ப அதற்கான விளைவைப் பெற்றுக்கொள்கின்றார். கம்மாவின் செயற்பாடுகள் பற்றியும் தன்னிச்சையான செயலாற்றுகையின் விளைவுகள் பற்றியும் ஒருவர் புரிந்துகொள்வாராயின், அவர் தீயவற்றைச் செய்வதற்கு முயற்சிக்கமாட்டார்.

கர்மிக் சட்டத்தின் பிரகாரம், பொறுப்புக்கூறல் தன்மை தெளிவாக உணர்த்தப்படுகிறது. ஒரு விடயத்தைச் செய்கின்றவருடைய முழுமையான எண்ணத்திலேயே இது தங்கியுள்ளது. ஒருவருடைய எண்ணமே அடிப்படைக் காரணி எனவும், புலனாய்வு அல்லது விசாரணைச் செயற்பாடுகளின் பொழுது இது தொடர்பில் பிரதானமாக அக்கறை செலுத்தப்பட வேண்டுமெனவும் பௌத்தம் பரிசீலிக்கின்றது. அதனாலேயே, சகல விடயங்களுக்கும் முன்னோடியாக எமது மனமே திகழ்கின்றது (குமரசேன, 2011).

“மனதினாலேயே உலகம் முன்னெடுத்துச் செல்லப்படுகிறது. மனதினாலேயே அது இழுத்துச் செல்லப்படுகிறது. எல்லா மனித மனதிற்கும் இறைமை உண்டு”— நாரத தேரோ

### 1.7.1 கம்மாவின் பலன்

இதனை புத்தர் இவ்வாறு குறிப்பிடுகின்றார்; “பிக்குகள் மற்றும் சிலரைப் பொறுத்தவரையில் மோசமான கம்மாவின் காரணமாக அவர்கள் நரகத்தில் மறுபிறவியெடுப்பர். இன்னும் சிலரைப் பொறுத்தளவில் அதே சிறியளவிலான மோசமான கம்மாவின் காரணமான அதன் விளைவுகளை நிகழ்காலத்தில் அனுபவிப்பர். மேலும் இதன் விளைவுகளில் கடுமையானவற்றை மட்டுமே தெளிவாக உணரமுடியும் சிறியளவிலுள்ளவற்றையல்ல. தமது செயல்களை நெறிப்படுத்தாதவர்கள், ஒழுக்க விழுமியங்கள், மனம் மற்றும் ஞானம் என்பனவற்றை நெறிப்படுத்தாதவர்களாக கருதப்படுவர். சிறிய கம்மா விளைவுகளின் காரணமாக அவர்கள் அதிருப்தியுற்றவர்களாக வாழ்கின்றார்கள். இத்தகைய சிறிய கம்மாவை உடைய நபர்கள் நரகத்திற்குச் செல்வதற்கான சாத்தியக்கூறு உண்டு.” (பாரியளவிலான உப்பை சிறிய சாடியொன்றில் போடுவதைப் போன்றது)

தமது செயல்களை நெறிப்படுத்தியவர்கள் ஒழுக்க விழுமியங்கள் மனம் மற்றும் ஞானம் என்பனவற்றை நெறிப்படுத்வதியவர்களாக கருதப்படுவர். இத்தகைய நபர்கள் சிறிய கம்மாவாகவிருந்த போதிலும் கூட தற்சமயம் அதற்கான பெறுபேறுகள் கிடைக்கும். இத்தகைய சிறிய கம்மாக்கள் பெரிதாக எதனையும் உருவாக்குவதில்லை (பாரியளவு உப்பினை ஆற்றில் கொட்டுவது போன்றது). உயிரினங்களின் பரிணாம வளர்ச்சியில் காமிக் வீழ்ச்சி அல்லது காமிக் ஏற்றத்திற்கான வாய்ப்புகள் உள்ளன. எனவே, பௌத்த மதத்தின் பிரகாரம் ஒருவருடைய கம்மாவை சீர்செய்து கொள்வதற்கான சகல வாய்ப்புகளும் உள்ளன (நாரத மகா தேரர், 1980)

இத் தாற்பரியத்தின் அடிப்படையில், கம்மாவை சீர்செய்கின்ற ஐந்து நிபந்தனைகள் பின்வருமாறு,

அகவய நிபந்தனைகள்
(அ) தொடர்ச்சியாக மீண்டும் மீண்டும் மேற்கொள்ளும் செயல்கள்.
(ஆ) பாரிய விருப்பத்துடனும் துணிச்சலுடனும் மேற்கொள்ளப்படும் செயல்கள்.
(இ) எவ்வித கவலையுமின்றி மேற்கொள்ளப்படும் செயல்கள்.

புறவய நிபந்தனைகள்
(அ) விசேட தன்மை கொண்டோர் மீது மேற்கொள்ளப்படும் செயல்கள்
(ஆ) கடந்த காலத்தில் நன்மையளித்தோர் மீது மேற்கொள்ளப்படும் செயல்கள்.

ஒரு செயலைத் தீர்மானிக்கின் அகவய மற்றும் புறவய நிபந்தனைகளை கம்மா கருத்திற்கொள்கின்றது. இது அகவயத் தன்மையின் அடிப்படையில் காணப்படுகின்ற பொழுது அதன் தாக்கம் அதிகரிக்கப்படுகின்றது. எனவே, செயல்களின் தாக்கமானது சமமாகவிருப்பதுடன், காரணிகளின் தன்மையை ஒத்ததாக இருப்பதையும் இது உறுதிசெய்துகொள்கிறது.

ஒருவருடைய தற்போதைய செயல்களை மையமாகக் கொண்டு கடந்தகால கம்மாவை மாற்ற முடியும் அல்லது சீர்செய்ய முடியும். மேலும், வலுவான சிறந்த கம்மா, மேசமான கம்மாவையும் அதன் விளைவுகளையும் தடுத்து நிறுத்த முடியும் அல்லது அதன் தாக்கத்தைக் குறைக்க முடியும். கம்மா சட்டத்தினடிப்படையில் செயற்படுகின்ற பொழுது ஒருவருக்கு தனது கடந்த காலம் நினைவில்லையென்பது ஒரு பிரச்சினையல்ல. ஒருவருடைய வாழ்க்கையில் கம்மா தொடர்பான அறிவு அதாவது, சம்சரா பௌத்தர் ஒருவருடைய பண்பினைச் சீர்செய்வதற்கு உதவுகின்றது.

### 1.7.2 ஐந்து மடி இயற்கைச் சட்டங்கள்

கம்மா தொடர்பான பௌத்த கோட்பாடு ஊழ்வினை சார்ந்தது அல்ல என்பதைக் கருத்திற்கொள்ளல் வேண்டும். புத்தர் கடும் நியதிகளையோ (நியாதிவாதா) அல்லது முழுமையாக நியதியற்ற தன்மையையே (அதிக்கா சமபானா) பரிந்துரை செய்யவில்லை. ஒரு மனிதனை நிபந்தனைக்குள்ளாக்கி அனுபவத்தை வழங்குகின்ற பல்வேறு காரணிகளில் கம்மாவும் காணப்படுகிறது. பல்வேறு விதமான சட்டங்களின் காரணமாக மனிதன் பழக்கத்திற்கு உள்ளாகின்றன் என புத்தர் விளக்கமளித்துள்ளார் (பியதிஸ்ஸி தேரர், 1980). அவற்றுள் ஐந்து மடி இயற்கைச் சட்டங்களும் உள்ளடங்குகின்றன (பஞ்ச நியாம தம்ம).

1. சுற்றாடல் மற்றும் பௌதீகச் சட்டங்கள் (உது நியம – பருவகாலச் சட்டங்கள்)
2. உயிரியல் சார்ந்த சட்டங்கள் (பிஜி நியாமா – விதை சார்ந்த சட்டங்கள்)
3. உளவியல் சார்ந்த சட்டங்கள் (சித்த நியாமா – மனசாட்சி தொடர்பான சட்டங்கள்)
4. அறநெறி மற்றும் ஆன்மீகச் சட்டங்கள் (தம்ம நியாமா – கோட்பாடு ரீதியான சட்டம்)
5. கர்ம மரபுவழி (கம்ம நியாம – கம்ம சட்டம்)

இதன் பிரகாரம், இந்த உலகத்தில் தாக்கத்தை விளைவிக்கின்ற ஐந்து காரணிகளுள் ஒன்றாகவே கம்மா காணப்படுகிறது. கம்மாற்கு அதற்கேயுரிய வரையறைகள் உண்டு. மேலும் கம்மாவின் இறுதி விளைவுகளானது ஏனைய கம்மாக்களினால் பாதிக்கப்படலாம்.

## 1.8 நலன் மீட்பு நீதி

பௌத்த தத்துவங்களின் பிரகாரம் இழைக்கப்பட்ட எல்லாக் குற்றங்களுக்கும் தண்டனை வழங்குவது நோக்கமல்ல (குமாரசேன, 2011). குற்றம் தனி நபர் தெரிவாகக் காணப்பட்ட பொழுதிலும், குற்றவாளிகள் சுயஎண்ணத்துடன் குற்றச் செயலில் ஈடுபடுவதாக கருதுவதில்லை மேலும் வினையவின் அடிப்படையில் குற்றமிழைத்தவரின் நோக்கத்தின் திசையில் பார்வை திரும்புவதுடன் அவரின் குற்றத்தினை உறுதி செய்வதில் இருந்து விலகிச்செல்கிறது. மேலும், அவரது எண்ணமே குற்றத்தின் தன்மையை தீர்மானிக்கிறது. ஒருவர் குற்றமிழைப்பதற்கு தனது சம்மதத்தைத் தெரிவிக்காத பட்சத்தில் அவர் குற்றவாளியல்ல. குற்றமிழைப்பதற்கான எண்ணம் எந்தளவிற்குச் சிறிதாகவிருக்கின்றதோ, அந்தளவிற்கு அவருடைய குற்றத்தின் தன்மையும் சிறிதாகவே இருக்கின்றது. (இரத்தினபால சுதா, 5, 92,192).

தண்டனை மைய நீதியானது அச்சந்தர்ப்பத்தில் நிவாரணத்தை வழங்கலாம். ஆனால் அது முழுமையான நீதியை வழங்காது. அக்குற்றத்தின் தாக்கம் மற்றும் அதன் தாற்பரியம் தொடர்ந்தும் இருக்கலாம். பௌத்த தத்துவத்தின் கண்ணோட்டத்தில் நீதியானது, அன்பு, கருணை மற்றும் ஞானம் ஆகியவற்றை மையமாகக் கொண்டிருத்தல் வேண்டும். நிலை மாற்றுக்கால நீதி மற்றும் நலன் மீட்பு நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகியவற்றில் இதுவே பிரதான அம்சமாகக் கருதப்படுகின்றது. இவை தொடர்பில் சில பாளி, சுத்தாக்கள் எடுத்துரைக்கின்றன.

1. **அங்குளிமால சுதா,** தொடர்ச்சியாக குற்றமிழைத்து வந்த நபர் ஒருவர் எவ்வாறு குற்றம் மற்றும் தண்டனைகளிலிருந்து மறுசீரமைப்பிற்கு உட்பட்டார் என்பதை எடுத்துரைக்கும் பிரபல்யம் பெற்ற பௌத்த ஆவணமாகும். அங்குளிமாலாவைப் பார்த்து புத்தர் இவ்வாறு குறிப்பிடுகின்றார். "உயிரினங்களுக்கு எதிராக வன்முறைகள் இழைக்கப்படுவதை நிறுத்தும்படி உனக்கு நான் பலமுறை குறிப்பிட்டிருந்திருந்தேன். ஆனால் நீ அவற்றை நிறுத்திக்கொள்ளவில்லை" அதனைத் தொடர்ந்து அங்குளிமாலா தீய செயல்களில் ஈடுபடுவதைக் கைவிட்டான். அங்குளிமாலா சங்காவில் ஒரு பிக்குவாக இணைந்துகொண்டான். அதன் பின்னர் ஒரு பூரணப்படுத்தப்பட்ட மனிதனாக மாறினான். அவனுடைய கடந்த கால பிழையான நடவடிக்கைகள் கைவிடப்பட்டன. குற்றங்களைக் கைவிட்டு அங்குளிமாலா மகிழ்ச்சியாக வாழ்கின்ற சந்தர்ப்பத்தில் அவன் தொடர்பில் சுதா இவ்வாறு சில விடயங்களைக் குறிப்பிடுகின்றது,

"ஒருவன் தான் செய்த பிழையான நடவடிக்கைகளை ஆராய்ந்து அவற்றைக் கைவிட்டு நல்ல விடயங்களை மேற்கொள்கின்ற பொழுது மேகங்களிலிருந்து விடுபட்ட நிலவு எவ்வாறு பிரகாசிக்கின்றதோ, அதேபோல் அவனும் பிரகாசிக்கின்றான்"

அங்குளிமாலா ஆன்மீக பூரணத்துவத்தை அடைந்தபொழுதிலும் அவனது செயல்களுக்கான கர்ம பின்விளைவுகளை அனுபவித்தாகவேண்டும். இங்கு படிப்பினை ஊட்டக்கூடிய தண்டனை முறை பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை.

2. **கக்காவதி சிஹாநாத** (சக்கரச் சுழற்சியில் சிங்கத்தின் கர்ச்சனை), வறுமைக்கும் வன்முறைக்கும் இடையிலான தொடர்புகள் பற்றி சுதாவில் குறிப்பிடப்பட்டுள்ளன. பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பில் சரியான பௌத்த அணுகுமுறையானது, குற்றத்திற்கான காரணத்தை சரியாகப் புரிந்துகொள்ளல் வேண்டும் - திருட்டு, பிழையான நடத்தை, வன்முறை, வெறுப்பு, கொடூரம் போன்ற குற்றங்களுக்கும் ஒழுக்கக் கேடான நடவடிக்கைகளுக்கும் வறுமையே காரணம் என் சுதா குறிப்பிடுகிறது. சுதாவின் பிரகாரம் படிப்பினையூட்டக்கூடிய விதத்தில் தண்டனையளிக்க வேண்டுமென்ற நோக்கில் அரசன் வன்முறையுடன் செயற்படுவதன் காரணமாக சமூக சீர்குலைவுகளுக்கு இட்டுச்செல்கின்ற வன்முறையே அதிகரித்தது. மேலும், சிலநேரங்களில் தண்டனையானது குற்றத்தின் கண்ணாடி விம்பம் போல் காட்சியளிக்கின்றது. இங்கு குற்றமானது தண்டனையின் கண்ணாடி விம்பமாகவே காட்சியளிக்கின்றது. இருப்பினும் சாகாவதி சிஹானந்த சுதாவின் கதையின் முடிவில் கொடுமையின் உச்சநிலை எய்துகின்ற பொழுது குகைகளுக்குள்ளும் காடுகளுக்குள்ளும் மரப் பொந்துகளுக்குள்ளும் பதுங்கிக் கிடந்த மக்கள் அன்பையும் ஒழுக்கத்தையும் பரிமாறிக்கொள்ளும் முகமாக ஒருவரையொருவர் ஆரத்தழுவினர்.

3. **குத்தாதந்த சுதா,** நாட்டில் சிவில் நிலைமை மோசமடைந்துள்ளதாகவும் குற்றங்கள் நிரம்பியுள்ளதாகவும் சட்டம் இல்லாத தன்மை காணப்படுவதாகவும், சொத்துக்கள் பாதுகாப்பற்றதாகவிருப்பதாகவும் புரோகிதன் அரசனிடம் குறிப்பிடுகின்றான். அத்தோடு, குற்றங்களை நாட்டிலிருந்து இல்லாதொழிக்க வேண்டுமெனில், மக்களுடைய பொருளாதார நிலைமைகள் மேம்படுத்தப்பட வேண்டுமென புரோகிதன் அரசனுக்கு ஆலோசனை வழங்குகின்றான் (ராஹுல 1996). குற்றங்களைத் தண்டனை மூலம் இல்லாதொழிக்கின்ற முயற்சியானது பயனற்றது என்பதை சுதா விளக்குகின்றது.

சாக்கவதி சிஹானந்தா மற்றும் கூட்டாதந்த சுதா ஆகியவற்றிலிருந்து நாம் அறிந்துகொள்வதாவது, குற்றவியல் நடவடிக்கைகளின் பொழுதும் அவற்றுக்கான தீர்வுகளின் பொழுதும் சமூகப் பொருளாதார பின்புலங்கள் கருத்திற்கொள்ளப்படல் வேண்டும். மேலும், தண்டனை வழங்குவதற்குப் பதிலாக மக்களுடைய அடிப்படைத் தேவைகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். அத்தகைய அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்கின்ற பொழுது, இழப்பீட்டு ரீதியான நன்மைகள் மற்றும் ஏனைய நலனோம்புகை வசதிகள் ஆகியன பிரதானமாக கருத்திற்கொள்ளப்படல் அவசியமானது. நிலைமாற்றுக்கால நீதிச் செயன்முறையில் வினைத்திறன் மிக்க அல்லது பயனுறுதிமிக்க நல்லிணக்கத்தை மேற்கொள்ள வேண்டுமாயின் இழப்பீட்டு நிகழ்ச்சித்திட்டங்களையும் மேற்கொள்ள வேண்டும். மேலும், இவர்களுக்கு இங்கு பொருளாதார ரீதியாக நட்டஈடுகள் வழங்கப்படல் வேண்டும். குறிப்பாக பாதிக்கப்பட்டவர்களுடைய தன்மானம் பேணப்படல் வேண்டும். அத்தோடு, கடந்த காலங்களில் அவர்களுக்கு இழைக்கப்பட்ட அட்டூழியங்களை ஏற்றுக்கொள்வதுடன் சமூக ஒருங்கிசைவுக்கான வாய்ப்புகளும் ஏற்படுத்திக்கொடுக்கப்படல் வேண்டும்.

## 1.9 தனிப்பட்ட பொறுப்புகள் - மனப்பாங்கு ரீதியான மாற்றம்

வறுமை, சமூக அநீதி ஆகியவற்றுக்கு மேலதிகமாக புலனுணர்வு சார்ந்த பேரவா, முரண்பாட்டிற்கான அடிப்படைக் காரணியாக மகாதுக்கஹந்த சுதாவில் இனங்காணப்பட்டுள்ளது (பிக்கு போதி பக்கம் 179 முதல் 184 வரை). நிலையற்ற அரசியல் சித்தாந்தம் மற்றும் துன்பங்கள் ஆகியவற்றுக்கு அடிப்படை காரணியான உந்துதல்கள் சாதாரண மனித நடத்தைகளில் இருப்பதை அவதானிக்க முடியும். இவை பேராசையாக, அதிகாரத்திற்கான ஆசையாக, ஆக்கிரமிப்பாக, வெறுப்பாக, ஏமாற்றுதல் போன்றனவாக காணப்படுகின்றன. ஒரு மனிதனுடைய மனதைச் சாந்தப்படுத்தாமல் அவனிடம் காணப்படுகின்ற கோபம், வெறுப்பு, ஆசை ஆகியவற்றை இல்லாதொழிக்காமல் முரண்பாடுகளைத் தீர்க்க முடியாது. ஒருமுறை

கடவுள்களின் ஆட்சியாளா் சாக்கா கௌதம புத்தரிடம், "மக்கள் அமைதியாக வாழ விரும்பினாலும் கூட அவா்கள் அமைதியற்ற குரோதம் மிக்க சூழலிலேயே வாழ்கின்றனா். இவா்கள் முரண்பாடு மற்றும் வெறுப்பு ஆகியவற்றுக்கு மத்தியில் தான் வாழ்ந்துவருகின்றனா் இதன் பின்னணி யாது?" என வினவினாா். அதற்கு புத்தா் இவ்வாறுஇ "பொறாமை மற்றும் பேராசையுடன் தொடா்புடைய பிணைப்புகள் மக்களைக் குருடா்களாக்கிவிட்டன" என பதிலளித்தாா். துன்பத்திலிருந்து விடுதலை பெற வேண்டுமானால் சுய மாற்றமே அடிப்படை இலக்காக இருத்தல் வேண்டுமென புத்தருடைய போதனைகள் தெரிவிக்கின்றன. எமது சகல விடயங்களுக்கும் மனதே முதன்மைக் காரணியாக இருப்பதன் காரணமாக மனதைச் சுத்தமாக வைத்திருப்பதே பரிகாரமென புத்தா் தெரிவித்தாா். (தம்மபத 1,2). இங்கு மனப்பாங்கு ரீதியான மாற்றங்கள் அவசியமென புத்தா் வலியுறுத்தினாா். இத்தகைய மாற்றம் நடைபெற வேண்டுமென புத்தா் எந்தளவிற்கு விரும்பினாா் என்பதை பின்வரும் வரிகள் தெரிவிக்கின்றன.

"கோபத்தை அன்பினால் அல்லது கோபமற்ற நிலையில் வெற்றிகொள்ளுங்கள்;
தீயதை நன்மையினால் வெற்றிகொள்ளுங்கள்;
கஞ்சத்தன்மையை தாராளத் தன்மையினால் வெற்றிகொள்ளுங்கள்;
பொய்யை உண்மையினால் வெற்றிகொள்ளுங்கள்"
(வசனம் 223, தம்மபத)

பொறுமை, வெறுப்பின்மை, வன்முறையற்ற தன்மை ஆகியவற்றைக் கொண்ட நபா்கள் அறிவாளிகள், சிறந்தவா்கள், முதிா்ச்சியுடையவா்கள் என புத்தா் குறிப்பிட்டாா் (தம்மபத 258 –261). இவா்கள் பிராமணா்களாகவிருக்கலாம் அல்லது துறவிகளாகவிருக்கலாம் (தம்மபத 142, 405).

"உண்மையைக் பேசுங்கள், கோபப்படாதீா்கள், யாருக்கும் எத்தகைய தீங்கும் ,ழைக்காதீா்கள், ,ந்த மூன்று முறைகள் மூலம் முக்தி பெறமுடியும், தொடா்ச்சியாக எவ்வித துன்பங்களும் இருக்காது" (வசனம் 224, தம்மபத).

பொறுமை, பணிவு ஆகியவற்றைக் கொண்ட மனிதா்களே உன்னதமான மனிதா்களாவா். இவா்கள் நிந்தித்தல், அடி, அடிமைத்தனம் ஆகியவற்றைப் பொறுத்துக்கொள்வா், குரோதத்திற்கு மத்தியில் நண்பா்களாகவும் வன்முறைகளுக்கு மத்தியில் சமாதானம் மிக்கவா்களாகவும் இவா்கள் திகழ்வா் (தம்மபத 406).

## 1.10 தொகுப்பு

நலன் மீட்புச் செயன்முறைகளானவை, உண்மை, நீதி, பச்சாதாபம், கருணை போன்ற அம்சங்களைத் தன்னகத்தே கொண்டதாகக் காணப்படுகிறது. நிலைமாற்றுக்கால நீதிப் பொறிமுறையில் இவற்றை ஒரு உந்துசக்தியாகக் கருத முடியும். இத்தகைய அனைவரையும் நேசிக்கின்ற உலகளாவிய எண்ணக்கருக்களுக்கு பௌத்தம் அதிகளவு பங்களிப்புக்களை நல்குகிறது. பௌத்த திருமறை நூல்கள் தத்துவாா்த்த அடிப்படைகளைக் கொண்டுள்ளன. நல்லிணக்கம் தொடா்பில் மனிதா்களது மனப்பாங்குகளை மாற்றுவதற்கு இவை அவசியாமன விடயங்களாகத் திகழ்கின்றன. உரிமைகள் மீறப்படுகின்ற பொழுது அவை தொடா்பான பிரச்சினைகளை பௌத்த முறையின் அடிப்படையில் நாம் வடிவமைக்கின்ற பொழுது, பிரச்சனைகளையும் அதற்கான அடிப்படைக் காரணங்களையும் நன்கு புரிந்துகொள்ளல் வேண்டும். அதன் மூலமே மற்றுமொரு முரண்பாடு எழுவதைத் தவிா்க்க முடியும். பிரச்சினைகளுக்கான அடிப்படைக் காரணங்களைப் புரிந்துகொள்ளல் மற்றும் உண்மையை உணா்தல் ஆகியன உண்மையைக் கண்டறிதல், புலனாய்வுகள் மற்றும் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு ஆகியவற்றுடன் தொடா்புடையவையாகக் காணப்படுகின்றன. மேலும், நிலைமாற்றுக்கால நீதிப் பொறிமுறையில் இவை பிரிக்க முடியாத அங்கங்களாகவிருக்கின்றன. பௌத்தத்தில் சரியான நல்லிணக்கம் எனும் பொழுது, அதன் அடிப்படைக் காரணிகள் கருணையுடன் கூடிய புரிதலில் இருக்கின்றன. பௌத்தம் சாா்ந்த பொறுப்புக் கூறலானது, யாரையும் தண்டிப்பதை நோக்கமாகக் கொண்டதல்ல, அத்தண்டனைக்குப் பதிலாக நன்மையளித்தல் வேண்டும். வகைப்பொறுப்புக் கூறல் முறையை அடிப்படையாகக் கொண்டு பௌத்தத்தின் தத்துவங்கள் ஆழமாகத் திகழ்கின்றன. மேலும், கம்மா என்ற கோட்பாட்டிற்கு ஏற்புடையதாக இவை காணப்படுகின்றன. செயல், அதன் தாக்கம் என்ற கோட்பாட்டினடிப்படையில் மற்றும் விருதுகள் அல்லது தண்டனைகள் என்பதற்குப் பதிலாகவே குறிப்பிடப்பட்ட கோட்பாட்டின் அடிப்படையில் இவை செயற்படுகின்றன.

குற்றமிழைத்தவரைத் தண்டிப்பதற்குப் பதிலாக அவரை மறுசீரமைக்கின்ற நோக்கங்களுடன் நாம் செயற்பட வேண்டுமென வினயபிட்டகவும் ஆலோசிக்கின்றது. இதன்படி குற்றத்தை ஒப்புக்கொள்ளல் முதற்படிமுறையாகும், மற்றும் பிழையான செயல்களை அல்லது பழிகளை ஏற்றுக்கொள்வது என்பதை ஒரு கௌரவமான ஏற்றுக்கொள்ளலாக நாம் கருதுதல் வேண்டும். இது தனி நபா்களுடைய ஆன்மீகச் செயற்பாடுகளிலும் ஒரு முன்னேற்றமாகக் கருதப்படல் வேண்டும். பௌத்த மதத்தின் அடிப்படை நோக்கமாக இது கருதப்படுகிறது. அடிப்படையில், உரிமைக்கட்டளைகளை மீறுபவையாக இவை காணப்படுகின்றன. தனி மனிதா்களுடைய மனங்கள் ஒழுக்கமுடையவையாக இருத்தல் வேண்டுமென

தம்ம வலியுறுத்துகின்றது. உண்மையான நல்லிணக்கமும் சமாதானமும் தனி நபர்களுடைய மனங்களில் கட்டியெழுப்பப்படுகின்றன. அதன் பின்னரே அவை சமுதாயத்தில் பகிரப்படுகின்றன.

**List of References**


- Anh-Huong. The power of forgiveness. Forgiveness and Buddhism. This article was developed for community conversations around The POWER of FORGIVENESS by Journey Films.
- Ariyaratne, Dr. A. T. Keynote speech 'The Role of Religion in Reconciliation' Report on the National Conference on Role of Religion in Reconciliation organized by Lakshman Kadiragamar Institute for International Relations and Strategic Studies (LKIIRSS).
- Bhikkhu Bodhi. The Middle Length Discourses of the Buddha. A translation of the Majjhima Nikaya, translated from the Pali. Original translation by Bhikkhu Nanamoli. Translation edited and revised by Bhikkhu Bodhi. Third edition.
- Brahmavamso, Ajahn. (2011, Feburary). A Buddhist Path to Reconciliation, Perth, Australia. Retrieved from http://www.buddhistfellowship.org/cms/index.php?/Download-document/350-A-Buddhist-Path-to-Reconciliation.html.
- Central Cultural Fund. (1994). Dhammapada. Pali-Sinhala-Tamil-English version.
- Dhamma Refelctions. (2015). Collected Essays of Bhikkhu Bodhi. Compiled by the Buddhist Publication Society, Kandy.
- Dhammahaso, Phramaha Hansa. Buddhist Values towards Conflict and Peace: Truth, Justice, Forgiveness and Reconciliation. Mahachulalongkornrajavidyalaya University.
- Dhammananda, Galkande, (2016). 'Suvapath Wemu'.
- Dhirasekera, Jotiya (Now Bhikkhu Dhammavihari); Buddhist Monastic Discipline, Buddhist Cultural Centre, 2004
- Guruge, Ananda W. P. (2010, November 16). The Buddha on Reconciliation: Keynote Address to the Symposium, World Fellowship of Buddhists, 25th General Conference, Colombo, Sri Lanka. Retrieved from http://buddhasdharma.blogspot.com/2010/11/buddha-on-reconciliation.html
- Hecker, Hellmuth. (2009). Similes of the Buddha: An Introduction. Buddhist Publication Society, Kandy.
- Khantipalo, Bhikkhu. The Buddhist Monk's Discipline
- Kumarasena, Arya Keerthi; Accountability – Buddhist Perspective, Buddhist Cultural Centre, 2011
- Kuruppu, Rajah. (2003). Buddhism: Its Essence and Some Relevant Approaches. Public Trustee Department.
- Loy, David R. (2000). How to Reform a Serial Killer: The Buddhist Approach to Restorative Justice. Journal of Buddhist Ethics, No. 7. Retrieved from http://ccbs.ntu.edu.tw/FULLTEXT/JR-BE/jbe101789.htm
- Narada Maha Thera. (1980). The Buddha and His Teachings. Buddhist Publication Society, Kandy.
- National Conference on the Role of Religion in Reconcilitation. (2013 July). Lakshman Kadirgamar Institute for International Relations and Strategic Studies.
- Piyadassi, Thera. (1970). Buddhism: A Living Message. Vajirarama, Colombo.
- Piyadassi, Thera. (1980). The Buddhist Dcotrine of Life After Death.
- Piyadassi, Thera. (1987). The Buddha's Ancient Path. Buddhist Publications Society, Kandy.
- Rahula, Walpola. (1996) What the Buddha Taught (Revised edition), Buddhist Cultural Centre, Dehiwala.
- Religious Tolerance and Harmony. Research Papers Presented at the International Conference on Religious Tolerance and Harmony. 22nd and 23rd April, 2015. Department of Religious Studies and Comparative Philosophy, Buddhist and Pali Universtiy of Sri Lanka.
- Saddhatisssa, Hammalawa. (1991) Facets of Buddhism. The Buddhist Publications Soceity, Kandy.
- Scorsine, John M. Buddhist Perspectives on Transnational Restorative Justice.
- Thanissaro, Bhikkhu. (2006). Reconciliation, Right & Wrong. Purity of Heart: Essays on the Buddhist Path. Retrieved from http://www.accesstoinsight.org/lib/authors/thanissaro/reconciliation.html
- Tilakaratne, Asanga. Justice, Kamma and Dhamma: Does Kamma in Buddhism Make Justice Redundant? Postgraduate Institute of Pali and Buddhist Studies, Colombo.
- Webb, Russell. (2011). An Analysis of the Pali Canon. Buddhist Publication Society, Kandy.
- Weeramantry, C. G. (2015, November 8). The Noble Eight-fold Path and the judicial process, The Sunday Times. – Retrieved from http://www.sundaytimes.lk/151108/sunday-times-2/the-noble-eight-fold-path-and-the-judicial-process-170842.html

**List of Interviews with Buddhist Monks and Academics**

1. Rajakeya Panditha Adikarana Sangha Nayaka Venerable Walaswewe Ghanarathana Thero, Former Senior Lecturer, Buddhist and Pali Univeristy, Former Director General of Priven Studies, Ministry of Education, and President of National NGO Action Front (NNAF)
2. Venerable Bellanwila Wimalaratana Thera, Deputy Chief Incumbent of Bellanwila Raja Maha Vihara, Chancellor of the Sri Jayawardhanapura University
3. Venerable Bhikkhuni Kusuma, Ayya Khema International Buddhist Meditation Centre
4. Venerable Galkande Dhammananda Thero, History lecturer, University of Kelaniya
5. Venerable Professor Gallelle Sumanasiri Thero, Vice Chancellor, Buddhist and Pali University
6. Dr. A. T. Ariyaratne, President, Sarvodaya Shramadana Movement of Sri Lanka

## அத்தியாயம் 2

### நிலைமாற்றுக்கால நீதிச் செயன்முறை: ஆன்மீக உண்மை மற்றும் நீதி ஆகியவற்றை நோக்கிய பயணம் இந்து மதக் கண்ணோட்டம்

"நடைபெற்ற விடயங்களுக்குப் பொறுப்புக் கூற வேண்டிய அவசியம் எமக்குண்டு, உண்மை எம்மை குணப்படுத்தி விடுவிக்கும்"[7]

### 2.1 அறிமுகம்

நிலைமாற்றுக்கால நீதி இந்துமதப் போதனைகளுடன் எவ்வாறு தொடர்புடையன என்பது பற்றி இவ் அத்தியாயத்தில் நாம் ஆராய்கின்றோம். உபநெடுதங்கள்[8] மற்றும் பகவத்கீதை[9] ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே எமது ஆய்வுகள் காணப்படுகின்றன. பொறுப்புக் கூறல், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கல், நிலைபேறான நல்லிணக்கத்தை அடைதல், சமாதானம், ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்காக கடந்தகால தொன்மங்கள் ஆகியவற்றுடன் தொடர்புபடுத்தி நிலைமாற்றுக்கால நீதி உண்மை கண்டறிதல் தொடர்பான விடயங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதனடிப்படையில் உண்மை பேணப்படுவதிற்கு நிலைமாற்றுக்கால நீதிப் பொறிமுறையில் சமயம் முக்கிய வகிபாகத்தை வகிக்கின்றது. நிலைமாற்றுக்கால நீதியில் மதத்தலைவர்கள் பங்கானது இந்நீதியயை தர்ம வழியிலும், சத்திய நோக்கிலும் பார்ப்பதுடன், சமூகத்தினை சேர்ந்த அனைவரையும் இது தொடர்பான கனத்துறையாடலில் ஈடுபடுத்தி அரோக்கியமான சமூகத்தை கட்டியெழுப்புவதாகும்.

### 2.2 உண்மையை நிலை நிறுத்தும் பொருட்டு இந்து மதம் (சத்தியம்)

உண்மையை வெளிப்பபடையாகத் தெரிவிப்பதனாலும் உத்தியோபூர்வமாக ஏற்றுக்கொள்கின்ற வசதிகள் காணப்படுகின்றதாலும், குணப்படுத்தல் மற்றும் நல்லிணக்கம் ஏற்படுகின்றது (சூகா 2006, பக்கம் 8). "திரிபு படுத்தப்பட்ட தேசிய இதிகாசங்கள் அல்லது தொன்மங்கள் ஆகியவற்றின் காரணமாக இவை ஒரு நாட்டுக்குள்ளேயும் நாடுகளுக்கு இடையிலும் முரண்பாடுகளையும் யுத்தத்தினையும் ஏற்றப்படுத்தியுள்ளது. இவ்வாறு உண்மைகளையும் வரலாற்றினையும் தமக்கேற்ற விதத்தில் பிரயோகிக்கப்படுவதைத் தடுத்தல் வேண்டும். ஏனெனில், இவை வன்முறை சார்ந்த முரண்பாடுகளுக்கு இட்டுச்செல்லலாம்" (மென்டலோபர் 2004, பக்கம் 356 – 357). மேலும், மனித உரிமை மீறல்களை மறுத்தல், ஏமாற்றுதல், அமைதியை திணித்தல் ஆகிய வகைகளுக்குள் நாம் உள்ளடக்குகின்ற பொழுது உண்மையை வெளிப்படுத்தும் செயற்பாடானது பொறுப்புக் கூறலுக்கு வழிவகுக்கின்றது. பல்வேறு ஆணைக்குழுக்கள் தாபிக்கப்பட்ட போதிலும் கூட, இவை பிரச்சினைத் தன்மைவாய்ந்த முக்கியமான உண்மை என்ற விடயத்தை ஏற்றுக்கொள்ளவில்லையென எரின் குறிப்பிடுகின்றார். இருப்பினும், ஓர் உண்மை நிலைநாட்டப்படும் பொழுது, அது நல்லிணக்கம் தொடர்வதற்கான வழிவகைகளை மேற்கொள்வதற்கு உதவுகின்றது. எனவே, ஆணைக்குழுக்களை உருவாக்குகின்ற பொழுது பிரச்சினைக்குரிய உண்மைகள் அவற்றினால் ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டியது முக்கியமானதாகும். (மொபெக் 2005, பக்கம் 266) இதுமட்டுமல்லாது, ஆன்மீகம் சார்ந்த உண்மை எமக்கு அவசியம். இவ்வுண்மையை வரைவிலக்கணம் செய்கின்ற பொழுது ஏற்படுகின்ற கருத்து குழப்பத்தை இந்துமதப் புரிதல்களான தர்மம் மற்றும் சத்தியம் ஆகியன களைந்தெறிகின்றன. மேலும், தர்மத்தை பூர்த்தி செய்வததிற்கு சத்தியமும் உண்மையும் அவசிமாகின்றன.

தர்மம் என்ற சொல் 'தர்' என்ற மூலத்திலிருந்து தோன்றியது. இது தாங்குதல், உதவுதல், நிலைநிறுத்துதல் என பொருட்படும் (ஒலிவெல் 2011, பக்கம் 139). ஒரு மனிதர் இப்பிரபஞ்சத்திற்கும் இங்கு காணப்படுகின்ற அறநெறிகளுக்கும் காத்திரமாக உதவுவதுடன் அவற்றை பேணுதல் இதனால் வலியுறுத்தப்படுகின்றது. நாம் வாழுகின்ற இந்தப் பூலோகத்தின் கட்டடமைப்பு, பௌதீகமுறை, மக்களது ஒழுக்கங்கள், ஆன்மீகம் ஆகியன எவ்வாறாக இருந்தபொழுதிலும் இந்த பூலோகமானது அடிப்படை ஆதரவு அமைப்பு ஆகும். வேதங்களைப் பொறுத்தவரையில், தர்மம் ஆனது உலகளாவிய சட்டமாகக் காணப்படுகிறது. மேலும் தர்மமானது, உள்ளக நீதியில் , உலகிலுள்ள சகலவற்றிலும் காணப்படுகின்றது. தர்மத்தை நாம் முறையாகப் பேணுகின்ற பொழுது அனைத்து மக்களுக்கும் அது

---

[7]வடக்கில் பேட்டி கண்ட அனேகர் இவ்விதமான உணர்வுகளையே வெளிப்படுத்தினர்.

[8]உபநெடுதங்கள் - பொதுவாக இதனை வேதாந்தம் எனவும் அழைப்பர் அல்லது முடிவு அல்லது வேதத்தின் அதி உச்ச நோக்கம் எனவும் கூறுவர். இந்து மதத்தினதும் அதன் பல்வேறு மரபுகளினதும் முக்கியமான தத்துவார்த்த எண்ணக்கருக்களையும் சில அடிப்படை அம்சங்களையும் எடுத்துரைக்கும் தொகுப்பாகும். (பார்க்க - Doniger, 1990, பக்கம் 2 – 3)க

[9]பகவத்கீரை (கடவுளின் பாடல்)– 700 செய்யுள்களைக் கொண்ட சமஸ்கிரத வேதநூலாகும். மகாபாரதத்தின் முக்கிய கதையாகவும் இது காணப்படுகிறது. (அத்தியாயம் 25-42, மகாபாரதத்தின் 6வது புத்தம்). கிறிஸ்ணாவுக்கும் அர்ஜுனனுக்கும் இடையில் யுத்த களத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலை அல்லது போதனையை அடிப்படையாக இவ் அத்தியாயம் கொண்டுள்ளது. இந்தியாவின் ஆன்மீக அறிவிற்கான முத்து என இது வர்ணிக்கப்படுகிறது. ஒருவர் தன்னை உணர்ந்துகொள்வதற்கு திட்டவட்டமான வழிகாட்டிகள் பற்றிய அறிவை இது வழங்குகிறது.

உதவக்கூடியதாகவிருக்கும் (சர்வபுலாஹித). சமூக நடத்தை முறைகளில் இதுவே தனிநபராகவிருந்தாலென்ன அல்லது குழுவாகவிருந்தாலென்ன ஓர் ஒழுக்கநெறிக் கோவையாகக் காணப்படுகிறது.

சத்தியம் என்ற சொல் பொதுவாக உண்மை என மொழிமாற்றம் செய்யப்படுகிறது. இருப்பினும் உண்மைக்கும் சத்தியத்திற்கும் இடையில் மாறுபட்ட பொருட்கோடல்கள் காணப்படுகின்றன. சத்தியம் என்ற சொல் அடிப்படையில் மெய்ப்பொருள் ஆய்வு, இருத்தலியல் ஆகியவற்றுடன் தொடர்புடையது. இது 'சத்' என்ற சொல்லிலிருந்து தோன்றியது. இதற்கு இருத்தல், எப்பொழுதும் காணப்படல் அல்லது எப்பொழுதும் இறப்பதில்லை என்ற பொருட்களும் உண்டு. மேலும், உண்மை, நேர்மை, தூய்மை போன்ற பொருட்களையும் வழங்குகிறது.

ரிக் வேதத்தில் தர்மம் என்ற சொல் ஒரு பெயர்ச் சொல்லாக ஆறு முறைகள் சத்தியம் என்ற சொல்லுடன் இணைத்துக் கூறப்பட்டுள்ளது. அதுமாத்திரமன்றி, ப்ரதானக உபநிடதத்தில் தர்மம் பற்றி காத்திரமான விளக்கத்தினைப் பெற்றுக்கொள்ள முடியும். தர்மமும் சத்தியமும் ஒன்றுடனொன்று பிண்ணிப் பிணைந்து காணப்படுகின்றன. பெரும்பாலும் இங்கு தர்மம் என்ற சொல்லுக்கு ஒத்த கருத்துடைய சொல்லாக உண்மையைப் பிரயோகிக்க முடியும். எப்பொழுதும் தர்மத்தைக் கதைப்பவர் சத்தியத்தையும் கதைப்பவராகவிருப்பார், அதேபோல் சத்தியத்தைக் கதைப்பவர் தர்மத்தையும் கதைக்கக் கூடியவராகவிருப்பார். தர்மத்தின் உச்சமே சத்தியம். இவை ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடையவை. தர்மம் என்பது வாழ்வுக்கான வாழ்க்கைச் சக்தி. சத்தியம், தர்மம் ஆகிய இரண்டு சேர்க்கைகளையும் ஒன்றிலிருந்து வேறாகப் பிரிக்க முடியாது.

தர்மத்திற்கும் சத்தியத்திற்கும் இடையிலான வேறுபாட்டினை ஒருவர் இப்பொழுது நன்கு புரிந்துகொள்ள முடியும். அதர்வண வேத்தில் முனிவர் குறிப்பிடுவதன் பிரகாரம், ஒவ்வொருவரும் 'நான் இறக்கும் வரை பிரம்மச்சாரி' எனக் கூற முடியும். பிரமச்சாரியம் என்பது பிரம்மனை தேடுவதற்கான வாழ்க்கை முறையாகும், அதாவது உண்மை. மேன்மையான விடயங்களையும் இறுதியில் கடவுளை அடைகின்ற உயரிய விடயங்களை உள்ளடக்கியதாக இது இருக்கின்றது. சாந்தோக்கிய உபநிடதங்களில் யாவும் பிரம்மன் என குறிப்பிடப்பட்டுள்ளது (சர்வம் கலு இடம் பிரம்மா, 3.14.1). அதுமட்டுமல்லாமல், பகவத்கீதை உபதேசிப்பதன் படி, கடவுளை ஏதோவொரு முறையில் உணர்ந்த மக்கள் தன்னைப் பார்ப்பது போலவே அணைத்து உயிரினங்களையும் பார்க்கின்றனர் (அடம் அனுபம்ய 6.32). [10] உண்மையைப் பேசுகின்றவர் உண்மையின் அடிப்படையில் தனது வாழ்க்கையைக் கொண்டு நடப்பதுடன் பிரம்ம வாழ்க்கையை வாழ்பவராகவிருக்கின்றார். மனிதர்கள் உன்னதத்தையும் கடவுளையும் பற்றி அறிந்துகொள்கின்ற பொழுது, அதன் அடிப்படையில் வாழ்கின்ற பொழுது உண்மை அதிகமாக வெளிப்படுகின்றது. இச்சந்தர்ப்பத்திலேதான் அவர்கள் உயிர்களுக்கிடையிலான தொடர்பு முறைகளையும் நன்கு உணர்ந்து கொள்கின்றனர். அவர்கள் தம்மைப் போலவே மற்றவற்றையும் நேசிக்கின்றனர். அனைவருடைய நலனுக்காகவும் செயற்படுகின்றனர் (லோகசம்கிராகா 3.2.0, 25)[11]. அப்பொழுது உலகம் உண்மையின் அச்சில் வலம் வருகிறது. சமயங்கள் உண்மையை நிலைநிறுத்துகின்றன. இவ்வாறான உண்மைகளை நிலைநிறுத்துவதற்கான வழிமுறையாக நிலைமாற்றுக்கால நீதிமுறைகள் திகழ்கின்றன. நிலைமாற்றுக்கால நீதிப்பொறிமுறையில் உண்மையை வெளிப்படுத்துவதானது, தர்மத்தை நிலைநிறுத்துவதற்கான முதற்படிமுறையாகக் கருதப்படல் வேண்டும். இதுவே இவ்வுலகின் அறநெறி ஒழுங்கைப் பேணக்கூடியதாகவிருக்கின்றது.

## 2.3 'உண்மை – வல்லமை' மிக்க சமயம் (சத்தியகிரகம்)

உண்மை மாத்திரமே வெல்லும், பொய் அல்ல
கடவுளை அடைவதற்கான வழி உண்மையால் வியாபித்துள்ளது
தமது அணுகுமுறையின் காரணமாகவே யோகிகளின் எண்ணங்கள் நிறைவேறியுள்ளன. உயர்வான உறைவிடம் உண்மையே

சத்யம் ஈவா ஜயதே நா அந்தம்

சத்யனா பாந்தா விடே தேவியநாத்
யானா அக்ரமனி ரசோ ஹி அப்தாக்மா

[10]அத்மனுபயனா சர்வத்ரா சமம் பசியத்தி யூறிச்னா சுகம்பா யாதீவா துகாகம் சயோகி பரமோ மாதா
சகல உயிரினங்களிலும் முழுமையான சமத்துவத்தைக் காணுகின்ற அந்த யோகிகளை பூரணத்துவம் மிக்க முழமையான யோகிகளாக நான் கருதுகின்றேன். மற்றவர்களுடைய இன்ப, துன்பங்களை தமக்கே ஏற்பட்டவை போல் இவர்கள் உணர்கின்றனர்.

[11]கர்மான்யாஈ சன்சிதிஹிம் அஸ்திரா ஜனகாநாயத் லோக சங்கிரகாம் இவாபீ சங்ஸ்பயான் காதும் அர்ஸி யாத்யாத் அசாரே சிறிஷாத் தார்யெத் இவாதாரே ஜனஹா சாயத் பிரமஞ்சம் குர்த்து லோகாஸ் தாத் அனுவார்த்தே.
தமக்கு வழங்கிய கடமைகளை நிறைவேற்றியதன் மூலம் அரசன் ஜனகனும் மற்றவர்களும் முழுமை பெற்றனர். இந்த உலகத்திற்கு நல்ல உதாரணத்தைக் காட்டக்கூடிய விதத்தில் நீங்கள் உங்களது கடமைகளை நிறைவேற்ற வேண்டும். சிறந்த மனிதர்கள் எவ்வித வேலைகளைச் செய்தாலும் சாதாரண மக்கள் அவற்றைப் பின்பற்றுவார்கள். அவர்கள் எதனைச் செய்தாலும் முழு உலகமும் அதைப் பின்பற்றும் (BG 3:20-21)

யாத்ரா டாட் சத்தியசே பரமம் நிதனம்
(முந்தாக்க – அபனிசாட் 3.3.6)

சத்தியம் அதாவது, உண்மை பற்றிய சில முக்கியமான அம்சங்களை இந்த மந்திரம் தெரிவிக்கின்றது. நிலைமாற்றுக்கால நீதியில் உண்மையைக் கண்டறியும் பொறிமுறைக்கு இது முக்கியமானது.
முதலாவதாக, உண்மையின் அடிப்படையில் சத்தியம் என்ற சொல் பொதுவாக உண்மை என மொழிபெயர்ப்புச் செய்யப்படுகின்றது. உண்மை என்ற சொல்லுக்கு மாறுபட்ட பல கருத்துக்கள் இருக்கலாம். உண்மையான வரைவிலக்கணம் எதனைக் குறிப்பிடுகிறது என்றால், இதற்கு கருத்தார்ந்த இசைவு இருத்தல் வேண்டும். இரண்டாவதாக, யதார்த்தத்தைப் பற்றிய விழிப்புணர்வு அதனுள் இருத்தல் வேண்டும். ஒருவனுடைய மனதிற்கும் வெளியில் காணப்படுகின்ற யதார்த்த உலகிற்கும் இடையில் பக்கச் சார்பற்ற முறையில் சிந்தித்து உறுதிப்படுத்தக் கூடியதாகவிருத்தல் வேண்டும். மூன்றாவதாக, உண்மையெனும் பொழுது, ஒருவர் உண்மையென உளப்பூர்வமாக எதனை நம்புகின்றாரோ அல்லது அவர் அறிந்தது உண்மையாகின்றது. நான்காவதாக, மெய்ப்பொருள் ஆய்வு சார்ந்த உண்மை இருக்கின்றது. ஒரு பொருள் மீதான எமது கருத்திற்கும் உண்மையில் அப்பொருள் காணப்படும் விதத்திற்கும் இடையிலான தொடர்பு. இது உண்மையின் இருப்பு. இறுதியாக, சமயம் சார்ந்த உண்மை. ஒருவருடைய வாழ்க்கையை நம்பிக்கை சூழ்கின்ற பொழுது அவர் உண்மையின் அடிப்படையில் வாழ்கின்றார். அவர் உண்மையென எதனைக் கூறுகின்றாரோ அதனடிப்படையில் வாழ முயற்சிக்கின்றார். உண்மையான மதங்கள் உயர்வான அறநெறிகளுடன் வாழ்வதற்கான அழைப்பினை விடுக்கின்றன. அவை மனித விழுமியங்களான உண்மை, நீதி போன்றவற்றுக்கு முன்னுரிமையளிக்கின்றன.

சீரான சிந்தனை முறை - இதுவே சத்தியத்திற்கான முதல் அர்த்தம் - தர்க்க ரீதியாக முன்வைக்கின்ற பொழுது ஒருவரை நம்பலாம். இருப்பினும் எமது உணர்வுகளின் அடிப்படையிலான தரவுகளையே நாம் உண்மையென ஏற்றுக்கொள்வது சத்தியத்தின் இரண்டாம் அர்த்தமாகும். எமக்கு ஒருவரைப் போதியளவு தெரிந்திருக்குமாயின், அவர் குறிப்பிடுகின்ற சாட்சியத்தை நாம் உண்மையென ஏற்றுக்கொள்கின்றோம். அவர் தான் எதனை உண்மையெனக் கருதுகின்றாரோ அதனையே குறிப்பிடுவதாக நாம் நம்புகின்றோம். இது சத்தியத்திற்கான மூன்றாவது அர்த்தம். சத்தியத்தின் நான்காம் அர்த்தமாக ஒரு நிறுவனத்தின் இருப்பு அவசியப்படுகின்ற பொழுது, உண்மையில் அதனைப் பின்பற்றுகின்றவர்களுக்கு அது அழைப்பு விடுப்பதாக கருதப்படுகிறது. அதனைப் பின்பற்றுகின்றவர்களுக்கும் அதற்கும் தொடர்புடையதாகவிருக்கின்றது. ஆனால் வாழ்க்கையில் ஒருவர் குற்ற ஒப்புதளிக்கின்ற பொழுது நாம் அதனை விட்டு அகன்றுவிடுகின்றோம். இது சத்தியத்திற்கான ஐந்தாவது அர்த்தமாகும்.

கடவுள் இருக்கின்றாரா இல்லையா என்ற விவாதத்திற்கு உங்களைத் திருப்திப்படுத்தக் கூடிய ஒரு பதிலை என்னால் முன்வைக்க முடியாமல் போகலாம். இருப்பினும் அன்பே கடவுள் என நான் நம்புகின்றேன். ஆனால் தொடர்ச்சியாக என்னை ஒரு அன்பான, கருணைமிக்க, சிறந்த மனிதன் என நீங்கள் கருதுவீர்களாயின், உங்களுக்கு வேறு எந்தவிதமான வாதங்களும் அவசியமில்லை. என் வாழ்க்கையே நான் முன்வைக்கின்ற மிகச்சிறந்த உதாரணமாகும். அதுவே மிகச்சிறந்த வாதமும் ஆகும்.

சாட்சியம் அல்லது சான்றுகள், அவை கூறப்படுவதனால் உண்மையாவதில்லை. அவற்றை உண்மையென பிரகாணப்படுத்துவனாலேயே அவை உண்மையாகின்றன. உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு முன் வந்து நபர்கள் தங்களுக்கு நடந்தவற்றை கூறுகின்ற பொழுது அவற்றைக் கவனமாகச் செவிமடுத்தல் வேண்டும். அவர்கள் அங்கே வருகைதந்தார்கள் என்பதற்காக நாம் வெறுமனே செவிமடுக்க வேண்டியதில்லை. ஆனால் தான் எதனை உண்மையென நம்புகின்றாரோ, அதனை அங்கு அவர் தெரிவிப்பதனாலேயே அது மதிக்கத்தக்கது. "உண்மை மாத்திரமே வெற்றியளிக்கும்" முரண்பாடுகளுக்குப் பின்னரான சூழ்நிலையிலுள்ள உண்மையைக் கண்டறியும் பொறிமுறைகளானது பிரபஞ்ச ஒழுங்கைப் பின்பற்றுதல் வேண்டும் (தர்மம்).

மேற்படி மந்திரம் அடுத்ததாக மதத்தின் செயற்பாட்டினை கூற விளைகிறது. கடவுளை அடைவதற்கானதொரு வழியாகவே ( பந்த ) அது குறிப்பிடப்படுகிறது. அத்தகைய கோட்பாடுகளிள் ஒரு அங்கமாக சமயத் தலைவர்கள் மனிதாபமிக்க தேசிய வாதம், ஆழ்ந்த மனிதாபிமானம், அத்தகைய கோட்பாடுகளைக் கட்டமைப்பதன் ஓர் அங்கமாக நிலைமாற்றுக்கால நீதியையும் தாபித்தல் வேண்டும். கடவுளை அடைவதற்கான வழி மதம் என்ற முறையில் மதம் தனது அடையாளத்தை மீள் கண்டுபிடிக்கின்ற பொழுதும், அதாவது இறைவனை அடைவதற்கான வழி எங்கும் வியாபித்துள்ள உண்மையென உணர்கின்ற பொழுது இது வாய்ப்புள்ளதாகின்றது. சமாதானத்தை அடைவதற்கான கருவி மதம் எனில், அதனுடனான எமது தொடர்புகளை நாம் தூய்மைப்படுத்தல் வேண்டும். இதனை வெறுமனே சமூக அடையாளத்திற்க்கோ அல்லது சமூகப் பாதுகாப்பிற்காக மாத்திரமோ பயன்படுத்தல் கூடாது. இவ்வாறு ஏற்கத்தகுதியற்ற செயற்படுகளினால் பல சந்தர்ப்பங்களில் மதத் தலைவர்களும் மதகுருமார்களுமே மதத்தின் வீழ்ச்சிக்கு அடிப்படைக் காரணிகளாகவிருக்கின்றனர்.

உச்சமான உண்மை கடவுளிடமே காணப்படுகின்றது என அந்த மந்திரத்தின் இறுதியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வரலாற்றை நோக்குகையில் ஒரு சமூகம் தன்னிடம் மாத்திரமே முழுமையான உண்மை இருக்கின்றதென நினைக்கின்ற பொழுது அது வன்முறையுடன் செயற்பட முயல்கின்றது.

கடவுளிடம் மாத்திரமே உயர்வான உண்மைகள் இருக்கின்றன. நாம் வெறும் பக்தர்கள் மாத்திரமே. இத்தகைய விழிப்பூட்டல்கள் எமது சொந்த நம்பிக்கைகளை ஆராய்கின்றன: அவை நலன்களை மேம்படுத்துகின்றனவா? அமைதிக்கும் சாந்திக்கும் அவை வழிவகுக்கின்றனவா? இந்த உண்மைக்கான பயணம் - பணிவு, நாம் பிழை விடுவோம் என்ற புரிதல்கள், அத்தகைய பிழைகளுக்காக மன்னிப்புக் கோருகின்ற பண்பு சகல மனிதர்களிடமும் சமூக நீதியையும் சுற்றாடல் சார் குணப்படுத்தல்களையும் ஏற்படுத்தும் முகமாகச் செயற்படுதல் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். மதமானது உண்மை வல்லமையாகவும் மதத்தலைவர்கள் உண்மையை நடைமுறைப்படுத்துவர்களாகவும் கருதும் பொழுது எதிர்காலத்தினைக் கருத்தில் கொண்டு முரண்பாடுகளின் அடிப்படை என்ன எனவும் மீள் நிகழாமைக்கான வழிமுறைகள் யாவை எனவும் ஆராய்வது எளிதாகிறது.

## 2.4 சமயமும் உண்மை தொடர்பான ஆழ்ந்த சிந்தனையும்

ப்ரதானக உபநிடதத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. "... ஹிர்தயனா ஹீ சத்தியம் ஜனாத்தி, ஹிர்தய ஹீ ஈவா சத்யம்" உண்மையை இதயத்தினால் (மனதினால்) அறிந்துகொள்வது மாத்திரமல்ல, அது இதயத்தில் வாழ்கிறது. உண்மை தொடர்பான ஆழந்த வெளிப்பாடு ஒரு நேர்மையான மனிதனிடம் இருக்கின்றது என்பதை நாம் புரிந்துகொண்டால் இதனை இலகுவாக விளங்கிக்கொள்ள முடியும் . இந்து மதம் உள்ளடங்கலாக பல்வேறு விதமான சமயங்கள் கடவுள் அன்பு மிக்கவர், அன்பு செலுத்துபவர் எனக் கருதுகின்றன. அத்தகைய கடவுள் முன்னிலையில் எங்களது விழிப்புணர்வுகள் அன்பாகப் பரிணமிக்கின்றன. கிருஷ்ணரின் உபதேசம் எனக் கூறப்படும் பகவத் கீதையில் அதிக பக்தியுடையவன் (பர பக்தி) கடவுளை அறிவான் என அர்ஜுனனுக்கு கிருஷ்ணர் தெரிவிக்கின்றார் (பகவத்கீதை 18:54-55)[12]. அன்புடன் கடவுளை நோக்கும் போதே நாம் அவரை உண்மையாக அறிகின்றோம் மேலும் மனிதர்களையும் நாம் இவ்வாறான அன்புடனேயே நோக்குவதன் மூலமே அவர்களையும் உண்மையாக அறிய முடியும்.

பகவத்கீதையானது அதன் வாசகர்களை உண்மையான மற்றும் உண்மையற்றவற்றினை (விவெகா) பிரித்தறியவும் குருஷேத்திர போரில் அர்ஜுனன் யுத்தம் செய்ய விரும்பாத போது அவன் தனது போர்க்கள கடமைகளில் இருந்து தவறுவது (ஷீவ்லான்ட் 2007) சரியான புரிந்துணர்வை எடுத்துக்காட்டுவதாகவும் இருக்கின்றது. பகவத்கீதையில் ஷத்ரிய தர்மத்திற்கு சார்பான வாதங்கள் கீதையின் தார்மீக நெறிகளுக்கு முரணானதாகவும் இருக்கின்றது. ஆன்மீகப் பாரபட்சத்தை நெறிமுறை சார்ந்த பாரபட்சமாக கீதை இணைக்கிறது. மற்றவர்களையும் சமமாக நோக்க வேண்டுமெனக் குறிப்பிடப்படுகிறது. தம்மைப்போல் மற்றவர்களையும் நோக்க வேண்டும், இதுவே தெய்வீகப் பண்பின் அடிப்படையாகும், ஆன்மீக ரீதியாகவும் ஒழுக்க ரீதியாகவும் பாரபட்சங்கள் காட்டப்படுகின்றன, (விவேகா) அத்தியாயம் 6 இன் பல்வேறு வாசகங்கள் இவ்வாறே குறிப்பிடுகின்றன (பகவத்கீதை-6:7, 9, 12, 19).[13]

ஒருவரது உள மற்றும் நெறிமுறை வாழ்க்கையானது வெறுப்பற்றதாகவும் பிணைப்புகள் அற்றதாகவும் இருத்தல் வேண்டும். உதாரணமாக, சில நண்பர்களுக்கு பாரபட்சம் காட்டுதல், இன்னுமொரு சந்தர்ப்பத்தில் தன்னுடைய எதிராளிக்கு பாரபட்சம் காட்டுதல். மனதிற்கும் வெளி உலகிற்கும் இடையிலான இவ்வித பிணைப்புகள் நபருக்கு நபர் மாற்றமடைகின்றன. இவற்றை மெய்ப்பொருள், அறிவின் அடிப்படையிலேயே ஆராய்தல் வேண்டும் மற்றும் அவர்களுக்கும் கிருஷ்ணருக்கும் இடையிலான பிணைப்பிலும் இது தங்கியுள்ளது. மற்றவர்களுள் தன்னைக் காண்பவன் கிருஷ்ணரையும் காண்கின்றான். பாரபட்சம் காட்டுகின்ற நெறியானது பங்குபற்றுதல் என்ற கோட்பாட்டில் தங்கியுள்ளது. ஒழுக்கத்துடனும், எல்லா விடயங்களையும் சமத்துவான கண்களுடனும் நோக்குதல், "உண்மையான யோகிகள் தங்களது மனசாட்ச்சியை கடவுளுடன் இணைத்து சமத்துவ கண்களுடன் நோக்கும் போது அனைத்து உயிரினங்களிலும் கடவுளையும் கடவுளிடம் அணைத்து உயிரினங்களையும் பார்க்கின்றனர்." போன்றது (பகவத்கீதை 6:29-31)[14]. ஓரிடத்தில் ஒருவாறு இருக்கின்ற ஒருவர் மற்றொரு இடத்தில் வேறுவிதமாக

---

[12]பிரம்ம பூதா பிரசன்னத நாசொச்சே நாகன்கெசாத்தி சமாசர்வேசு புர்சாசி மாத் பக்காத்திம் லப்காதே பரம்.
ஆழ்நிலை பிரம்மனாகவிருக்கின்றவன் அவனுடைய உணர்வுகள் அமைதியாகவும் உள ரீதியாக
சாந்தமாகவும் இருக்கும். அவன் துன்பப்படவும்மாட்டான் ஆசைப்படவும்மாட்டான். சகல உயிரினங்கள் மீதும் ஒரேவிதமாக அன்பு செலுத்துவான். அத்தகைய யோகியே என்னிடம் உயர்ந்த பக்தனாகத் திகழ்வான்.
பகத்தியா மாம் அபிகிஜனாத்தி யாவன் யாசு சாஸ்மி தத்தாவா.
தத்தோமாம் தத்தவாத்தோ இஞ்சவாத்தே விஸ்காதே தாத் அனந்தரம்.
என்னிடம் எவன் உண்மையான பக்தியுடன் வருகின்றானோ அவன் நான் யாரென்பதை உணர்ந்துகொள்வான். என்னை அறிந்துகொண்டதன் பின்னர் என்னுடைய பக்தன் என்னை முழுமையாக அறிந்தவனாக மாறுகின்றான்.

[13]"குளிராகவிருந்தாலென்ன வெப்பமாகவிருந்தாலென்ன, ஆனந்தம் அல்லது துன்பமாகவிருந்தாலென்ன, மதிப்பு அல்லது இகழ்ச்சியாகவிருந்தாலென்ன, சாந்தமாக இருப்பதில் வல்லமை பெற்றவன் உயர்ந்தவனாவான். தனது தோழர்கள் நேசம் மிக்கவர்கள் எதிராளிகள், மத்தியஸ்த்தர்கள், நடுநிலையானவர்கள், நண்பர்கள், நல்லவை, கெட்ட மனிதர்கள் ஆகியவற்றிலிருந்து தனது விருப்பமின்மையை ஒதுக்கிவைப்பான். அவன் தனது சிந்தனையில் கவனத்தைச் செலுத்துவான். வெறும் உணர்வுகள், எண்ணங்கள் ஆகிய செயற்பாடுகளைத் தவிர்ப்பான்: அந்த ஆசனத்தில் அமர்ந்து தூய்மை அடைவதற்கான ஒழுக்க ரீதியான பயிற்சிகளை மேற்கொள்வான். காற்றில் ஒரு விளக்கு ஆடவதைப் போல் அவன் தடுமாறமாட்டான். உண்மைக்கான உவமானமாக இவனைக் கருத முடியும். ஒழுக்கத்திற்கான உவமானமாக இவனைக் கருதமுடியும். சுய ஒழுக்கத்தைப் பேணுவான்"(பகவத்கீதை யுத்த காலத்தில் கிறிஸ்ணாவின் ஆலோசனை 1986).

[14]அறபுபூத்தா சித்தம் அத்தம்மம் சர்வபூத்தானி சத்மனி
இக்சதே யோக இகத்தமா சர்வத்தா சமாதர்ஷனா. னக

இருத்தல் முடியாது. மேலும், எல்லா உயிரினங்கள் மத்தியிலும் கடவுள் வாழ்கின்றார். கடவுள் இருக்கின்றார் என ஊக்குவிப்பதுடன் கடவுள் தொடர்பில் யதார்த்தபூர்வமான பங்குபற்றுதல்களும் இடம்பெறல் வேண்டும். இவ்வாறு அடிப்படை விடயங்களை உணர்ந்து பங்குபற்றுகின்ற பொழுது எல்லா விடயங்களையும் கடவுள் புனிதமாக்குகின்றார்.

துறத்தல் பற்றி கீதை என்ன குறிப்பிடுகின்றது என்பதை சந்தேகத்திற்கு இடமின்றி புரிந்துகொள்ளல் வேண்டும். துறத்தல் எனும் பொழுது வெளியுலகம் சார்ந்த பிணைப்புகளை மாத்திரம் நாம் துறப்பதல்ல. நபர்கள் பற்றி அறிவார்ந்த முறையில் நாம் எவ்வாறு வகைப்படுத்தியுள்ளோமோ அவையும் மனிதர்கள் பற்றிய நமது கட்டமைப்புக்களும் உள்ளடங்கும். துறத்தல் எனும் பொழுது அது தெளிவான சமூக, ஒழுக்க பின்விளைவுகளைக் கொண்டுள்ளது. எவ்வித ஆசையோ அல்லது வெறுப்போ அற்ற கர்ம யோகிகளை துறவிகளாக நாம் பரிசீலித்தல் வேண்டும். அவர்கள் சகல பாசாங்குகளிலிருந்தும் விடுபட்டவர்கள். பொருள் சார்ந்த பிணைப்புகளில் இருந்தும் அவர்களால் இலகுவாக விடைபெற முடியும் (பகவத்கீதை 5:3,18)[15].

கிருஷ்ணரைப் புரிந்துகொள்கின்ற பொழுது சகல உயிரினங்களையும் ஒரேவிதமாக நோக்க வேண்டுமென்பதையும் நாம் அறிந்திருத்தல் வேண்டும். கிருஷ்ணர் எல்லா இடங்களிலும் இருக்கின்றார். உயிரினங்கள் பற்றிய உண்மையை வெளிப்படுத்துவதன் மூலம் தார்மீக ரீதியான பொறுப்புக்கூறலுக்கு அழைப்பு விடுப்பதே கிருஷ்ணரின் தொலைநோக்காகக் காணப்பட்டது. இவ்வாறு மெய்யறிவு சார்ந்த பங்குபற்றுதலுக்கு அதாவது, மெய்யறிவு சார்ந்த யதார்த்தபூர்வமான பங்குபற்றுதலுக்கு அழைப்பு விடுப்பதானது, மற்றவர்கள் மீது கொண்டிருக்கின்ற அனுதாபத்திற்கு அப்பாற்றப்பட்டு அவற்றிலிருந்து விடுபட்ட நிலையிலேயே இது விடுக்கப்படுகின்றது. ஒருவர் மற்றோருவருள் தன்னையும் தன்னுள் மற்றோருவரையும் உணர்தல் வேண்டும். இது நிலைமாற்றுக்கால நீதிச் சூழமைவிலும் முக்கியமான தொடர்புடையதாகும்.

## 2.5 பாரபட்சமற்ற சேவைக்கான பாதை சமயம் (நிஸ்கம கர்ம)

பாரபட்சமற்ற சேவைக்கான பாதை கர்மயோகம், இந்த உலகின் காத்திரமான வாழ்க்கையை விட்டுவிடாமல் தன்னை உணர்ந்துகொள்வதற்கும் கடவுளை உணர்ந்துகொள்வதற்குமான வழி செயல் ஆகும். கர்ம யோகத்தில் ஈடுபடுபவர்களுக்கு அவர்களது வேலையே தெய்வீகமாகும். கர்மம் என்ற வார்த்தை வாய்மொழியை அடியொட்டிய மூலமான ‘கிரி’ என்ற சொல்லிலிருந்து தோன்றியதாகும். இதற்கு அர்த்தம் செயற்படு, வேலை செய் மற்றும் நடைமுறைப்படுத்து என்பதாகும். கர்மயோகம் ஆனது, பொதுவான செயல்களையும் (கர்மா) கடமை சார்ந்த செயல்களையும் (தர்மா) ஆன்மீகம் சார்ந்த செயல்களையும் (சம்ஸ்காரா) சமூக சேவைகள் சார்ந்த செயலையும் (யஜானா) உள்ளடக்கியதாகக் காணப்படுகிறது.

பகவத்கீதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை செயலின்மை கண்டிக்கப்படுகின்றது. மனித இருப்பிற்கு செயல்கள் பிரிக்க முடியாததோர் அம்சம் எனக் குறிப்பிடப்படுகிறது. “எந்தவொரு மனிதனும் ஒரு கனப்பொழுதும் கூட வேலை எதுவும் செய்யாமல் இருக்க முடியாது. உலகில் பிறந்த எல்லா உயிரினங்களும் அவற்றின் தன்மைக்கேற்ற ஏதோ வேலையைச் செய்துதான் ஆகவேண்டும்” (பகவத்கீதை 3:5)[16]. உண்மையான துறவி செயல்களை கைவிட்டவனல்ல அச்செயல்கள் மீதுள்ள சுயநல பற்றைத் துறந்தவன். “உயர்ந்த தெய்வீக ஆளுமைபடைத்த கிருஷ்ணர் குறிப்பிட்டதாவது, ஆசையினால் உந்தப்பட்ட செயல்களை கைவிட்டவனே சன்னியாசி என அறிவுபடைத்தவன் புரிந்துகொள்கின்றனர். பலனை எதிர்பாராது தனது கடமையைச் செய்பவன் தியாகி எனக் கற்றவன் உணர்கின்றான் (பகவத்கீதை 18:2)[17]. “வாழக்கையில் ஒருவன் முன்னேற வேண்டுமானால் அவன் செயற்பட வேண்டும்”. அதாவது சரியாகச் செயற்பட வேண்டும் (தர்மா). இதுவே செயல் சார்ந்த தர்மம் ஆகும். மேலும், சில செயல்களை கைவிடல் வேண்டும். எல்லாவற்றையும் கைவிடக்கூடாது. பகவத் கீதையில் ஆன்மீகக் கர்ம யோகம் தொடர்பில் இரண்டு அம்சங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

நிஸ்கம கர்மா அதாவது, ஆசைகளைக் கைவிட்ட நிலையில் கடமையைச் செய்வது. இவ்வாறு ஆசைகளைக் கைவிட்டு உள்ளார்ந்த சுதந்திரத்துடன் இயங்குவது கர்ம பகல தியாகா எனவழைக்கப்படும். “உங்களுக்கு வழங்கப்பட்ட கடமைகளை விதந்துரைக்கப்பட்டவாறு நீங்கள் செய்தல் வேண்டும். ஆனால் அதன் பலனை அனுபவிப்பதற்கு உங்களுக்கு உரிமையில்லை. நீங்கள் மேற்கொண்ட செயல்களுக்கான பலன் உங்களினால் தான் கிடைத்தது என நினைக்க வேண்டாம். அதேவேளை, செயற்படாமலும் இருக்க வேண்டாம்” (பகவத்கீதை 2:47)[18]. தான் செய்த வேலைக்கான பலனை மனம் எதிர்பார்க்கக் கூடாது. எனவே பகவத்கீதையின் அடிப்படையில் முழுநிறைவான யோகி கடவுளாக வாழ்ந்து கடவுளின் விருப்பங்களை இவ்வுலகில் நிறைவேற்றி அறிவினை தன்னகத்தேகொண்டு சமூகத்திட்டற்காக வேலை செய்பவனே ஆவான். இந்த உலகிலிருந்து ஓய்வு பெற்றவன் சன்யாசி அல்ல.

---

[15]நேயாஷா நித்தியா ஷன்யாசி யோனா திவாஸ்தி நாகங்கசாத்தி நிர்வதோஹீ மகா பகோ சுக்கம் பந்தத் பிரமச்சரியாத்தி.
[16]நா ஹீ கஸ்ஜிதி கசன்னம் அப்பிஜத்து திரிஸ்தராரகம்கிறித் கார்யே அயவா கர்மா ஷாவா பிரகிர்த்தி ஜயகுண்ணயி.
[17]கம்யன்னம் கர்மனயம் நியாஷம் ஷன்னியாஷம் கவயோவித்து சர்வகர்ம பகலா தியாகம் பிரகாஷ் தயாஜின் விக்ஷா ஸஹாஜன்.
[18]கர்மனி இவாதிக்கராஷ் தேமா பிகேசு கந்தசானா மாகர்மா பகல எத்தார் புகர்மாதே ஷங்கோ ஷிவகர்மனி.

அதேபோல். எல்லவற்றையும் கைவிட்டவனும் சன்யாசி அல்ல. ஆனால் பாரபட்சமற்ற குடும்பஸ்தருக் கும் சன்யாசியாகும் தகுதியுண்டு. இவரே நிஸ்கம கா்மயோகி ஆவாா்.

ஒருவனது கடமையில் இரண்டாவது பிரதான அம்சம் லோகசம்ப்கிரகா (உலக ஒற்றுமை அல்லது பிரபஞ்ச நன்மை) அதாவது, உலக நன்மைக்காக வேலை செய்வதாகும். ஒருவன் தனது கடமைகளை தியாக உணா்வின் அடிப்படையில் செய்வது யாஜ்நா எனப்படும். மனிதா்கள் தமது செல்வத்தையும் செயல்களையும் கடவுளின் சேவைக்காக அா்ப்பணிக்கின்ற பொழுது, அவா்களுடைய வாழ்க்கை யாஜ்நாவாக மாறுகிறது. மேலும், காமத்தின் சகல கட்டுப்பாடுகளிலிருந்தும் விடுபட்டு யாஜ்நாவுக்காக வாழ்கின்ற பொழுது இத்தகைய யோகிகள் நோ்மையான மனப்பாங்குடனும் சுய தியாகத்துடனும் இயற்கைக்காகவும் சமூகத்திற்காகவும் சேவை செய்கின்றனா். இவா்கள் பொருள் சாா்ந்த சகல பிணைப்புகளிலிருந்தும் தம்மை விடுவித்துக் கொள்வதோடு, அவா்களது அறிவு தெய்வீக அறிவோடு இணைக்கப்படுகிறது. இவா்கள் சகல செயல்களையும் தியாகத்துடன் கடவுளின் பாதையில் செய்வதனால் சகலவிதமான கா்மவினைத் தாக்குதல்களிலிருந்தும் விடுவிக்கப்படுகின்றனா்[19].

கா்மயோகம் என்பது “சகலவிதமான உயிரினங்கள் மீதும், அவற்றின் நலன் மீதும் ஆா்வம் மிகுந்த அக்கறைகள்”. இங்கு மனிதா்கள் மாத்திரமல்ல ஏனைய உயிரினங்களும் உள்ளடக்கப்படுகின்றன. மனிதா்களுக்கும், வாழ்க்கைக்கு உயிரூட்டுகின்ற இயற்கைக்கும் இடையில் பரஸ்பரம் ஒன்றோடொன்று வளா்க்கின்ற உறவு முறையினால் மாத்திரமே அனைவருக்கும் உகந்த நலன்களைக் கொண்டுவர முடியுமென யோகிகள் உணா்ந்தனா். “உங்களுடைய தியாகத்தின் காரணமாக தேவலோகத்தில் இருக்கின்ற கடவுள்கள் மகிழ்ச்சியடைகின்றனா். மனிதா்களுக்கும் தேவலோக கடவுள்களுக்கும் இடையில் ஒற்றுமை நிலவுகின்ற பொழுது அங்கே அனைவருக்கும் சுபீட்சம கிடைக்கின்றது” என பகவத்கீதையும் இதனை குறிப்பிடுகின்றது (பகவத்கீதை 3:11)[20]. பரந்தளவில் சமூகத்தையும் சுற்றாடலையும் உணா்ந்து கொள்ளாதவருக்கு சுய அறிதல்கள் இருக்க முடியாது. இதுமட்டுமன்றி, அனைத்துலக ஒற்றுமைக்காக (லோக சம்கிரகா) தா்மத்தைப் பின்பற்றுவதன் மூலம் அனைவருடைய நலனுக்காகவும் ஒருவன் வேலை செய்கின்றான்.

இதன் மூலம் நிலைமாட்டற்றுக்கால நீதி இத்தகைய ஆன்மீக ரீதியான செயல் அல்லது கடமைகளில் ஒன்றென புரிந்து கொள்ளலாம். நிலைமாற்றுக்கால நீதிச் செயற்பாட்டாளா்கள் உள்ளகச் சுதந்திரத்துடன் செயற்படுவதற்கான வாய்ப்பினை கா்ம யோகம் வழங்குவதுடன் (நிஸ்கம கா்ம) (ஆசையில்லா செயல்), இவா்கள் சா்வ உலக நலன்களுக்காகவும் பிரபஞ்ச நலக்களுக்காகவும் செயற்பட எதிா்பாா்க்கப்படுகின்றது. சரியாகவும் தியாகம் மிக்க முறையிலும் வேலை செய்வதை இது வரவேற்கின்றது. மேலும், பிறிதொருவா் மற்றொருவருக்காக தன்னிடமிருக்கின்ற எல்லாவற்றையும் தியாகம் செய்வதற்கு முன்வரவேண்டும். இதன் அடிப்படையில் அவர் செயல்களில் சிலவற்றைக் கைவிடலாம். ஆனால், அனைத்து செயல்களையும் கைவிட்டுவிடக்கூடாது என இது குறிப்பிடுகிறது.

### 2.6 சமயம் ஒரு வன்முறையற்ற பாதை (அகிம்சை)

சகல உயிரினங்களும் ஒற்றுமையாக வாழ வேண்டுமென்ற கொள்கையின் அடிப்படையிலான நெறிமுறைகள் அகிம்சையிலிருந்து தோன்றியது. இந்து மதத்தின் பல்வேறு விதமான சட்டங்கள், நெறிமுறைகள், பக்தி சாா்ந்த இலக்கியங்கள் ஆகியவற்றில் இது முக்கிய இடத்தைப் பெறுகின்றது.

உயா்வான யதாா்த்த முறைகள் பற்றி பல இடங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளதால், சகல உயிரினங்கள் தொடா்பிலும் வன்முறையற்ற முறையில் நடந்து கொள்வதே சிறந்த மனப்பாங்காகும். அஹிம்சை எனும்பொழுது, மனிதா்களுக்கும் இயற்கைக்கும் இடையில் வன்முறையற்ற முறையில் வாழ்வதாகும். அஹிம்சை என்ற சொல்லுக்கான அா்த்தத்தை முழுமையாக மொழிபெயா்ப்பது சிரமமாகும். பொதுவாக வன்முறையின்மை, காயப்படுத்தாமை, கொலை செய்யாமை போன்ற கருத்துக்களை இது புலப்படுத்துகிறது. இருப்பினும் சமஸ்கிரதத்தில் இது ஆழமான கருத்துக்களை உள்ளடக்கியுள்ளது. இதன் ஆரம்ப ‘*அ*’ வானது ப்ரிவாட்டிவம் அதாவது மறுத்தல் எனப்பொருட்படும். ஹிம்சா என்ற சொல் ‘ஹேன்’ என்பதிலிருந்து தோன்றியது. இதற்கான பொருள் தாக்குதல், கொலைசெய்தல், துன்பமிழைத்தல் போன்றன. ஹிம்சா என்ற சொல் வெறுமனே வெளியில் மேற்கொள்ளப்படும் தாக்குதல் அல்லது ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை மாத்திரம் எடுத்துரைப்பதல்ல, மாறாக இது ஒருவருடைய உள்ளாா்ந்த ஆசையையும் குறிப்பிடுகிறது. ஆகவே வெறுமனே வன்முறையற்ற நிலையை அஹிம்சை என நாம் கூறமுடியாது. இங்கு தாக்குவதற்கான ஆசைகள் கைவிடப்படல் வேண்டும். மேலும், பிராமண மற்றும் சிராமண மரபுகளின் அடிப்படையில் தயா (கருணை), காருண்யா, இரக்கம், ஷாமா (பொறுமை) ஆகியன அகிம்சையின் ஒழுக்க ரீதியான கட்டளைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மகாத்மா காந்தி அவா்களைப் பொறுத்தவரை, அஹிம்சையானது வாழக்கையின் அடிப்படைச் சட்டமாகும். இதுவே மனித வாழ்க்கையின் இலக்காகும். இவ்வகிம்சை அன்புடனும் உண்மையுடனும் கடவுளுடனும் ஒன்றாகப் பிணைந்து காணப்படுகிறது. மகாத்மா காந்தி அவா்களைப் பொறுத்த வரையில், உலகளாவிய ரீதியில் அகிம்சை நடைமுறைப்படுத்தப்படும் பொழுது, சுவா்க்கத்திலிருக்கின்ற கடவுள் இந்தப் பூலோகத்திற்கு வருகின்றதாக கருதினாா் (மெரட்டன் 1965, பக்கம் 7). மேலும், அவரால் வன்முறைக்கான

[19]கத-சங்கஷ்யா முக்தஷ்யா ஜனஸ்வித்ரா ஸ்வதேசா யஜநாயச்தரகா கா்மா சமகிரகம் ப்ராவிலியாதே.

[20]தேவன் பகயத்தானே தீதேவா பகவன்தன்வா பரஸ்பிரம்மம் பஹவயனாத் ஸ்ரயா பரம் அவாபிரயாஷதா.

பிரதியீடாக ஒத்துழையாமை குறிப்பிடப்பட்டது. ஒத்தழையாமை எனப்படுவது, விருப்பமற்ற மோசமான நடவடிக்கைக்கு எதிராக ஆட்சேபனை தெரிவிப்பதாகும் (மெரட்டன் 1965, பக்கம் 19). மகாத்மா காந்தி யால் குறிப்பிடப்பட்ட அஹிம்சை விடயங்களில் பிரதான விடயம் இந்து மதத்தில் காணப்படுகிறது. சகல உயிரினங்களும் ஒன்றே என்ற கொள்கை இங்கு வலியுறுத்தப்படுகிறது. மனிதர்கள் மாத்திரம் அல்ல சகல உயிரினங்களும் ஒரே மூலத்திலிருந்து வந்திருக்கின்றன. இது அல்லாஹ்வாக இருக்கலாம், கடவுளாக இருக்கலாம் அல்லது பரமேஸ்வரராக எனக்கருதப்படுகின்றது.

சமாதான கலாசாரத்தை அடிப்படையாயக் கொண்டும் அஹிம்சை என்ற பாரம்பரியம் பற்றி நாம் எடுத்துரைக்க முடியும். அஹிம்சை எனும் பொழுது, வன்முறையை முழுமையாக எமது மனதிலிருந்து களைந்தெறிய வேண்டும். இச்சந்தர்ப்பத்தில் அஹிம்சையானது சமாதானக் கலாசாரம் மற்றும் அன்பு நிறைந்த நாகரீகம் ஆகியவற்றை அடிப்படையாகக் கருதி அழைப்பு விடுக்கின்றது. அஹிம்சையை மகாத்மா காந்தி அவர்கள் மிகவும் சரியாக பொருட்கோடினார். அதனை அன்பு மற்றும் உண்மைக்கு நேர்மையாக இருத்தல் எனத் தெரிவித்தார். இதையே அவர் சத்தியாக்கிரகம் அல்லது உண்மையைத் தழுவுதல் எனக்குறிப்பிட்டார். பிரிக்கப்பட்ட இந்த உலகத்தில் உண்மையைத் தழுவுதல் என்பது அன்பையும் சமாதானத்தையும் தழுவுவதற்கான போராட்டமாகும். சமாதானத்திற்கான கலாசாரம் மற்றும் அன்பு நிறைந்த நாகரீகம் ஆகியன மலர வேண்டுமானால் நாம் எமது வாழ்க்கையை இத்தகைய பெறுமதிகளை உள்ளடக்கி எடுத்துக்காட்டாக வாழவேண்டும்.

## 2.7 மதமும் மனிதர்களின் புனிதத்துவமும்

கடவுளும் மனிதனும் ஆன்மசாரம் (ஆத்மான்), மற்றும் தூய விழ்ப்புணர்வுகளும் (கைத்தாண்யமாத்ரா) கொண்டவர்கள். இவர்களுக்கிடையில் மிகவும் நெருங்கிய உறவுமுறை காணப்படுகிறது. அவை, பரமாத்மம் மற்றும் ஜீவனாத்மம் என்பனவாகும். அத்வைத்திய தத்துவஞானியான சங்கரா மனித ஆன்மாவுக்கும் கடவுள் ஆன்மாவுக்கும் இடையிலான நெருங்கிய தொடர்பு முறைகள் பற்றி எடுத்துரைக்கிறார். இது தாத்மயா எனவழைக்கப்படும். அதாவது, ஒருவருள் கடவுள் இருக்கின்றார் என்பதாகும். முன்தக உபநெடுதங்களின் பிரகாரம், மனித ஆன்மாவும் , தெய்வீக ஆன்மாவும் இரண்டு பறவைகளாக கருதப்படுகின்றது. இரண்டு நண்பர்களாக இது குறிப்பிடுகிறது. அதாவது, ஒரே மரத்தின் கிளைகளில் இவர்கள் அமர்ந்திருக்கிறார்கள். மறுபுறம், தெய்வீக ஆன்மா எனும் பொழுது அது மனித நடவடிக்கைகளின் உள்ளகச் செயற்பாடு எனவும் கூறப்படுகின்றது.

எனவே, மனிதர்களுக்குச் சேவையாற்றுவது உண்மையில் கடவுளுக்கு ஆற்றுகின்ற சேவையாகும். இத்தகைய கருத்துக்களை நார-நாராயன அல்லது தாரிதார-நாராயன போன்ற எண்ணக்கருக்களிலும் காணமுடியும். மனிதர்கள், குறிப்பாக ஏழைகள் கடவுளினால் உருவாக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த அகத்தூண்டலே சுவாமி விவேகானந்தர் அவர்களை ஏழைக சார்பாக பணியாற்றுவதற்குத் தூண்டியது. இவருடைய ஆஷ்ரமங்கள் ஏழைகளுக்காக பணியாற்றின. இது பரமாத்மா சார்ந்ததொரு செயற்பாடாகும். இவரது சேவையும் பகவத் கீதையை மையமாகக் கொண்டு காணப்பட்டது. அதாவது, லோக்சமாக்ரஹா என்பதை அடிப்படையாகக் கொண்டது. உலகிலுள்ள சகல உயிரினங்களும் ஒற்றுமை, நன்மை ஆகியவற்றைப் பேணுகின்ற அதேவேளை, அவற்றின் நலன்களுக்காகவும் கருமமாற்ற வேண்டும். இவ் உலகின் நலனுக்காக சேவையாற்றி, பூரணத்துவம் பெற்ற யோகி ஜனக அவர்கள் ஒரு சிறந்த உதாரணமென, அர்ஜுனனுக்கு உபதேசிக்கின்ற பொழுது கிருஷ்ணாபரமாத்மா தெரிவிக்கின்றார். இதை மக்களிடம் கொண்டடையச் செய்து சமாதனத்தை நிலைநாட்டும் முகமாக அனைத்தும்மறிந்த கிருஷ்ணர் மறுபிறவியெடுத்து இவ்வுலகில் பணியாற்றினார்.

## 2.8 தொகுப்பு

பரஸ்பரம் ஒருவரை மற்றொருவர் தங்கியிளுள்ளவர்கள் என்ற முறையில் இந்து மதப் பாரம்பரியமானது சமூகப் புரிதல் சார்ந்த உணர்வினை வழங்குகின்றது. இது சிந்து மரபுகளில் ஒன்றான 'வேற்றுமையில் ஒற்றுமையைச் சார்ந்ததாகும்': எகம் சத் உப்ரா பகோதா வேதாந்தி (உண்மை ஒன்றே, இருப்பினும் அது தொடர்பில் பல்வேறு விதமான கண்ணோட்டங்கள் காணப்படுகின்றன). இந்த வேத வெளிப்பாடே இந்துக் கலாசாரத்தின் இதய நாதமாகக் காணப்படுகிறது. உண்மையையும் பரமாத்மாவையும் தெய்வீக வாழ்க்கையையும் தேடுவதற்கான எமது விடா முயற்சிகள் எமது வாழ்க்கையினதும் சிந்தனையினதும் சகல அம்சங்களிலும் வியாபித்துக் காணப்படுகின்றன. இதனை அடைவதற்குப் பல்வேறு விதமான வழிகள் உள்ளன என்பதை நாம் அறிவோம், அதனை வரவேற்கின்றோம் (சமாஜ் தர்மா). இந்துப் பாரம்பரிய தத்துவங்களின் பிரகாரம் பரஸ்பரம் ஒருவரில் மற்றொருவர் தங்கியிருத்தலானது, சமூகத்திற்கும் சமூக சமத்துவத்திற்குமானதோர் அனுபவமாக நோக்க முடியுமென வலியுறுத்தப்படுகிறது. இத்தகைய மரபானது பல்வேறு விதமான சமயங்களை ஒற்றுமையாக சமாதானமாக சகவாழ்வுடன் இணைந்து வாழ்வதற்கு உதவுகிறது.

சர்வலோக விழுமியங்களான உண்மை (சத்தியம்), நீதி (தர்மம்), மன அமைதி அல்லது சாந்தம் (சம்மாபவனா), சமத்துவம் (சமத்துவா), வன்முறையின்மை (அகிம்சை), அன்பு (மைத்திரி) மற்றும் கருணை (கருணா) போன்றவற்றை மதத் தலைவர்கள் நிலைநிறுத்தி அவற்றை மக்கள் மத்தியில் போதிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். நிஸ்கம கர்மாவின் மூலம் நாம் வேலை

செய்வதன் மூலம் சமாதானம், நீதி, தேசிய ஒருங்கிணைப்பிற்காக அர்ப்பணிப்புடன் மனித உரிமைகளை மேம்படுத்தல் ஆகிய செயல்களில் நாம் ஈடுபட முடியும். பின்னர் ஒவ்வொரு மதமும் அதன் கலந்துரையாடல்களில் ஈடுபட்டு சகல மனிதர்களையும் ஒருங்கிணைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட முடியும் (லோகா சந்திரகா).

இந்து சமயம் எம்மை உண்மையாக இருக்கும்படி கோருகின்றது. அதேவேளை, உண்மையுடன் இருக்கும் படியும் கோருகிறது. இது ஆழ்ந்த சிந்தனையை தூண்டுவதாகும். அத்துடன் மானுட மேன்மைக்கான அழைப்பாகும். இத்தகைய சந்தர்ப்பத்தில் மற்றவருள் நாம் எம்மைக் காண முடியும். அதேபோல் எம்மில் மற்றவரைக் காணமுடியும். கடவுளின் மகிமைக்கு இது மற்றுமொரு உதாரணமாகும். எம்மை வலுப்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்புகளும் இங்கு உள்ளன. மாறுபட்ட பல்வேறு விடயங்களை உள்ளடக்கி எங்கள் மத்தியல் ஒற்றுமை என்ற கலாசாரம் கட்டியெழுப்பப்படும் பட்சத்தில், அது சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான வழிமறைகளை; அந்தியோதயா (பாதிக்கப்பட்டவர்களை உயர்த்துதல்) மற்றும் சர்வோதயா (அனைவரது அபிவிருக்கும் இட்டுச் செல்லல்) போன்றவற்றைத் தோற்றுவிக்கும். இத்தகைய சந்தர்ப்பத்தில் நிலைமாற்றுக்கால நீதிப் பொறிமுறைகள் மூலம் எமது நாட்டில் நாம் எதிர்பார்க்கின்ற சமாதானம் தோன்றும். ஓம் ஷாந்தி ஷாந்தி ஷாந்தி.

**Bibliography**


Annan, K.-G. (2004). *The Rule of Law in Conflict and Post-Conflict Societies, NY: United Nations.* New York: United Nations.

Doniger, W. (1990). *Textual Sources for the Study of Hinduism.* Chicago : University of Chicago Press .

Fischer, M. (2011b). Transitional Justice and Reconciliation: Theory and Practice. In B. Austin, M. Fischer, & H. J. Giessma, *Advancing Conflict Transformation: The Berghof Handbook II* (pp. 405-430). Opladen, Farmington Hills: Barbara Budrich Publishers.

Gonda, J. (83-93). The Historical Background of the Name Satya Assigned to the Higest Being. *Annals of the Bhandarkar Oriental Research Institute*, 48-49.

Gowing, R. (2016, August 18). *LST International Development.* Retrieved from www.lse.ac.uk/depts/ID: http://www.lse.ac.uk/internationalDevelopment/pdf/WP/WP138.pdf

Kapoor, S. K. (2015). *Hinduism: The Faith Eternal.* Kolkata: Advaita Ashrama.

Kritz, N. (2009). Policy Implications of Empirical Research on Transitional Justice. In H. van der Merwe, V. Baxter, & A. R.Chapman, *Assessing the Impact of Transitional Justice. Challenges for Empirical Research* (pp. 13-22). Washington : Washington DC: USIP.

Mendeloff, D. (2004). Truth-Seeking, TruthTelling,and Postconflict Peacebuilding: Curb the Enthusiasm? *International Studies Review, 6*(3), 355–380.

Merton, T. (1965). *Gandhi on Non-Violence.* New York: New Directions Pub.

Mobekk, E. (2005). Transitional Justice in Post-Conflict Societies – Approaches to Reconciliation. In A. Ebnother, & P. Fluri (Eds.), *After Intevention: Public Security Management in Post-Conflict Societies - From Intervention to Sustainable Local Ownership* (pp. 261-292). Geneva: Centre for the Democratic Control of Armed Forces (DCAF).

Mohanty, J. N. (2007). Dharma, imperatives and tradition: Toward and Indian theory of moral action. In P. Dilimoria, J. Prabhu, & R. Sharma, *Indian Ethics: Classical traditions and contemporary challenges* (pp. Vol. 1. 57-78). New Delhi: Oxford University Press.

Olivelle, P. (2011). *Language, Texts, and Society: Explorations in Ancient Indian Culture and Religion.* London:New York:Delhi: Anthem Press.

Radhakrishnan, S. (1994 ). *The Principal Upaniṣads.* New Delhi, India: Indus/Harper Collins India.

Sheveland, J. N. (2007). The Gita's 'Equal Eye': Resourcing a Christian Concept of Neigbour without Limit. *Louvain Studies 32*, 408-21.

Sooka, Y. (2006). Dealing with the Past and Transitional Justice: Creating Conditions for Peace, Human Rights and the Rule of Law. *Dealing with the Past – Series* (pp. 165-182). Switzerland: Political Affairs Division IV, Federal Departement of Foreign Affairs FDFA.

Tagore, R. (1970). *Gitanjali.* Bombay: Macmillan.

Tarnas, R. (1991). *The Passion of the Western Mind.* New York: Ballantine.

*The Bhagavad Gita: Krishna's Counsel in a Time of War.* (1986). (B. S. Miller, Trans.) New York: Bantam Books.

# அத்தியாயம் 3

## இலங்கையில் நிலைமாற்றுககால நீதி முன்னெடுப்புகள் இஸ்லாமியக் கண்ணோட்டம்

"நல்லிணக்கமே சிறந்தது" (ஞ.4:128)[21]

### 3.1 அறிமுகம்

நிலைமாற்றுக்கால நீதிக்கு இலங்கையில் உள்ளக அணுகுமுறை அவசியம். இதில் பழிவாங்கல், மீண்டும் இத்தகைய சம்பவங்கள் இடம்பெறல் ஆகியவற்றைத் தவிர்க்கும் முகமாக தீர்க்க திரிசனம் மிக்க, துணிவுடன்கூடிய நிலைமாற்றுக்கால நீதி தொடர்பாக சொல்லாடல்கள் பல்வேறு செயற்பாட்டாளர்களின் அர்த்தமுள்ள பங்குபற்றுதலுடன் மேற்கொள்வது அவசியமாகும். மேலும், தகுந்த தண்டனை வழங்குதல், மறுசீரமைப்பு, நல்லிணக்க நடைமுறைகள் போன்ற நிலைமாற்றுக்கால நீதியின் தூண்களான இவற்றை இஸ்லாமியச் சட்ட அடிப்படையான ஷரீயாச் சட்டம் பற்றி இவ் அத்தியாயத்தில் ஆராயப்படுகிறது[22]. சமாதானம், நீதித்துறை தொடர்பான இஸ்லாமியச் சொல்லாடல்களில் பிரிக்க முடியாத அங்கமாக நீதி காணப்படுகிறது. நீதி என்றால் என்ன? அது எதனை உள்ளடக்கியுள்ளது? அதனை அடைவதற்கு மனிதர்களுடைய பொறுப்புகள் என்ன? என்பத பற்றி குர்ஆன் எடுத்துரைக்கிறது. இஸ்லாமிய அடிப்படையில் நீதியை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். அவை நிலைமாற்றுக்கால நீதி தொடர்பான சொல்லாடல்களுக்கு மிக முக்கியமானவை என்பதை இவ் அத்தியாயம் எடுத்துரைக்கிறது. தண்டனை சார் சட்டம் இது குற்றத்திற்கெதிராக குற்றவியல் சட்ட நடவடிக்கை எடுத்தல்; அடுத்ததாக மறுசீரமைப்பு நீதி, குற்றமிழைத்தவர்களுக்கு தண்டனையை மையமாகக் கொள்ளாத நீதிமுறை. இஸ்லாம் மதத்தைப் பொறுத்தவரையில், நீதியை அடைவதென்பது ஒருவருடைய வழிபாட்டிற்கு முக்கியமானதாகும். இவ் அத்தியாயத்தில் குர்ஆன் போதனைகள் நீதியுடன் தொடர்புடைய எண்ணக்கருக்கள் மற்றும் சமாதானத்துடன் தொடர்புடைய எண்ணக்கருக்கள் ஆகியன நிலைமாற்றுக்கால நீதிப் பொறிமுறைகளுக்குப் பயனளிக்கும் முறைபற்றிக் கூறப்படுகிறது.

### 3.2 சமாதானம் தொடர்பான இஸ்லாமியக் கண்ணோட்டம்

இஸ்லாம் என்ற சொல் அராபியச் சொல்லான சலாம் அல்லது சில்ம் என்ற சொல்லிலிருந்து தோன்றியது. இதற்கு சமாதானத்திற்காகச் செயற்படல் என்ற அர்த்தமும் உண்டு. அதாவது, இறைவனின் ஆணைப்படி எவ்வித நிபந்தனைகளுமின்றி சமாதானத்தை அடைவதற்காக தன்னை அர்ப்பணித்தல் (தஸ்லிம்) என்பதாகும். மேலும், இஸ்லாமிய வாழ்க்கை முறை சமாதானத்திற்கான பாதை என குர்ஆன் தெரிவிக்கின்றது (குர்ஆன் 5:16)[23]. முஸ்லிம்கள் தினந்தோறும் ஐந்து முறை கட்டாயமாகத் தொழுகின்றனர். இத்தகைய பிரார்த்தனைகள், தம்மை நேர்வழியில் இட்டுச் செல்வதற்காகவும் அழிவுகளிலிருந்து பாதுகாக்க வேண்டுமென்ற கோரிக்கையின் அடிப்படையில் இடம்பெறுகின்றன. தொழுகையின் இறுதியில் முஸ்லிம்கள் தமது வலது, இடது புறமாகத் திரும்பி, அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் உங்கள் மீது உண்டாவதாக எனப் பிரார்த்திக்கின்றனர் (அல் சலாம் அலைக்கும்). அதாவது, உங்கள் மீது சமாதானம் உண்டாவதாக. சமாதானம் எங்கும் பரவவேண்டுமென்ற நோக்கத்திலேயே இது குறிப்பிடப்படுகிறது. இஸ்லாம் மதத்தைப் பொறுத்தவரை சமாதானம் என்பது அகம் மற்றும் புறம் சார்ந்த நிபந்தனையாகும்.

---

[21]வஇனிம்ரஅதுன் க.'.பத்மிம்பஹ்இஹா நுஷிய ஸன்அவ்இராதன்பலா ஜன்னாஹா அலைஹிமா அய்யுஸ்லிஹா பய்ன ஹுமா சுல்ஹா சுல்ஹா ஹய்ருன் வஉஹ்திரதில் அன்புசூசி சய்யிஅஹா வன் துஹ்சினு வதத்தஉ பஇன்னல்லாஹ ஹாகபிமா தஹ்மலூ நாகஹ்பிரன்-
ஒரு பெண் தன் கணவனால் மோசமாக நடத்தப்படுவதாகவோ அல்லது கைவிடப்படுவதாகவோ அச்சப்பட்டால் அவர்கள் இருவரும் தமக்கிடையிலான வேறுபாடுகளைக் கலந்துரையாடி நல்லிணக்கத்தில் ஈடுபடுவதில் எவ்வித தவறும் இல்லை. ஏனெனில், நல்லிணக்கமே சிறந்தது. மனிதர்கள் பேராசையினால் பாதிக்கப்படக்கூடியவர்கள். இருப்பினும் எது சிறந்ததோ அதையே நீங்கள் செய்யுங்கள். எப்பொழுதும் பக்தியுடன் இருங்கள். நீங்கள் செய்கின்ற விடயத்தை இறைவன் அறிந்தவனாகவிருக்கின்றான்.

[22]ஷரியா எனப்படுவது இஸ்லாமியச் சட்டத்தைக் குறிக்கிறது. இஸ்லாமிய மதத்தைப் பின்பற்றுபவர்கள் இச்சட்டத்தினால் ஆட்சி செய்யப்படுகின்றனர். இந்த சட்டங்கள் இரண்டு மூலங்களிலிருந்து தோன்றியவை. ஒன்று குர்ஆன் (இறைவனால் வெளிப்படுத்தப்பட்டவை) அடுத்தது ஹதீஸ் (முகம்மது (ஸல்) அவர்களுடைய வாழ்க்கையும் அவர்கள் குறிப்பிட்டவையும்) (பார்க்கCoulson, 2011பக்கம் 1-7).

[23]யஹ்தி பிஹில்லஹு மனித்தபஅர்ரித்வானஹு சுபலஸ் ஸலாமி வயுக்ரிஸஜ்ஹும் மினல் லுலமாதின்னூரி பிஇத்னிஹி வயஹ்திஹிம் இலஸ்ராதிம் முஸ்தகீம் -
இறைவன் கூறியவாறு சமாதானப் பாதையில் செல்பவர்களை இறைவன் வழிகாட்டுகின்றான். அவர்களை இருளிலிருந்து வெளிச்சத்திற்கு கொண்டுவருகின்றான். அவர்களை நேர்வழியில் இறைவன் நடத்துகின்றான்.

குர்ஆனில் இறைவனை அல்-சலாம், அதாவது சமாதானம் என அழைக்கிறார்கள் (குர்ஆன் 59:23)[24]. இஸ்லாத்தைப் பொறுத்தவரை சமாதானம் இறைவனிடமிருந்து ஆரம்பிக்கிறது.

அதுமட்டுமன்றி, சுவர்க்கத்திற்குச் செல்வதற்கான நிபந்தனையாக சமாதானம் குர்ஆனில் முன்வைக்கப்படுகிறது. இறைவனை மகிழ்ச்சியில் ஆழ்த்த விரும்புபவர்கள் அவனால் சமாதானத்தின் பாதையில் வழிநடத்தப்படுவார்கள் என இங்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இறைவனின் பாதையில் சுவர்க்கமே இறுதி இலக்காகக் கருதப்படுகிறது. இது சமாதானத்தின் வீடு எனக் குறிப்பிடப்படுகிறது. குர்ஆனின் அடிப்படையில் உலகில் சமாதானம் இரண்டு முக்கிய அம்சங்களைக் கொண்டுள்ளது. முதலாவதாக, அக ஆன்மீக ஒழுக்கத்தினூடாக உருவாக்கப்படும் இறையுணர்வு. இரண்டாவதாக, ஒருவர் மற்றவருக்கிடையில் உருவாக்குகின்ற சமூக சமாதானம். இவை இரண்டிற்கும் அடிப்படை நடைமுறையாகக் காணப்படுவது பொறுமையாகும் (சபூர்). "யார் பொறுமையுடன் மன்னித்தருள்கின்றார்களோ அதுதான் உண்மையான தீர்வாகும்"(குர்ஆன் 42:43)[25]. முஸ்லிம்களின் வீடுகளில் காணக்கூடிய சுவர்களில் தொங்குகின்ற ஒரு வாசகம் - யார் இறைவனுடன் இருக்கின்றார்களோ அவர்களுடன் இறைவன் இருக்கின்றான்.

முரண்பாடுகளினால் சூழ்ந்துள்ள ஒரு சமூகத்தில் ஆத்திரமூட்டல்களையும் தூண்டுதல்களையும் மேற்கொள்வதைத் தவிர்த்துக்கொள்ளும்படி குர்ஆன் அறிவுறுத்துகின்றது. அதாவது, பொறுமையாகவும் (சபூர்) சாந்தமாகவும் (ரிப்க்) இருக்கும்படி கூறப்படுகிறது. அத்துடன, இப்புனித நூலில் உயிர்களுக்கும் உடமைகளுக்கும் சேதம் விளைவிக்கின்ற சமூக முறைகளை நிராகரிக்கும்படியும் வன்முறையை கடுமையாக நிராகரிக்கும்படியும் அத்தோடு, மனித மேன்மைகளைப் பேணும்படியும் நம்பகமான முறையில் சமாதானமாக ஆக்கிரமிப்புகளுக்கு எதிராகச் செயற்படும்படியும் சமாதானத்தை உருவாக்குதல், நம்பிக்கையைக் கட்டியெழுப்புதல் ஆகிய செயல்களில் ஈடுபடும்படியும் அறிவுறுத்துகிறது. மேலும், ஆக்கிரமிப்பாளர்களை நண்பர்களாக இறைவன் ஏற்றுக்கொள்வதில்லை. வன்முறைச் செயற்பாடுகளை இறைவன் வெறுப்பதுடன், எப்பொழுதும் பொறுமையை எதிர்பாக்கின்றார். இதன் காரணமாக வன்முறைகள் குறைகின்றன. அதுமட்டுமல்லாது, சர்வதேச சமாதானத்திற்கான இஸ்லாமியக் கண்ணோட்டத்தை குர்ஆனிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்: "ஆகவே உடனடியாக நன்மையான காரியங்களை மேற்கொள்ளவும்"(குர்ஆன் 5:48).

புனித குர்ஆனிலே இந்த அழகான வார்த்தைகள் மூலம் கெய்னுக்கு எதிராக எபெல் வன்முறைகளை நிராகரிக்கின்றான்; "நிச்சயமாக என்னைக் கொலை செய்வதற்காக நீ உனது கரங்களை நீட்டலாம், இருப்பினும் உன்னைக் கொலை செய்வதற்காக நான் எனது கரங்களை நீட்டமாட்டேன். ஏனெனில், நான் அல்லாஹ்விற்குப் பயப்படுகின்றேன்" (குர்ஆன் 5:28)[26]. இலங்கையில் வன்முறையை நிராகரித்து சமாதானத்தையும் சாந்தியையும் கட்டியெழுப்புவதற்கான சிறந்த உதாரணமாக இந்த அபெயலின் கதை காணப்படுகிறது. இஸ்லாம் மதத்தின் பிரகாரம், ஆதம், அவ்வா ஆகியோரிலிருந்து மனிதர்கள் சந்ததிகளாகத் தோன்றினர். எனவே நாம் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் (குர்ஆன் 49:13)[27]. இந்த ஒற்றுமை சமாதானத்திற்கு இட்டுச்செல்ல வேண்டும். இருப்பினும் தனி நபர் ஒருவர் இறைவனின் பாதையில் சமாதானத்தைப் பின்பற்றலாம். சமாதானத்தின் தூதராக நீதிக்காக உழைக்கலாம், அவ்வாறு நடப்பவர்களுடைய பாதையில் சமாதானம் உதித்தெழும் (அல்-நபாஸ்). பித்ரா என்ற இக் கருத்து சமாதானம் தொடர்பிலான இஸ்லாமிய எண்ணக்கருவிற்கு அடிப்படையாகும். "மனித ஆளுமைகளுடன் கூடிய ஆக்கபூர்வமான அரசியலுக்கான அடித்தளத்தை மாத்திரம் இது இடவில்லை, பல பெறுமதிகளையும் இது அதிகரிக்கச் செய்கின்றது. மேலும், முரண்பாட்டுச் சூழ்நிலையில் சக மனிதர்களைத் தரக்குறைவாக நடத்துவதிலிருந்தும் இது பாதுகாக்கின்றது. (ஷெரிபி பங்க் 2001, பக்கம் 279). இதனடிப்படையில் நிலைமாற்றுக்கால நீதிப் பிரயோகங்கள் ஜனநாயகத்திற்கும் சமாதானத்திற்குமான அடிப்படை விடயங்களாகப் பரிசீலிக்கப்படல் வேண்டும் (பித்ரா)பெருமானார் முகம்மது நபி (ஸல்) அவர்களுடைய வாழ்க்கையும், சமாதானப் பாதையும், தனித்துவம் மிக்கவையாகக் காணப்படுகின்றன. பெருமானார் (ஸல்) அவர்கள் குறித்த இடத்தைக்கடைக்கும் போது ஒரு பெண் அவர்கள் மீது குப்பை வீசியெறிந்தது தொடர்பான கதை இதற்குச் சிறந்த சான்றாகும். பெருமானர் (ஸல்) அவர்கள் குறித்த இடத்தைக்கடைக்கும் போது தொடர்ந்தும் தொடர்ந்தும் குப்பையை வீசிவந்த பெண், ஒருநாள் பெருமானர் (ஸல்) அவர்கள் அவ்வழியாகச் செல்கின்ற பொழுது, அந்தப் பெண்ணைக் காணவில்லை. அவளுக்கு என்ன நடந்தது என்பதை அறிந்துகொள்ள ஆவலாகவிருந்தார். பின்னர் அவள் நோய்வாய்ப்பட்டுள்ளாள் என்பதை அறிந்தவுடன் நேரடியாகச் சென்று அங்கு நலன் விசாரித்துள்ளார்.

---

[24]ஹுவல்லாஹுல்லதீ லாஇலாஹா ஹுவல் மாலிகுல் குத்தூஸுஸ் ஸலாமுல் மு:.மினுல் முஹய்மினுல் அஸீஸுல் ஜப்பாருல் முதகப்பிர். ஸுப்ஹானல்லாஹி அம்மா யஸ்ரிகூன்.
இறைவன் ஒருவனே, அவனைத் தவிர வேறு இறைவன் இல்லை. இறைமை, புனிதம் மற்றும் சமாதானத்தை வழங்குவது, உண்மையை வழங்குவது, மேற்பார்வை செய்வது யாவும் எல்லாம்வல்ல இறைவனாகும். அவன் எங்கும் வியாபித்துள்ளான், எங்கும் நிரம்பியுள்ளான். எல்லாப் புகழும் இறைவனுக்கே. அவர்கள் மத்தியில் எவ்வித தொடர்புகள் காணப்பட்டாலும் எல்லாப் புகளும் இறைவனுக்கே. னக

[25]வலாமன் ஸபர வகப்பார இன்னா தாலிக லாமின் அஸ்மில் உமூர்.

[26]லஇம் பஸத்த இலய்ய யதக லிதக்துலனி மா அனா பிபாகிதி யதிய இலய்க லிஅக்துலக் இன்னி அக்ஹபல்லாஹா ரப்பலாலமின்ன.

[27]ஓ மனிதர்களே! உங்களை ஆண்களாகவும் பெண்களாகவும் நாம் படைத்துள்ளோம். உங்களிலிருந்து இனங்களையும் குலங்களையும் உருவாக்கியுள்ளோம். நீங்கள் உங்களில் ஒருவர் மற்றொருவரை அறிவீர்கள். உங்களில் யார் சரியாக நடந்துகொள்கிறார்களோ, அவர்களே இறைவனிடத்தில் சிறப்பானவராக கருதப்படுவார்கள். இறைவன் சகலவற்றையும் அறிந்தவன், சகல அனுபவங்களும் அவனுக்கு உண்டு.

தன்னை ஏற்றுக்கொள்ளாதவர்களையும் மதிக்காதவர்களையும்கூட பெருமானர் (ஸல்) அவர்கள் மதித்துள்ளார். அடுத்தவர்கள் மீது ஆத்திரப்படாதிருப்பதையும் கூருணர்வுடன் நடந்துகொள்வதையும் இது எடுத்துரைக்கிறது. மேலும் பெருமானர் (ஸல்) அவர்கள் மற்றுமொரு கதையைக் கூறுகின்றார், அதன் பிரகாரம், தாகத்திலிருந்த ஒரு நாயைக் கண்ட பெண் அருகிலிருந்த நீரூற்றுக்குச் சென்று நீரைக் கொண்டு வந்து அந்த நாய்க்கு கொடுத்துள்ளார். இதன் அடிப்படையில், ஒருவர் மேற்கொள்கின்ற சிறு நடவடிக்கையின் காரணமாகவும் அன்பார்ந்த நடவடிக்கையின் காரணமாகவும் அவரால் சுவர்க்கத்திற்குச் செல்ல முடியுமென பெருமானர் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்.

“சட்ட ரீதியான முறைகளன்றி, இறைவன் படைத்த புனிதமான உயிர்களைக் கொலை செய்யாதீர்கள்”(குர்ஆன் 17:33)[28] என குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஹிஜ்ரி 6 ஆம் ஆண்டில் வெறுப்பு பரவிக் காணப்பட்டது. இக்காலகட்டத்தில், சில முஸ்லிம்களுக்கு மக்காவிலுள்ள பள்ளிவாசலகளுக்குச் செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. மீண்டும் முஸ்லிம்கள் மக்காவில் தம்மை வலுப்படுத்திக் கொண்டதன் பின்னர், சிலர் பழிவாங்க வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்தனர். ஆனால், குர்ஆனிலே தீமை செய்யக்கூடாதெனக் குறிப்பிடப்பட்டுளளது (குர்ஆன் 5:2)[29]. மேலும், வன்முறை எப்பொழுதும் சமாதானத்தை மீறுகின்றது (குர்ஆன் 5:2)[30]. இதன் அடிப்படையில் இது சமூகத்திற்கு எதிரான குற்றமென புனித நூலில் கூறப்பட்டுள்ளது (குர்ஆன் 2:213)[31]. எனவே, நீதிக்கான இஸ்லாமியச் செயன்முறைகளானது சமாதானத்திற்கான அமைப்பாகத் திகழ்கின்றது. இது ஆட்சேபனைக்கும் எதிர்த்தாக்குதலுக்குமான கருத்துக்களைக் கொண்டதல்ல. குர்ஆனிலே அல்சுல்குன் காரியூன் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது நல்லிணக்கமே சிறந்தது, நீதியைக் கட்டியெழுப்புவதன் மூலம் வெற்றிகரமாக முரண்பாடுகளைக் குறைக்க முடியுமெனத் தெளிவாக இங்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இது தனிப்பட்ட சுய விருப்பங்களுக்கெல்லாம் அப்பால் செயற்படக்கூடியது (குர்ஆன் 4:135)[32]. ஈகை அல்லது நன்மையின் பெயரினால் பழிவாங்கலைக் கைவிடுவது புனிதமான செயல் என குர்ஆன் தெரிவிக்கின்றது (குர்ஆன் 5:45)[33]. குரோதங்கள் அனைத்தையும் வெகுவிரைவில் முடிவுக்கு கொண்டுவருவதுடன், எப்போது சமாதானத்தின் திசையில் பார்வை திரும்புகிறது அப்போதே இது செயல்படுத்தப்பட வேண்டும் என குர்ஆனில் கூறப்பட்டுள்ளது (குர்ஆன் 2:192-3)[34]. அதாவது நிலைமாற்றுக்கால நீதி முயற்சிகள் வெறும்

[28]வகுல்ல இன்சானின் அல்ஸம்னாஹு தாஇரஹு பீ அன்கிஹி வநுஹ்ஹிரிஜு லஹு யவ்மல்கியாமதி இதாப யல்கூஹு மன்சய்ரா.

[29]வஇதா ஹலல்தும் பஸ்தாதூ வலா யஜ்ரிமன்னகும் சய்யனநு கவ்மின் அன் சாதிகும் அனில் மஸ்ஜிதில் ஹராமி அன் த.ு.ததூ வதஆவனூ அலல் பிர்ரி வத்தக்வா வலா தஹ்வனூ அலாஇஸ்மி வல்உத்வானி அலய்க - புனித பள்ளிக்கு உங்களைச் செல்வதிலிருந்தும் தடுத்து நிறுத்தியவர்கள் பள்ளியினுள் உங்களது கோபத்தைத் தூண்டியவர்கள் அவர்களை நீங்கள் வெறுக்க வேண்டாம். சரியான மனச்சாட்சியின் மூலமும் நடத்தையின் மூலமும் ஒருவருக்கு ஒருவர் ஒற்றுமையாக நடந்துகொள்ளுங்கள். பாவச் செயலிலோ அல்லது குரொதமான விடயங்களிலோ ஒருவர் மற்றொருவருடன் கூட்டாக இணைந்து செயற்பட வேண்டாம். இறைவனுக்கு அஞ்சுங்கள்.

[30]மின் அஜ்லிஸா கதப்னா அலா பனிஸ் அன்ஹுமன் கதல நப்ஸம் பி அய்ரி நம்ஸின் அவ் பஸதின் பில் அர்திபா கஇன்னம குதாலன்னா சஜமீலன் வமன் அஹ்யஹா பகஅன்னமா அஹ்யன்னா சஜமியன் -
ஆகவேதான் இஸ்ரேலவர்களது பள்ளிகளுக்கு நாம் கட்டளையிட்டோம், ஒரு நபரை யார் கொலை செய்தாலும், அது ஒரு கொலையாகவிருந்தாலென்ன அல்ல இந்த பூமியில் துஷ்பிரயோகமாகவிருந்தாலென்ன, அவர் சகல மானுடத்தையும் கொலை செய்ததாகவே கருதப்படுவார். யார் மற்றவருக்கு சேவை செய்கிறாரோ அவர் முழு மானுடத்திற்கும் சேவை செய்ததாகவே கருதப்படுவார்.

[31]காநன்னாஸு உம்மதவ் வாஹிததன் பாஹா பஸல்ல ஹுன்னபிய்யினா முபஸ்ஸிரி வஅமுன்ஸிரின் வஅன்ஸல மாஹுமுல் கிதாப பில் ஹக்கி லியஹ்கும பய்னன்னாசி பி மக்தலபு பீஹி வமக்தலபா பீஹி இலல்லதீனதுஹு மிம் இஸ்னீ வல்லாஹு யஹ்தீ -
மனித இனம் ஒரே சமுதாயமாகக் கருதப்படுகிறது. அதன் பின்னர் தீர்க்கதரிசிகளை இறைவன் அனுப்பிவைத்தான். அவர்களுக்கு நல்ல செய்திகளை வழங்கி எச்சரிக்கைகளை விடுத்தான். அவர்களுக்கு வேதத்தை அனுப்பிவைத்தான், உண்மையைக் குறிப்பிட்டான். பல்வேறு வேறுபாடுகளுக்கு மத்தியில் மக்களை மதிப்பிடும் ஆற்றலை வழங்கினான். நாம் வழங்கியவற்றைத் தவிர அவர்களிடம் வேறு வேறுபாகள் இல்லை. அதற்கான நிரூபனம் அவர்களுக்கு கிடைக்கப்பட்டதன் பின்னர் அவர்களுக்கிடையிலான பரஸ்பர பொறாமை நீங்கும். இறைவனின் விருப்பத்தின் பிரகாரம் தாம் பிணக்கில் ஈடுபட்டமைக்கான உண்மையான காரணத்தை உணர்ந்து நம்புகின்ற பொழுது இறைவன் அவர்களை வழிகாட்டுவான். இறைவன் அவர்களுக்கு நேர்வழியைக் காட்டுவான்.

[32]யா அய்யுஹல்லதீன ஆமனூ கூனூ கவ்வாமீன பில் இஸ்தி ஷஹாத லில்லாஹி வலஹுல்ல அம்புஸிகும் அவில் வாலிதீனி வல் அக்ரபினா இய்யாகுன் ஜனிய்யன் அபாகிரன் பலாஹு அலா பிஹிமா பலா தத்தபிஉல் ஹவா அன் த.ு.திலு வஇன்தலவ் அவ் துரீது பஇன்னல்லாஹா கானபிமா தஹ்மனுனா கபீரன் -
உங்களில் யார் நம்பிக்கையாளரோ நீங்கள் நீதிக்கு உறுதியாகவிருங்கள். சகலவற்றையும் இறைவன் பார்த்துக்கொண்டிருக்கிறான். உங்களுக்கு எதிரானதாகவிருந்தாலென்ன, உங்கள் பெற்றோருக்கு எதிரானதாகவிருந்தாலென்ன, விலகிச் சென்றாலென்ன அல்லது வேறு திசையில் சென்றாலென்ன, நீங்கள் செய்கின்ற யாவற்றையும் இறைவன் அறிந்தவனாகவிருக்கின்றான்.

[33]வகதப்னா அலைஹிம் பீஹா அனன் நப்ஸா பின் நம்ஸி வல் அய்ன பில் அய்னி வல்அன்பி பில் அன்பிவல் ஹுஸ்னா பில் ஹுஜ்னி வஸ்ஸினா பிஸ்ஸின்னி வல்ஜுரூஹா கிஸாசன் பமன் தசத்தக பிஹி பஹுவ கப்பாரத்துல் லஹு வமல்லம் யஹ்கும் பிமா அன்ஸலல்லாஹு பஉலாஇக ஹுமஸா லய்முனா -
இதுபற்றி நாம் அவர்களுக்கு கூறியுள்ளோம். உயிருக்கு உயிர்,ஒரு கண்ணுக்கு கண், மூக்கிற்கு மூக்கு, காதிற்கு காது, பல்லுக்குப் பல், ஒரு காயத்திற்கு நிகரான காயம். ஆனால் நன்மையின் பாதையில் யார் இவற்றை விட்டு விலகிச் செல்கின்றார்களோ அவர்களுக்கு பாவ மன்னிப்பு இருக்கிறது. இறைவன் குறிப்பிட்டதன் படி, ஆட்சி செய்யாதவர்கள் பாவமிழைப்பவர்கள்.

[34]பஇனின்தஹு பஇன்னல்லாஹ கபூருர்ரஹீம் -
அவர்கள் அதனை நிறுத்திவிடுவார்களாயின், இறைவன் அவர்களை மன்னிக்கின்றான். அவன் கருணையுடையவன். வகுதிலூர் ஹம்ஆதா லா தகூனா பித்னது வயகுனத்தீனு லில்லாஹி பஇன்னின் தஹு பலா உத்வான இல்லா அலத்தாலிமினா -

நீதிக்கான அல்லது பிற்போக்குக் கருத்துக்களைக் கொண்ட ஆட்சேபனை அமைப்பு அல்ல. இது சமாதானத்திற்கான, முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான அமைப்பாகும். குறுங்குலவாத சுயநலன்களுக்கு அப்பால் நீதியைக் கட்டியெழுப்புவது இதன் தாற்பரியமாகும்.

### 3.3 நீதி தொடர்பான இஸ்லாமியக் கண்ணோட்டம்

சமாதானம் மற்றும் நீதி தொடர்பான இஸ்லாமியச் சொல்லாடல்களில் நீதி ஓர் பிரிக்க முடியாத அங்கமாகக் காணப்படுகிறது. இஸ்லாமியப் பெறுமான முறைகளில் நீதி, மையப் பொருளாகக் காணப்படுகிறது. ஒரு மனிதனுடைய மிகப் பெறுமதியான பிணைப்பான தன் மீது தான் கொண்டுள்ள பிணைப்பிற்கு அப்பால் இது செயற்படுவதாக முஸ்லிம்களுக்கு எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது. (முஸாபர் 2000. பக்கம் 261). எனவே, ஒருவருடைய சுய விருப்பத்திற்கு மத்தியில் நீதி முக்கியமானதாக மேலோங்கியிருக்கிறது. இஸ்லாத்தில் நீதியைப் பற்றிக் குறிப்பதற்குப் பல்வேறு விதமான சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. பொதுவாகப் பயன்படுத்தப்படும் வார்த்தை ‘அதல்’ இது ஐந்தலாம் என்ற வார்த்தையிலிருந்து தோன்றியது. இந்தச் சொல்லுக்குப் பல அர்த்தங்கள் உள்ளன. ஒன்று நேராக அமர்தல் அல்லது ஒழுங்கமைத்தல். இரண்டாவது, தீமையிலிருந்து விலகி நன்மையைப் பற்றுதல் அல்லது சரியான இடத்தை நிர்ணயித்தல். மூன்றாவது, சமத்துவம் அல்லது சமமாகவிருத்தல். நான்காவது, சமத்துவத்தை அல்லது சமநிலையை உருவாக்குதல். ஐந்தாவது, நீதியான நேர்மையான அல்லது துல்லியமானவைகள். எனவே, நீதிக்கான அர்த்தம் தாற்பரியம் மற்றும் சமூக விழுமியங்களை உள்ளடக்கியதாகக் காணப்படுகிறது.

நீதி என்பது இறைப் பண்புகளில் ஒன்றாகக் காணப்படுகிறது. இஸ்லாத்தைப் பொறுத்தவரையில் இறைவன் நீதியின் மூலமாகக் கூறப்படுகின்றான். முழுமையான நீதி அல்லது இறுதியான நீதி, அஹ்கம் அல் ஹக்மினி, அல் ஹுசா (முறைகேடு), அல்முங்கர் (அடிபணியாமை),அல்வாகி (மரியாதையின்மை) ஆகியவற்றை இறைவன் தடுக்கிறான் (குர்ஆன் 16:90). குர்ஆனில் வெளிப்படுத்தல் மற்றும் பெருமானார் (ஸல்) அவர்களுடனான தொடர்பாடல்கள் ஆகியவற்றின் மூலம் இறைவன் தன்னை வெளிப்படுத்தியுள்ளான். எனவே, இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் இந்த வெளிப்படுத்தல்கள் மூலமாகவே நீதிக் கொள்கைகள் அளவிடப்படல் வேண்டும் (குர்ஆன் 57:25)[35]. வெகுமதிகள் மற்றும் தண்டனை ஆகியன தொடர்பான கோட்பாடுகளும் இறைநீதியின் அடிப்படையில் நோக்கப்படல் வேண்டும். மேலும், ஒவ்வொரு மனிதனும் அவனுடைய தனிப்பட்ட செயல்கள் மற்றும் சாதனைகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே மதிப்பீடு செய்யப்பட வேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது (சௌகியா 2008, பக்கம் 1).

குர்ஆனில் கூறப்பட்டுள்ள இந்த உதாரணங்களை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில், இறைவன் மீதான ஒருவனுடைய உணர்வுகள் பற்றி இங்கே கூறப்பட்டுள்ளது (தக்வா). (குர்ஆன் 5:8)[36]. அஸ் சேக் கஸ்மி அவர்கள் குறிப்பிடுவதாவது, “இறைவனைப் பொறுத்தவரையில் நீதி என்பது யாவும் சரியான இடத்தில் இருப்பது. மனிதர்களைப் பொறுத்தவரையில் நீதி என்பது எல்லா விடயங்களையும் சரியான இடத்தில் வைப்பதற்கான முயற்சியாகும். எனவே, இறைவனின் பாதையில் இது மாற்ற முடியாத மனோதத்துவப் பண்புகளைக் கொண்டதாகும். மனிதனைப் பொறுத்தவரையில் இயங்காற்றல் மிக்க மாறுபட்ட முயற்சிகளாகும். நேர்மையாகச் செயற்படுவதற்கான மனிதனுடைய தார்மீக முயற்சிகளானது தோல்வியடைவது, அதற்கேயுரிய சரியான இடத்தில் இல்லை என்பதாகும்.” இது உள்ளார்ந்த, ஆன்மீக, முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட நீதியின் அடிப்படையில் அமைந்ததாகும். மனிதனைப் பொறுத்தவரையில் செயல் என்பது வெளிப்பாடாகும். உண்மையில் எல்லாப் பொருட்களும் இறைவனிடமே இருக்கின்றன. அவன் விரும்பியவாறே அவை இந்த உலகத்திலிருக்கின்றன (சேக் கஸ்ஸாலி 2007, பக்கம் 82 – 83).

துஷ்பிரயோகத்திற்கும் சமாதான சீர்குலைவிற்கும் இட்டுச்செல்கின்ற பாவச் செயல், இறைவனின் சட்டத்தை அவமதித்தல், தீய செயல்களில் ஈடுபடல், ஒடுக்குமுறைகள், நேர்மையீனங்கள் ஆகியன

---

ஒடுக்குமுறை இல்லாதொழியும் வரை போராடுங்கள். இறைவனை மாத்திரமே எப்பொழுதும் வணங்குங்கள். அவர்கள் நிறுத்திக்கொள்வார்களாயின் அடக்குமுறையாளர்களை அல்லது ஒடுக்குமுறையாளர்களைத் தவிர வேறு வேறு குரோதங்கள் இருக்க முடியாது.

[35]லகத் அர்ஸல்னா ருஸுலனா பில் பய்யினாதி அவன்ஸல்னா மாஹுமுல் கிதாப வல் மிஸ்னா லியகூமன் ாநச பில் கிஸ்த் வஅன்ஸல்னா ஹாதீதா பீஹி ப.்.ஸன் சத்து வமனா பீ லின் நாஸி வலிய்யலம்மல் லஹு மய்யன்சுருஹு வருஸுலஹு பில் அய்பின்னல்லாஹ் கவிய்யுன் அஸீஸ் -
தெளிவான நிருபனங்களுடன் எமது தூதர்களை நாம் அனுப்பிவைத்தோம். மனிதர்கள் நீதியை நிலைநிறுத்தக் கூடிய விதத்தில் ஒரு புத்தகத்தையும் ஒரு சமநிலையையும் நாம் அனுப்பிவைத்தோம். நாம் இரும்பை அனுப்பி வைத்போம். இது அதிக சக்திபடைத்ததாகும். மனிதர்களுக்கு உதவக்கூடியது. இறைவனுக்கு யார் உதவுகிறார்கள் என்பதை இறைவன் அறிவான். இறைவனுடைய தூதர்களுக்கு யார் உதவுகிறார்கள் என்பதையும் இறைவன் அறிவான். இறைவன் உறுதியானவர், அதிகாரம் மிக்கவர்.

[36]யா அய்யுஹல்லாதீன் ஆமனூ கூனூ கவ்வாமீன லில்லாஹி அய்யுஹதா பில் கிஸ்தி வலா யஜ்ரிமன்னகும் ஹிய்னானுகுமின் அலா அல்லா த.்.திலு இஹ்திலு ஹுவ அக்ரபு லித் தக்வா வதக்லாஹா இன்னல்லாஹா கபீரும் பிமா தஹ்மலுனா –
நீங்கள் நம்பிக்கையுடையவராகவும் இறைவனுக்கு நேர்மையுடையவராகவும் நடந்துகொள்ளுங்கள். நீதியுடன் நடந்துகொள்ளுங்கள். நீங்கள் நேர்மையாக நடந்துகொள்வதை சில மனிதர்களை நீங்கள் வெறுப்பதன் மூலம் தடுக்கக் கூடிய விதத்தில் நடந்துகொள்ளாதீர்கள், நீதிக்கு பணிந்து நடந்துகொள்ளுங்கள், உங்கள் பக்திக்கு அது நெருங்கியதாகும். இறைவனுக்கு அஞ்சுங்கள். நீங்கள் என்ன செய்கின்றீர்கள் என்பதை இறைவன் நன்கு அறிந்தவனாகவிருக்கின்றான்.

அநீதியான செயல்களாக (சல்ம்) குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ளது. இஸ்லாத்தில் நீதி ஒரு வெகுமதியாகவோ அல்லது நன்மைபயக்கும் செயலாகவோ வலியுறுத்தப்பட்டுள்ளது[37]. ஆகவே நீதி மற்றும் சமத்துவமான சட்டங்கள் ஆகியவற்றின் மூலம் அபிவிருத்தியையும் சுபீட்சத்தையும் நாட்டிற்குள் கொண்டுவருவது அரசாங்கத்தின் கடமையாகும். சட்டத்தை உருவாக்குவதற்கும் ஆட்சி செய்வதற்கும் நீதி அடிப்படை அம்சமாகும். இறைவனின் நீதி இந்த உலகில் நிலைநிறுத்தப்படுவதன் தேவையை இஸ்லாமியச் சட்டங்களும் இஸ்லாமிய நீதிப் பரிபாலன முறைகளும் குறிப்பிடுகின்றன. குர்ஆனின் விளக்கத்தின் பிரகாரம் நீதியான சமூகம் எனும்பொழுது, சகலவிதமான அடக்கு முறைகளிலிருந்தும் விடுபட்ட சமூகமாகவிருக்கிறது. இஸ்லாமிய அரசியல் சார் ஒழுக்கநெறிகள் அநீதியை (சல்ம்) அகற்றுவதற்காக மாத்திரமே வன்முறையை அங்கீகரிக்கின்றன. ஒரு சமூகமானது நம்பிக்கையீனத்துடன், விடா முயற்சியுடன் இருக்க முடியும் (குப்ர்). ஆனால் அநீதியுடன் (சல்ம்) இருக்க முடியாதென பெருமானா் (ஸல்) அவா்கள் குறிப்பிட்டுள்ளார். ஆண்டவன் மனிதர்களை எப்போதும் அடக்குவதோ, ஒடுக்குவதோ இல்லை (அல்குர்ஆன் 9:70, 10:44, 29:40 மற்றும் 30:9)[38]. எனவே, அநீதிகளும் அல்லது அடக்குமுறை சார்ந்த செயல்களும் மனிதர்களின் தலையீட்டினாலேயே ஏற்படுகின்றன. இறைவன் மனிதர்களை ஒடுக்காததன் காரணமாக நீதியை அடைவதற்கான ஒரேவழி இறைவனின் பாதையென குர்ஆன் குறிப்பிடுகிறது.

### 3.4 இஸ்லாமும் தண்டனை சார் நீதியும்

குர்ஆனின் பிரகாரம் நீதியை வெளிக்கொணர வேண்டுமெனில், "எது சரி, எது பிழை, எவை தடைசெய்யப்பட்டுள்ளன" (குர்ஆன் 3:104)[39] என்பது தொடர்பில் ஒருவா் ஏவ வேண்டும். "சமூகத்தின் ஒற்றுமைக்காகவும் ஒருமைப்பாட்டிற்காகவும் இறைவனிடம் பிரார்த்தித்தல் வேண்டும்" இப் பின்புலத்தினடிப்படையில் சமூகத்திற்கும் தனி நபருக்கும் இடையிலான இடைத்தொடர்புகள் அல்லது உறவுகளினடிப்படையில் குற்றம் எனப்படும் பொழுது ஒருவன் இறைவன்பால் தனக்குள்ள பொறுப்புக்களிலிருந்து நீங்கியதாகவே நோக்கப்படுகிறது. அதேபோல், தனிப்பட்ட மற்றும் பொது வாழ்க்கையில் சமாதானம் மற்றும் ஒற்றுமை ஆகிய பொறுப்புக்களிலிருந்து நீங்கியுள்ளதாகவும் கருதப்படுகிறது. இஸ்லாம், குற்றங்களையும் அதனோடு தொடர்புடைய தண்டனைகளையும் 3 வகையாக வகைப்படுத்தியுள்ளது. ஹுதூத், கிஸாஸ் மற்றும் த.ீதீா். இந்த வகைகள் மாறுபட்ட உரிமை மீறல்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இறைவனது உரிமைகள் (பொது) அல்லது தனிப்பட்ட உரிமைகள் - இந்த வகைகள் பல்வேறு விதமான தாக்கங்களைக் கொண்டுள்ளன. தண்டனைகளை நிறைவேற்றும் பொழுது, பல்வேறு வகையான நீதித்துறை சார் தற்றுணிபுகள், விதிக்கப்படும் தண்டனையின் கொடூரம், மாறுபட்ட சான்றுகள் அல்லது உண்மையைக் கண்டறியும் தராதரங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. எந்த வகையாகவிருந்தாலென்ன, எந்தத் தாக்கமாகவிருந்தாலென்ன, இவ்வகையான குற்றங்களையும் தண்டனையையும் வகைப்படுத்துவதன் இறுதி நோக்கம் சமூகத்தில் நீதியை அடைவதாகுமென நீதித்துறை சார்ந்த அனைவரும் ஏற்றுக்கொள்கின்றனர்.

ஹுதூத், (இதன் ஒருமை ஹத் எனப்படும்) என்பதற்கு வரையறைகள் எனப் பொருட்படும். பொதுவாக ஹுதூத் சார்ந்த குற்றங்களானது இறைவனது உரிமைகளை மீறுவதாகும் (ஹுகுக்குல் - அல்லாஹ்) அல்லது இறைவனின் கோரிக்கை, அவனால் ஒழுங்கமைக்கப்பட்ட சட்ட, சமூக ஒழுங்குகள் அல்லது மனிதர்களது உரிமைகள் (ஹுகுகல்இபாத்) என்பனவற்றை மீறுவதாகும். இறைவனின் பாதையிலிருந்து விலகிய ஒருவன் ஹுதூத் குற்றவாளியாக நோக்கப்படுகின்றான். இவனுக்குரிய தண்டனைகள் குர்ஆனில் கட்டாயத் தண்டனைகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளன (ஹுகுபாத் முகத்தரா). இங்கு புனர்வாழ்விற்கோ அல்லது பாவமன்னிப்பிற்கோ சிறிதளவே வாய்ப்புக்கள் உண்டு. பொதுவாக நீதிபதி ஒருவா் தன் முன்னிலையில் வைக்கப்படுகின்ற சான்றுகளின் துல்லயத் தன்மை பற்றியே ஆராய்கிறார். இதன் அடிப்படையில் பின்வரும் குற்றங்கள் நிஷரூபிக்கப்பட்டால் மன்னிப்பு வழங்க முடியாது; விபச்சாரம், திருமணமாகாதவர் செய்கின்ற விபச்சாரம், தகாபுணர்ச்சி, சிறுவர் மீதான பாலியல் குற்றம், பாலியல்

---

[37] குல்ஹல் அனபிய்யிகும் பிஷிஹ்ரமின் தாலிக மஸுபதன் இன்தல்லாஹி மல் லஹ்னஹுல்லாஹு வகாதிபா அலைஹி வஜஅல மின்ஹுமுல் கிராதத வல் கான ஸிரா வஆபதத்தாகுதா உலாஇக ஷய்ரும் மகான வ அத்லுன் அன் சவ்வாஇஸ்ஸபீல் -
இறைவனிடமிருந்து வரும் தண்டனையை விட மோசமான சிலவற்றை உங்களுக்கு நான் அறிவிக்கட்டுமா, அவர்களை இறைவன் சபித்துள்ளான். அவர்களுடன் இறைவன் கோபப்பட்டவனாகக் காணப்படுகின்றான். இவர்களை மனிதக் குரங்குகளாகவும் பன்றிகளாகவும் சிலை வணக்கத்தில் ஈடுபடுபவர்களாகவும் அவன் மாற்றியுள்ளான். இதுதான் மிகவும் மோசமான நிலைமையாகும். சரியான பாதையிலிருந்து விலகிச் சென்றவர்களாக இவர்கள் இருக்கின்றார்கள்.

[38] அலம் யதீஹிம் நுபுவ்வல்லதீன மின் கப்லிஹிம் கவ்மினு ஹிம் வஅதிவ் சமூதா வகுமி இப்ராஹீம அவஷாபி மத்யன வல் முதப்பிகாதி அத்தாத்தும் ருஸ்லுஹும் பில் பய்யினாத்தி பமா கானல்லாஹு லியஸ்லிமஹும் வலாகின் கானு அன்புசிஹும் யத்லிமுனா -
அவர்களுக்கு முன்பு வாழ்ந்தவர்களுடைய கதைகளைப் பற்றி அவர்கள் அறிந்திருக்கவில்லையா? ஆதம், நுஹ், தாவூத் இவர்களுடைய மக்கள் மற்றும் இப்ராஹீமுடைய மக்கள் மற்றும் மதியன் வழித்தோன்றல்கள் மற்றும் நிர்மூலமாக்கப்பட்ட நகரங்கள்? அவர்களுடைய தூதர்கள் மிகத்தெளிவான தகவல்களுடன், மிகத் தெளிவான நருபனங்களுடன் அவர்களை நெருங்கினார்கள். இறைவன் எப்பொழுதும் அவர்களுக்கு தவறு செய்யவில்லை. ஆனால் அவர்கள் தாமாகவே தவறு செய்துகொண்டார்கள்.

[39] வல்தகும் மின்கும் உம்மதி யத்உனா இல்லல்லாஹ் காரி வ யம்ருனா பில் மஹ்ரூபீ வயன்ஹவ்ன அனில் முன்கரி வஅஹ்லிக ஹமுல் மப்லிஹுனா.
உங்களுடைய சமுதாயத்தில் சிலர் ஒழுக்கமுள்ளவர்களாகவும் சரியான விடயங்களைப் பரிந்துரைப்பவர்களாகவும் தீமையிலிருந்து விலகி நடந்துகொள்பவர்களாகவும் உள்ளனர். இவர்களே வெற்றி பெற்றவர்கள்.

வன்புணர்வு, ஆண் தன்பால் பாலியல் தொடர்பு, பெண் தன்பால் பாலியல் தொடர்பு, காமத் தரகு போன்றன ஹுதூத் குற்றங்களாக கருதப்படுகின்றன. ஆயுதக் கடத்தல் (ஹிராபா), பயங்கரவாதம், ஆயுத முரண்பாடு (பாகி), அவதூறு (காதிப்), போதைப்பொருட்களைப் பயன்படுத்தல் (அல்கமர்), திருட்டு (சரிக்கா), சமய எதிர்ப்பு (ரித்தா), இஸ்லாமிய ஆட்சியாளருக்கு நியாயப்படுத்த முடியதளவில் அடிபணியாதிருத்தல் ஆகியன இறைவனுக்கும் சமூகத்திற்கும் எதிராக மேற்கொள்ளப்பட்ட யுத்தங்களாகக் கருதப்படுகின்றன. மற்றும் இறைவனுக்கும் அவனது தூதருக்கும் எதிராக மேற்கொள்ளப்படுகின்ற யுத்தங்களும் இவற்றுள் உள்ளடங்குகின்றன. சமூகத்திற்குப் படிப்பினையூட்டுவதற்காகவே ஹுதூத் தண்டனைகள் வழங்கப்படுகின்றன. சமூகத்திற்கு படிப்பினையூட்டவேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையிலேயே இவை பகிரங்கமாக நிறைவேற்றப்படுகின்றன. பொதுமக்களது நலனைப் பாதுகாக்க வேண்டும் என்பதே இத்தகைய தண்டனைகளின் இலக்காகும். எனவே, இவை இறைவனின் கோரிக்கையென அடையாளமிடப்படுகின்றன. தனிப்பட்ட நபர்களதோ அல்லது மனிதர்களதோ கோரிக்கைகளாக இவை கருதப்படுவதில்லை. ஹுதூத் குற்றங்களை நிரூபிக்கின்ற பொழுது அவை சட்டத்தில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரமே நிரூபிக்கப்படல் வேண்டும். நீதிமன்றங்களில் குற்ற ஒப்புதலளிக்கின்ற மற்றும் சாட்சியமளிக்கின்ற பொழுது மாத்திரமே அது செல்லுபடியாகின்றது. அத்தோடு, அவ்வாறு குற்ற ஒப்புதலளிக்கின்றவர் தனது குற்ற ஒப்புதலளிப்பின் அர்த்தத்தைப் புரிந்துகொள்ளக்கூடியவராக இருப்பதுடன், சுயமாக அவற்றை அளித்தல் வேண்டும். சித்திரவதை மூலமாகப் பெறப்பட்ட குற்ற ஒப்புதலளிப்புகளுக்கு எவ்விதமான சட்ட அந்தஸ்த்தும் இல்லை. சில ஹுதூத் குற்றங்களைப் பொறுத்தவரையில் தண்டனை சார் முறையானது தண்டனை அளிக்கப்படுவதைக் குறிப்பிடுகின்றது. இது குர்ஆனில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும். இழைக்கப்பட்ட குற்றங்களுக்கு பதிலாகவே இங்கு தண்டனை வழங்கப்படுகிறது. புனர்வாழ்வுக்கு எவ்வித வாய்ப்புகளும் இங்கு இல்லை.

கிஸாஸ் (பழிவாங்கலில் சமத்துவம்) என்பது கிசா என்ற அடிச்சொல்லிலிருந்து தோன்றியது. பாதையை அல்லது சுவட்டைப் பின்பற்றினான் என இதற்குப் பொருள்படும். இஸ்லாமியச் சட்ட முறையில் பழிவாங்கல் என்ற சொற்பதமானது கிஸாஸ் என்பதன் அடிப்படையில் நோக்கப்படுகிறது. ஏனெனில், இது குற்றவாளியின் பாதையை அல்லது சுவட்டைப் பின்பற்றிச் செல்கிறது. இங்கு விசாரணைகளை மேற்கொள்வதன் மூலம், பாதிக்கப்பட்டவருக்கு எந்தளவு காயங்களை ஏற்படுத்தினாரோ அதற்கு நிகரான தண்டனைகள் வழங்கப்படுகின்றன. அதனைவிட அதிகமாக வழங்கப்படுவதில்லை (வஸ்தி 2008, பக்கம் 12). கிஸாஸ் குற்றங்களாக கொலை நோக்கமற்ற கொலைகள் (குர்ஆன் 4:92)[40] மற்றும் கொலை நோக்கமுடைய குற்றங்கள் (குர்ஆன் 4:93)[41] ஆகியன உள்ளடங்குகின்றன. அனைவரும் இராஜவணன் படைப்பென்பதால் பொதுமக்களின் உரிமையும், பாதிக்கப்பட்டவரின் குடும்பம் இன்னல்களை சந்திப்பதால் தனிநபர் உரிமையும் மீறப்படுவதாக எடுத்துக்கொள்ளலாம். அத்தகைய குற்றங்களுக்கான தண்டனைகள் சமத்துவம் அல்லது பழிவாங்கல் சட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும் (கிசாஸிஸ்) மற்றும் நஷ்டஈடு (தியா) குர்ஆனில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும் (குர்ஆன் 2:178)[42]. "சட்டம் கடுமையாக சரியாகக் கடைபிடிக்கப்படும் பொழுது, சமூக ஒழுங்கு நிலைநிறுத்தப்படுகிறது." இஸ்லாத்தில் தண்டனை முறை சார் நீதி பற்றிய கோட்பாடுகளை இந்த வாசகம் கொண்டுள்ளதாக நம்பப்படுகிறது. கிஸாஸ் கோட்பாடுகளின் பிரகாரம் தண்டனை சார் நீதியானது மறுசீரமைப்புக்கானதொரு நடைமுறையாக சச்சீனா குறிப்பிடுகின்றார். இஸ்லாத்திற்கு முற்பட்ட காலப்பகுதியில் பழிவாங்கும் நடவடிக்கைகள் மேலோங்கிக் காணப்பட்டன். எனவே, மன்னித்தல் மற்றும் நட்டஈட்டை ஏற்றுக்கொள்ளல் தொடர்பான குர்ஆன் அறிவுரைகளானவை நல்லிணக்கத்திற்கு இட்டுச்செல்கின்றது என்பதன்

---

[40] வமாகான லிமுஹ்மினின் அய் யக்துலு மு∴மினன் இல்லா காதன் வமன் கதல மு∴மினன் கதல அன் பத்தஹிரு ராகபதின் மு∴மினாதின் வஇன் கான மின்உ மின் பய்னகும் வய்னஹுூம் மீஸாகும்பதிய்யதுன் முஸல்லமத்துன் இல்லா அஹ்லிஹி வதஹ்ரீரு ரக்பதின் மு∴மினாத்தின் பமல்லம் யஜித் பாஸியாமு சயஹ்ரய்னி முததப்பிஅய்னி தவ்பதாம் மினல்லாஹி வகானல்லாஹுூ பல்ஆலிமீன ஹாகிமன் -
தவறுதலாகவன்றி ஒரு விசுவாசி மற்றுமொரு விசுவாசியைக் கொலைசெய்யமாட்டான். தவறுதலாக விசுவாசி ஒருவரைக் கொலை செய்த ஒருவன் விசுவாசியான அடிமை ஒருவரை விடுதலை செய்ய வேண்டும். பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு நட்டஈடுகளை வழங்கவேண்டும். அவர்கள் கருணையின் அடிப்படையில் வேண்டாம் எனச் சொல்லாலொழிய இந்த நட்டஈட்டை வழங்கல் வேண்டும். பாதிக்கப்பட்டவர் உங்களுடன் குரோதத்திலுள்ள நபர்களுள் ஒருவராயின், அதேவேளை அவர் ஒரு விசுவாசியாக இருக்கும் பட்சத்தில் இதற்கான நட்டஈடாக விசுவாசமுடைய அடிமை ஒருவரை விடுதலை செய்ய வேண்டும். நீங்கள் உடன்படிக்கையை மேற்கொண்ட மக்கள் கூட்டத்தைச் சேர்ந்தவராக அவர் இருப்பின் அந்த நட்டஈடு அவருடைய குடும்பத்தினருக்கு கையளிக்கப்படல் வேண்டும். அத்தோடு, விசுவாசமுடைய அடிமை ஒருவரும் விடுதலை செய்யப்படல் வேண்டும். இதனை மேற்கொள்வதற்கு வசதி இல்லாதவர் தொடர்ச்சியாக இரண்டு மாதங்கள் நோன்பு நோக்க வேண்டும். இறைவனிடம் பாவமன்னிப்புக் கோருதல் வேண்டும். இறைவன் எல்லாவற்றையும் அறிந்தவன். அவனே சிறந்த அறிவாளி.

[41] வமய் யக்துல் மு∴மினன் முதஅம்மிதன் பஜஸாஹுூ ஜஹன்னமு காலிதன் பீஹா வஹ்திபாலஹுூ வஅத்தலஹுூ அஸாபன்னாஸிமா -
விசுவாசி ஒருவரை வேண்டுமென்றே ஒருவன் கொலை செய்வானாயின், அதற்கான தண்டனை நரகமாகும். அந்த நரகத்தில் அவன் எப்போதும் இருப்பான். இறைவன் அவனுடன் கோபமாகவிருப்பான். அத்தகையோரை இறைவன் சபிப்பான். அவர்களுக்கென கடுமையான தண்டனைகளைத் தயார்செய்வான்.

[42] யா அய்யுஹல்லதீன் ஆமனூ குதிப அலய்குமுல் கிஸாசு பில்கத்லா அல்ஹுுர்ரு பில்ஹுுர்ரி வல்அப்து பில்அப்தி வல் அன்சா பின் உன்சா பமன் உபியலஹுூ மின் அக்கிஹி சய்யிஅஹுூன் பத்திபாஉம் பில் மஹ்ரூபி வஅத்த அன் இலைஹி பி இஹ்சானின் தாலிக தக்பீபும் மிர் ரப்பிகும் வரஹ்மதன் பமநிஹ்ததா ப∴த தாலிக பலஹுூ அதாபன்அலீமுன் -
கொலை செய்யப்பட்டதற்குப் பதிலாக பழிவாங்கல் நியமிக்கப்பட்டதாக நீங்கள் நம்புகின்றீர்களா: விடுதலைக்கு விடுதலை, அடிமைக்கு அடிமை, பெண்ணுக்குப் பெண். அவனுடைய உறவினர்களால் மன்னிக்கப்படும் பட்சத்தில் நியாயமான கோரிக்கையை அனுமதிக்கும் பட்சத்தில் நன்னோக்குடன் அதனைச் செலுத்துங்கள். இது இறைவன் உங்களுக்கு அளித்த சலுகையாகும். அவன் உங்களுக்களித்த கருணையாகும். ஆனால் அதன் பின்னர் யார் அட்டூளியம் இழைக்கின்றார்களோ அவர்களுக்கென கடுமையான வேதனை காத்திருக்கிறது.

அடிப்படையில் தண்டனை சார் சட்டங்கள் பெறுமதிமிக்கவையாகக் காணப்படுகின்றன (சிபா அல்சதர் - இதயத்தைக் குணப்படுத்தல்). இங்கு பாதிக்கப்பட்டவர், குற்றவாளி ஆகிய இருவரையும் கருத்திற் கொள்ளப்பட வேண்டும். குற்றத்தை ஒப்புக்கொண்டதன் பின்னர் குற்றவாளி புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்படுகின்றார் (சச்சீனா 2001, பக்கம் 111 – 112).

தண்டனை, நீதியான முறையில் பிரயோகிக்கப்படுகிறது என்பதை உறுதிப்படுத்தும் முகமாக கிசாசிஸ் குற்றங்களுக்கு தண்டனையளிக்கும் பொறுப்பு நியமிக்கப்பட்ட பாதுகாவலர் அல்லது நடுவரிடம் வழங்கப்பட்டுள்ளது. சமுதாயத்திற்கோ பாதிக்கப்பட்டவருக்கோ அல்லது அவரது குடும்பத்தினருக்கோ இது வழங்கப்படவில்லை. பாதிக்கப்பட்டவர் தான் விரும்பும் பட்சத்தில் மன்னிப்பளிக்கலாம் என்ற பொழுதிலும் கூட தண்டனையளிப்பதற்கான அரசாங்கத்தின் உரிமையை இது மீறிச்செல்லவில்லை. பாதிக்கப்பட்டவரை அரசு பிரதியீடாக இருக்கின்ற நிலைமைகளைத் தவிர, ஏனைய சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்டவரது உரிமைகளையும் அவருக்கான பரிகாரங்களையும் அரசு இரத்துச் செய்ய முடியாது. நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் பாதிக்கப்பட்டவர் நட்டஈடுகளை நாடமுடியும். ஆனால் வழக்கைக் கைவிடுவதற்கான அதிகாரம் பாதிக்கப்பட்டவருக்கு உண்டு. இது பாதிக்கப்பட்டவருடைய உரிமையைப் பாதுகாக்கும் செயலாகும் (கிஸாஸ்).

த∴தீர் என்பது இஸ்லாத்தில் மற்றுமொரு வகைக் குற்றமாகும். இது சிறு குற்றங்களுடன் தொடர்புடையது. சமூகத்தின் நலனைப் பாதுகாப்பதற்காகவும் அத்தகைய குற்றங்கள் மீண்டும் இடம்பெறுவதை தவிர்ப்பதற்காகவும் சிறு குற்றங்கள் தொடர்பில் தற்றுணிபு ரீதியான தண்டனை பிரயோகிக்கப்படுகிறது. குற்றமிழைத்தவருக்கான புனர்வாழ்வு உள்ளடங்கலாக பொதுமக்களது நலனை மையமாகக் கொண்டு த∴தீர் ரீதியான தண்டனைகள் காணப்படுகின்றன. குற்றமிழைத்தவரை நன்னடத்தைக்கு உட்படுத்தும் முகமாக கடந்த காலத்திலிருந்து செல்லுபடியாகும் தண்டனையாக இது இருக்கலாம் அல்லது ஒருவர் தனது கடமையை நிறைவேற்றுகின்றார் என்பதை உறுதிப்படுத்தும் முகமாக இறுக்கமான நடைமுறைகளாக இருக்கலாம். அதாவது, மத வழிபாடு அல்லது நோன்பு போன்றன. த∴தீர் குற்றங்களுக்கு நீதிபதியின் தற்றுணிபு, சமூகத்தின் அமைப்பு முறை, குற்றமிழைத்தவரின் ஆளுமை, அந்தஸ்த்து ஆகியன குற்றத்திற்குப் பங்களிப்புச் செய்கின்றன. மற்றும் தண்டனையை நடைமுறைப்படுத்துவதற்கும் இவை பங்களிப்புச் செய்கின்றன (அமர் 2001, பக்கம் 173). த∴தீர் குற்றங்களின் மையமாக மன்னிப்பளித்தல் மற்றும் குறைந்தளவு தண்டனைகள் காணப்படுகின்றன. மத்தியஸ்தம் செய்தல், பாதிக்கப்பட்டவருக்கும் குற்றவாளிக்கும் இடையிலான கலந்துரையாடல், பாதிக்கப்பட்டவருக்கான நட்டஈட்டு நிகழ்ச்சித்திட்டம் ஆகியவற்றை உள்ளடக்கியதாக பொதுவாக தண்டனை சார் நீதிமுறைகள் காணப்படுகின்றன. நான்கு சந்தர்ப்பங்களில் மாத்திரம் த∴தீர் குற்றங்களுக்கான தண்டனை தள்ளுபடி செய்யப்படும்; குற்றமிழைத்தவரின் பாவமன்னிப்பு, ஆரம்பத்தில் பாதிக்கப்பட்டவரினால் ஒரு தொகையை வழங்குதல் பின்னர் நீதிபதியும் குறிப்பிட்ட தொகையைச் சொல்லுதல். பாதிக்கப்பட்டவரும் குற்றமிழைத்தவரும் ஒருவரையொருவர் மன்னித்தல் மற்றும் குற்றமிழைத்தவர் இறத்தல்.

குற்றமிழைத்தவர் தனது பொறுப்புகளையும் கடமைகளையும் அறிந்துகொள்வதற்கு இஸ்லாம் மதத்தின் பிரகாரம் இத்தகைய தண்டனைச் சட்டங்கள் அவசியப்படுகின்றன. குற்றமிழைத்தவர்களுக்குப் படிப்பினையூட்டும் நடவடிக்கைகளை ஹுதூத் வழங்குகின்றது. த∴தீர் மற்றும் கிஸாஸ் ஆகியன சமூக நலன், இரக்கம், மன்னிப்பளித்தல், புனர்வாழ்வளித்தல் ஆகிய வழிகாட்டல்களின்படி எவ்வாறு தண்டனை சார் நீதியை நிர்வகிக்க முடியுமென்ற வாய்ப்பினை மேற்கூறப்பட்ட த∴தீர் மற்றும் கிஸாஸ் ஆகியன வழங்குகின்றன. மீண்டும் மீண்டும் குற்றங்கள் இடம்பெறாமலிருப்பதை நோக்காகக் கொண்டு த∴தீர் ரீதியான தண்டனைகள் வழங்கப்படுகின்றன. அதேவேளை, வன்முறைகள் மீண்டும் மீண்டும் அதிகரிக்காமலிருப்பதை பாதுகாப்பதனை அடிப்படையாகக் கொண்டு தண்டனை சார் நீதியான கிஸாஸ் வழங்கப்படுகிறது. தண்டனை சார் சட்டத்தின் கடுமையைக் குறைக்கும் முகமாக இறைவனது பாசமும் கருணையும் தீர்ப்புகளின் பொழுது நாடப்படுகின்றன. தண்டனை சார் சட்டங்களை ஒழுங்கமைக்கின்ற பொழுது இரண்டு சமூக மைய இலக்குகளைக் கருத்திற்கொள்ள வேண்டுமென குர்ஆன் தெரிவிக்கின்றது. அதிகளவு தண்டனை வழங்க வேண்டும் என்ற இயல்பான மனிதப் போக்குகளுக்கு சில தாற்பரிய, சட்ட ரீதியான மட்டுப்பாடுகளை விதித்தல் மற்றும் பாதிக்கப்பட்டவருடைய குடும்பத்திற்கு நட்டஈடாக ஒரு தொகையை அவர்களது குடும்பத்தின் விருப்பத்தின் பேரில் வழங்குவதன் மூலம் குற்றமிழைத்தவருக்கு மன்னிப்பு அளித்தல் மற்றுமொரு முறையாகும். தண்டனை சார் சட்டங்களுக்கு மாற்றீடாக நோக்குகின்ற பொழுது பழிவாங்கல் நடவடிக்கைகள் மூலம் எந்த சந்தர்ப்பத்திலும் சமாதானம் தோன்றுவதில்லை என்பதை நாம் உணர முடியும். குணப்படுத்தல் செயன்முறைக்கு மன்னிப்பு அவசியமாகின்றது. மனித உறவுகளை கட்டியெழுப்புவதற்கு இது அடிப்படையாகும்.

### 3.5 இஸ்லாமும் மறுசீரமைப்பு நீதியும்

சமாதானத்தை உருவாக்குதல் (சல்ஹா), நல்லிணக்கம் ((முசல்லஹா) ஆகியன இஸ்லாமிய முரண்பாட்டுத் தீர்வுப் பொறிமுறைகளாகும். இவை இரண்டும் பொதுவாக சல்ஹா என அழைக்கப்படுகின்றன. சீர்திருத்த நீதி மற்றும் சமாதானத்தை உருவாக்குதல் ஆகிய செயற்பாடுகள் அதன் விளைவுகள் பற்றி இவை இரண்டும் குறிப்பிடுகின்றன. சல்ஹா என்பது ஆன்மீகம் சார்ந்த முரண்பாட்டுத் தீர்வுப் பொறிமுறையாகும். உதாரணமாக,தனிப்பட்ட முறையிலோ அல்லது பொதுவாகவோ

நடவடிக்கைகள் மற்றும் சமயம் சார்ந்த விடயங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. பொதுவாக ஒரு சல்ஹா நடைமுறையானது பல்வேறு விதமான பின்வரும் படிமுறைகளைக் கொண்டதாகவிருக்கின்றது.

1. காயத்தையோ அல்லது இறப்பையோ ஏற்படுத்திய குற்றம்.

2. பழிவாங்கல் அல்லது தண்டனை வழங்கல் ஆகியவற்றைத் தடுக்கும் முகமாக தனது குற்றம் பற்றிய விசாரணைகளை மேற்கொள்ளும்படி குற்றமிழைத்தவர் நேர்மையான தலைவர் ஒருவரை நாடுகின்றார்.

3. பாதிக்கப்பட்ட தரப்பினரை தலைவர் சந்தித்து அவர்களது துன்பங்களைக் கேட்டறிகிறார். அதன் பின்னர் அவ்விடயத்தில் இடையீடுகளை மேற்கொள்வதற்கும் வழக்கின் தீர்ப்பை வழங்குவதற்குமாக அவர்களிடம் அனுமதியை நாடுகின்றார்.

4. பாதிக்கப்பட்டவர் இணங்கும் பட்சத்தில் முறையான சல்ஹா விடயங்கள் ஆரம்பமாகின்றன.

5. குறிப்பிட்ட கால கலந்தாராய்வுகள், விசாரணைகள்,துக்கம் இருத்தல் ஆகியவற்றைத் தொடர்ந்து தீர்ப்பாளர் நட்டஈட்டிற்கான ஏற்பாடுகளை மேற்கொள்கின்றார் (தியா). இது குற்றத்தின் கடுமை அதன் தனித்தன்மை ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு குறியீடாகவோ அல்லது பணம் ரீதியான இழப்பீடாகவோ இருக்கலாம்.

6. மத அடிப்படையில் முஷாபா ஒன்றினை மேற்கொள்வதற்காக சமூகம் அணிதிரள்கின்றது. கை குலுக்குவது போல் ஒருவருடைய கரத்தை மற்றவர் இறுகப்பற்றி சமாதானத்தைத் தெரிவிக்கின்றனர். குற்றமிழைத்தவர் பாதிக்கப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்த ஒவ்வொருவருடனும் முஷாபா செய்துகொள்ளல் வேண்டும். இதன் இறுதியில் குற்றமிழைத்தவர் வைத்திருக்கின்ற வெள்ளைக் கொடியில் சில முடிச்சுகளை நடுவர் இடுகின்றார். சமாதானத்தை நிலைநிறுத்துவது இங்கு நினைவுகூரப்படுகிறது.

7. மன்னிப்பையும் மேலும் தமது நல்லிணக்கத்தையும் புலப்படுத்தும் முகமாக பாதிக்கப்பட்டவருடைய குடும்பத்தினர் குற்றமிழைத்தவருக்கு கோப்பி வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

8. பாதிக்கப்பட்டவருடைய குடும்பத்தினருக்கு குற்றமிழைத்தவருடைய குடும்பம் உணவு வழங்குகின்றது. இந்த உணவை முமாலஹா என அழைக்கின்றனர். நல்லிணக்க மத அனுஸ்டானம் இத்தோடு நிறைவுபெறுகின்றது.

மேற்குறிப்பிடப்பட்ட நல்லிணக்கச் செயன்முறையின் பிரகாரம் குற்றத்தை ஏற்றுக்கொள்ளும் தன்மை, குற்றமிழைத்தவர் தனது குற்றத்தை ஒப்புக்கொள்ளல், மன்னிக்கின்ற அதேவேளை, பழிவாங்கல் எண்ணத்தைக் கைவிடல், குறிப்பிட்ட தண்டப்பணத்தை அல்லது நட்டஈட்டினை வழங்குதல் (தியா) ஆகியன இடம்பெறுகின்றன. சல்ஹா என்ற இந்தச் சடங்கு மறுசீரமைப்புத் தன்மையை தன்னகத்தே கொண்டு காணப்படுகிறது. இவ்விடத்தில் யார் சரி, யார் பிழை என்ற தீர்ப்புகள் வழங்கப்படுவதில்லை (குர்ஆன் 42:40)[43]. இங்கு தீர்ப்பு வழங்குவதற்குப் பதிலாக நல்லிணக்கத்தின்பாலே அதிக கரிசனை செலுத்தப்படுகிறது. இரு தரப்பினரும் தமக்கு உரிய முறையில் குறியீட்டு முறையில் தனது வகிபாகத்தைத் தெரிவிக்கின்றனர். இந்தச் செயன்முறையின் பொழுது இரு தரப்பினரும் நேர்மை, பாதுகாப்பு ஆகியவற்றின் அடிப்படையில் சமாதானத்தைத் தளுவுகின்றனர். இந்த முக்கியமான விடயத்தையே வன்முறை அல்லது குற்றம் அவர்களிடமிருந்து திருடியிருந்தது (அபூ-நிமர் 2001, பக்கம் 95).

சல்ஹா தீர்ப்பளிப்பதில்லை, அதற்குப் பதிலாக பாதிக்கப்பட்டவரிடம் காணப்படுகின்ற பழிவாங்கல் என்ற மனப்பாங்கினை மாற்றி மன்னிப்பளிக்கச் செய்கின்றது. அதன் மூலம் தமது மதிப்பைப் புலப்படுத்துவதுடன், குற்றமிழைத்தவருடைய மதிப்பின் மீது ஏற்படுகின்ற பாதிப்பினையும் தவிர்க்கின்றது. இதன் விளைவாக சமூகத்தில் பாதிக்கப்பட்ட பண்புகளை மீள்நிலை நிறுத்துவதோடு, சமூகத்தினதும் பாதிக்கப்பட்ட தரப்பினரதும் முறிந்து போன உறவுகளை மீண்டும் கட்டியெழுப்புகிறது. டோர்ன் பெல்லி அவர்கள் குறிப்பிட்டதாவது, சல்ஹா என்ற பின்புலத்திலே இத்தகைய சமூகக் கண்ணோட்டங்கள் அவசியமாகின்றன. ஏனெனில், குலங்களுக்கு இடையிலான பிணக்குகளைத் தீர்ப்பதற்கு இது சிறந்த முறையாகும். தனிப்பட்ட பிரச்சினைகளுக்கு மேலதிகமாக குலங்களுக்கிடையிலான பிரச்சினைகளுக்குத் தீர்வாகவும் இம்முறை பிரயோகிக்கப்படுகிறது (பெலி 2016, பக்கம் 27). மேலும், மக்கள் மத்தியில் காணப்படுகின்ற உறவுகளை ஆட்சிசெய்வதாக சல்ஹா காணப்படுகிறது. சமூக சமாதானத்தையும் சாந்தியையும் பாதுகாக்கக்கூடிய நேரடியான முக்கியமான சமூகக் கடமையென இதனைக் கருத முடியும்.

[43] வஜஸாஅ சய்யிஆதின் சய்யிஅதும் மிஸ்லுஹா பமன் அபப்வ அஸ்லஹா பஅஜ்ரஹு அல்லாஹ் இன்னஹு வாயுஹிப்பஸ்ஸாலிமின் -
தவறான செலுக்காக செலுத்தப்படும் தொகை அதற்குச் சமமாகவிருத்தல் வேண்டும். ஆனால் யார் மன்னித்து விட்டு நல்லிணக்கத்தில் ஈடுபடுகின்றாரோ அவருக்கான பரிசில் இறைவனிடம் இருக்கின்றது. அநீதியாளர்கள் மீது அவன் எப்பொழுதும் அன்பு செலுத்துவதில்லை.

ஆனால், இறைவனின் உரிமையுடன் தொடர்புடைய சகலவிதமான விடயங்களும் இதனுள் அடங்காது என்பதைக் கருத்திற்கொள்ளவும்.

சல்ஹாவின் மிக முக்கிய அம்சம் மன்னிப்பதாகும். இறைவனே மிகச் சிறந்த மன்னிப்பாளனாகக் கருதப்படுகின்றான் (குர்ஆன் 39:53)[44]. நியாயப்படுத்தக் கூடியளவு கோபமுடையவர்களையும் மன்னிப்பளித்து அருள்களை வழங்குகின்றான் (குர்ஆன் 42:37)[45]. பழி தீர்ப்பதற்குப் பதிலாக இங்கு மன்னிப்பளிக்கப்பட்டு நல்லிணக்கம் ஏற்படுத்தப்படுகிறது. பழி தீர்த்தல் அனுமதிக்கப்பட்ட பொழுதிலும்கூட மன்னிப்பளித்தல் முன்னுரிமை பெறுகின்றது. மன்னிப்பளித்தல் ஒரு துணிகரமான செயலாகும் (குர்ஆன் 42:43)[46]. முரண்பாட்டு நிலைமைகளில் உறவு ரிதியான சமநிலை மற்றும் பாதிக்கப்பட்டவர் குற்றமிழைத்தோர் ஆகியோருக்கு இடையிலான குணப்படுத்தல்களை மேற்கொள்வதற்கு மன்னிப்பளித்தல் ஒரு முக்கியமானதாகும். எனவே, மறுசீரமைப்பு நடவடிக்கைகளின் பொழுது மன்னிப்பளித்தல் முக்கியமானதென குர்ஆனில் வலியுறுத்தப்பட்டுள்ளது. சட்ட ரீதியான நெறிமுறைகளுக்கும் அப்பால் மறுசீரமைப்புக் கொள்கைகள் இஸ்லாமியப் போதனைகளில் பின்னிப்பிணைந்து காணப்படுகின்றன.

இஸ்லாமியக் கொள்கைகள் பழிவாங்குதலுக்குப் பதிலாக அத்தியத் என்ற நட்டஈட்டு முறையையும் கொண்டுள்ளன (குர்ஆன் 4:92)[47]. கொலை செய்யப்பட்டவருடைய குடும்பத்திற்கு அத்தியத் நட்டஈடாக வழங்கப்படுகிறது (பொதுவாக பேசப்படுகின்ற இரத்தப் பணம் அல்ல). குற்றமிழைத்தவர் மற்றும் பாதிக்கப்பட்டவர் ஆகிய இரு தரப்பினரும் அத்தியத் கொடுப்பனவு தொடர்பில் இணங்குதல் வேண்டும். இருப்பினும் பாதிக்கப்பட்டவருடைய விருப்பமானது சமூக அக்கறைகளுக்கும் அரச நோக்கங்களுக்கும் ஏற்ற விதத்திலிருத்தல் வேண்டும். அவர்கள் விரும்பினால் கொலை செய்தவர்களுக்கு தண்டனை நிறைவேற்றும்படி கோரலாம் அல்லது விரும்பினால் அத்தியத் பெறாமலே அவரை மன்னிக்கவும் முடியும் (வஸ்த்தி 1989, பக்கம் 64). குற்றமிழைத்தவரினால் அத்தியத் வழங்கப்படுதல் வேண்டும். முடியாதபட்சத்தில், அவரது குடும்ப உறுப்பினர்கள் அதனை வழங்கலாம். இவர்கள் யாராலும் வழங்க முடியாத பட்சத்தில் அதனை வழங்குவது அரசாங்கத்தின் பொறுப்பாகும். ஏனெனில், கொலை செய்யப்பட்ட நபர் அவரது குடும்ப உறுப்பினர்களுடைய உரிமை மற்றும் பராமரிப்பு ஆகியவற்றை மேற்கொள்வதற்கான பொறுப்பு அரசாங்கத்திற்கு உண்டு. பாதிக்கப்பட்டவருடைய குடும்பம் குறிப்பிட்டளவு அத்தியத் நட்டஈட்டுத் தொகையைக் கோர முடியும். இருப்பினும், இது தொடர்பான இறுதித் தீர்மானம் அரசினாலேயே மேற்கொள்ளப்படுகிறது. அரேபிய நாடோடிச் சமூகங்களாக வாழ்ந்த மக்கள் மத்தியில் ஏற்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான சிறந்த துணிகரமான வழிமுறையாகவே அத்தியத் பெருமானர் முஹம்மது (ஸல்) அவர்களால் அறிமுகம் செய்யப்பட்டது. வரலாற்றை நாம் ஆராய்கின்ற பொழுது இஸ்லாத்திற்கு முற்பட்ட காலப்பகுதியினுள் இரத்தத்திற்கு இரத்தம் என்ற நிலைமையிலேயே சமூக ஒழுங்கு பேணப்பட்டது. மேலே கலந்துரையாடப்பட்டவற்றின் அடிப்படையில், அத்தியத் அறிமுகப்படுத்தப்பட்டதன் முகமாக சமூகத்தில் வன்முறைகள் குறைந்துள்ளது எனக்குறிப்பிடலாம்.

## 3.6 தொகுப்பு

இஸ்லாத்தைப் பொறுத்தவரையில் நீதியை இரண்டாக வகைப்படுத்தலாம். தண்டனை சார் நீதியை நடைமுறைப்படுத்தும் முகமாக குற்றமிழைத்தவருக்கு எதிராக சட்ட நடவடிக்கையெடுத்தல். இரண்டாவது, குற்றமிழைத்தவருக்காக தண்டனை வழங்காத சட்ட நடைமுறை. இதனை மறுசீரமைப்பு நீதி என்கின்றோம். நீதிமன்றமொன்றில் குற்றமிழைத்தவருக்கு எதிராக எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி சான்றுகள் முன்வைக்கப்படுகின்ற பொழுது தண்டனை சார் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

---

[44] குல்யா இபாதியல் லதீன அஸ்ரபூ அலா அன்புசிஹிம் லா தக்னதூ மிர் ரஹ்மதில்லா இன்னல்லாஹ் இன்னல்லாஹா யக்பிருத்துனூபா ஜமீஆ இன்னஹுூ ஹுூவல் கபூருர் தஹீம் -
கூறுங்கள் “ஓ சேவகர்களே உங்களில் யார் வரம்பு மீற நடந்துகொள்கின்றீர்களோ: இறைவனின் கருணை மீது நம்பிக்கையுள்ளவர்களாக இருக்கின்றீர்களோ இறைவன் சகல பாவங்களையும் மன்னித்துவிடுவான். அவனே மன்னிக்கக்கூடியவனாக இருக்கின்றான். அவனே அருள் இரக்கமுள்ளவனாக இருக்கின்றான்.

[45] வல்லதீன யஜ்தனிபூ நா காபிரல் இஸ்மி வல் பகாஇஸி இவதாமா காதிபுஹுூம் யஹ்மிரூன் -
பெரிய பாவங்களையும் ஒழுங்கீனத்தையும் யார் தவிர்க்கின்றார்களோ, அவர்கள் கோபப்பட்டால் மன்னித்துவிடுங்கள்.

[46] வலமன் ஸபர வஅபர இன்ன தாலிக அஸ்மில் உமூர் -
யார் பொறுமையாக தாங்கிக் கொண்டு மன்னிக்கின்றார்களோ அதுவே உண்மையான தீர்வின் அத்தாட்சியாகும்.

[47] வமாகான லிமுஹ்மினின் அய்யக்துல ம.ீ.மினன் இல்லா கதஅன் வமன் கதல மு.ீ.மினன் கதஅன் பதாஇருன் ரகபதின் மு.ீ.மினாதின் இன் கான மின் கய்யுமின் பய்னகும் வபய்னஹுூம் மீதாகும் பாதியதுன் முஸல்லமதன் இல்லா அஹ்லிஹி வதஹ்ரீரு ரகபதிம் மு.ீ.மினதின் பமல்லம் யஜித் பஸியாமு சஹ்ரய்னி முததப்பிஅய்னி தவ்பதும் மினல்லாஹி வ கானல்லாஹுூ அலீமன் ஹகீமன் -
தவறுதலாகவன்றி ஒரு விசுவாசி மற்றுமொரு விசுவாசியைக் கொலைசெய்யமாட்டான். தவறுதலாக விசுவாசி ஒருவரைக் கொலை செய்த ஒருவன் விசுவாசியான அடிமை ஒருவரை விடுதலை செய்ய வேண்டும். பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு நட்டஈடுகளை வழங்கவேண்டும். அவர்கள் கருணையின் அடிப்படையில் வேண்டாம் எனச் சொல்லாலொழிய இந்த நட்டஈட்டை வழங்கல் வேண்டும். பாதிக்கப்பட்டவர் உங்களுடன் குரோதத்திலுள்ள நபர்களுள் ஒருவராயின், அதேவேளை அவர் ஒரு விசுவாசியாக இருக்கும் பட்சத்தில் இதற்கான நட்டஈடாக விசுவாசமுடைய அடிமை ஒருவரை விடுதலை செய்ய வேண்டும். நீங்கள் உடன்படிக்கையை மேற்கொண்ட மக்கள் கூட்டத்தைச் சேர்ந்தவராக அவர் இருப்பின் அந்த நட்டஈடு அவருடைய குடும்பத்தினருக்கு கையளிக்கப்படல் வேண்டும். அத்தோடு, விசுவாசமுடைய அடிமை ஒருவரும் விடுதலை செய்யப்படல் வேண்டும். இதனை மேற்கொள்வதற்கு வசதி இல்லாதவர் தொடர்ச்சியாக இரண்டு மாதங்கள் நோன்பு நோக்க வேண்டும். இறைவனிடம் பாவமன்னிப்புக் கோருதல் வேண்டும். இறைவன் எல்லாவற்றையும் அறிந்தவன். அவனே சிறந்த அறிவாளி.

இச்சந்தா்ப்பத்தில் குற்றமிழைத்தவா் தனது கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு முழுமையான வாய்ப்புகள் வழங்கப்படல் வேண்டும். அதாவது பிரதிநிதித்துவம் செய்வதற்குத் தேவையான வாய்ப்புகள் வழங்கப்படல் வேண்டும். மற்றும் பாதிக்கப்பட்டவா் நட்டஈட்டை வழங்க மறுக்கும் பட்சத்தில், நீதிமன்றமானது கடும் தண்டனையை அல்லது மரண தண்டனையை, எது ஏற்புடையதோ அதனை விதிக்கலாம். இஸ்லாமிய தண்டனை ஆய்வுகள், தண்டனையை இரு வகையாக வகைப்படுத்தியுள்ளன. அவை குா்ஆனில் குறிப்பிட்டுள்ள ஹுதூத் மற்றும் கிஸாஸ் ஆகியனவாகும்.

குா்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ளவைகள் (ஹுதூத், கிஸாஸ்) அடுத்து அரசனின் தற்றுணிபு அதிகாரங்களுக்கு விடப்பட்டவை. இவை மாறுபட்ட உரிமை மீறல்களையும் கடப்பாடு மீறல்களையும் அடிப்படையாகக் கொண்டவை. இறைவனது உரிமைகள் அல்லது தனி நபா்களது உரிமைகள்; தண்டனைகளை நடைமுறைப்படுத்துகின்ற பொழுது மாறுபட்ட நீதித்துறைத் தற்றுணிபுகள் பிரயோகிக்கப்படுகின்றன. விதிக்கப்பட்ட தண்டனையைக் குறைத்தல், உண்மையைக் கண்டறிவதற்கான பல்வேறு முறைகள், இருப்பினும் இவை யாவற்றினதும் இறுதி நோக்கம் நீதியான சமூகத்தை அடைவதாகும்.

தண்டனை அளித்தலைப் பிரயோகிக்க முடியாத சூழ்நிலைகளில் பண ரீதியான நட்டஈடுகளை வழங்குவது விரும்பத்தக்கது (அத்தியத்). மரண தண்டனைக்கு மாற்றீடாக கிஸாஸ் போன்ற முறைகளும் காணப்படுகின்றன. இவற்றுள் நட்டஈடு (தியா), நல்லிணக்கம் (சல்ஹா) அகியனவும் உள்ளடங்குகின்றன. பாதிக்கப்பட்டவரின் இடையீடாக மன்னிப்பையும் இணைக்க முடியும். இஸ்லாத்தில் மறுசீரமைப்புச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள மிக முக்கியமான கொள்கைகளுள் ஒன்றாக இது காணப்படுகிறது. சல்ஹா என்பது தியா என்ற நட்டஈட்டிற்கு மாற்றீடு அல்ல. இருப்பினும் இந்தச் செயன்முறையில் ஒரு மேலதிக படிமுறையாக இது காணப்படுகிறது. சல்ஹா மன்னிப்பு என்ற அந்தஸ்த்தினைப் பெறுகிறது.

தண்டனை சாா் சட்டமாகவிருக்கலாம் அல்லது மறுசீரமைப்புச் சட்டமாகவிருக்கலாம் இதனை நடைமுறைப்படுத்துவதற்கான தெரிவு தொடா்பான அணுகுமுறை பாதிக்கப்பட்டவரில் தங்கியுள்ளது. தனிநபா் ஒருவா் கொலை செய்யப்படும் பட்சத்தில் பாதிக்கப்பட்டவருக்கு நீதியை நாடுவதற்கான அதிகாரத்தை குா்ஆன் வழங்குகின்றது. கிடைக்கப் பெறுகின்ற சகலவிதமான சான்றுகளையும் ஆராய்ந்ததன் பின்னா் அவரது குற்றம் நிரூபிக்கப்படும் பட்சத்தில், முறையான ஆராய்வுகளின் பின்னா் இது நடைபெறும் பட்சத்தில், பாதிக்கப்பட்டவருக்கு தண்டனை சாா் சட்டத்தைக் கோருவதற்கான சட்ட ரீதியான உரிமை உண்டு. ஆனால், சட்ட ரீதியான இந்த சுதந்திரம் கட்டுப்பாடுடன் கூடியதாகும். தண்டனையினை வழங்க வேண்டும் என் தீர்மானிக்கும் போது பாதிக்கப்பட்டவா் நியாயமாகவிருத்தல் வேண்டும். குா்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ள சரியாக வழிமுறைகளைப் பின்பற்றும் பட்சத்தில் நீதியான தண்டனைப் பிரயோகமானது நீதியான, நோ்மையான சட்ட உரிமையாகக் கருதப்படுகிறது. காட்டுமிராண்டித் தனமான பழிவாங்கலுக்கு மாற்றீடாக இது காணப்படுகிறது.

குா்ஆனில் முரண்பாட்டுத் தீா்பு ஒரு கொள்கையாகக் காணப்படுகிறது. குா்ஆனில் "நல்லிணக்கமே சிறந்தது" எனக் கூறப்படுகிறது (குா்ஆன் 4:128). போ்ன்ஸ் குறிப்பிட்டதாவது, "வன்முறையற்ற சமூகமொன்றை இஸ்லாத்தினால் கட்டியெழுப்ப முடியாது எனக் குறிப்பிடுவதற்கு எவ்விதமான தா்க்க ரீதியான காரணிகளும் இல்லை, இன்றைய சூழலில் நிச்சயமாக ஒருசிலரினால் இதனை மேற்கொள்ள முடியும்" (போ்ன்ஸ் 1996, பக்கம் 165). குா்ஆனின் ஒட்டுமொத்தப் போதனைகளும் சமாதானம், நீதி என்ற எண்ணக்கருக்களை மையமாகக் கொண்டு காணப்படுகின்றன. இவை நிலைமாற்றுக்கால நீதிப் பொறிமுறைக்கு மிகவும் அவசியமானவை என இஸ்லாமிய மதத்தின் பெயரால் ஆலோசிக்கின்றோம்.

## Bibliography

Abu-Nimer, M., & Augsburger, D. (Eds.). (2010). *Peace-Building by, between, and beyond Muslims and Evangelical Christians.* Lexington Books.

Alī, M. S. (2004 ). *The Holy Qur'ān.* Islamic International Publications Limited.

Ammar, N. H. (2001). Restorative Justice in Islam: Theory and Practice. In M. L. Hadley (Ed.), *The Spiritual Roots of Restorative Justice* (pp. 161-180). Suny Series in Religious Studies: State University of New York Press.

Bala, M. (2015). Transitional Justice in Sri Lanka: Rethinking Post-War Diaspora Advocacy for Accountability. *International Human Rights Law Journal, 1*(1). Retrieved from http://via.library.depaul.edu/ihrlj/vol1/iss1/2

Bloomfield, D. (2006). Strategies for Reconciliation: Are Justice and Peacebuilding Complementary or Contradictory? In M. Bleeker (Ed.), *Dealing with the Past and Transitional Justice: Creating Conditions for Peace, Human Rights and the Rule of Law* (pp. 57-64). Political Affairs Division IV, Federal Departement of Foreign Affairs FDFA

Burns, J. P. (Ed.). (1996). *War and Its Discontents: Pacifism and Quietism in the Abrahamic Traditions.* Washington, DC: Georgetown University Press.

Coulson, N. J. (2011). *A History of Islamic Law.* Aldine Transaction.

Haleem, M. A., Sharif, A. O., & Daniels, K. (2003). *Criminal Justice in Islam: Judicial Procedure in Sharia.* London: Tauris.

Kasapas, G. (October 2008). An Introduction to the Concept of Transitional Justice: Western Balkans and EU Conditionality. *UNISCI Discussion Papers* (pp. 59-76). UNISCI: Hellenic Centre for European Studies.

Khadduri, M. (1984). *The Islamic Conception of Justice* . Baltimore: The John Hopkins University Press.

Lambourne, W. (2004 ). Post-Conflict Peacebuilding: Meeting Human Needs for Justice and Reconciliation. *Peace, Conflict and Development*(4 ), 1-24.

McCandless, E. (2001). The Case of Land in Zimbabwe: Causes of Conflict, foundation for Sustained Peace. In M. Abu-Nimer (Ed.), *Reconciliation, Justice and Coexistence: Theory and Practice* (pp. 209-222). Lanham, MD: Lexington Books.

Mustaffa, F. (n.d.). *Islamic Concept of Human Rights*. Retrieved 9 5, 2016, from Christian Muslim Dialogue On: http://www.daga.org.hk/press/ia/christian-muslim/content_3.htm

Muzafar, C. (2000). Islam: Justice and Politics. *Journal of Dharma: Dharmaram Journal of Religions, 25*, 260- 280.

Nadery, A. N. (2007). Peace or Justice? Transitional Justice in Afghanistan. *International Journal of Transitional Justice, 1*(1), 173-179.

Rosen, L. (2000). *The Justice of Islam: Comparative Perspectives on Islamic Law and Society* . Oxford: Oxford University Press.

Sacehina, A. (2001). *The Islamic Roots of Democratic Pluralism.* Oxford: Oxford University Press 2001.

Shah-Kazemi, R. (2007). *Justice and remembrance : introducing the spirituality of Imam ʻAlī.* London: I.B. Tauris in association with the Institute of Ismaili Studies.

Sharify-Funk, M. (2001). Peace and the Feminine in Islam. In A. AZIZ SAID, N. C. FUNK, & A. KADAYIFCI (Eds.), *Peace and Conflict Resolution in Islam* (pp. 277-298). University Press of America.

Sooka, Y. (2006). Dealing with the Past and Transitional Justice: Creating Conditions for Peace, Human Rights and the Rule of Law. *Dealing with the Past – Series* (pp. 165-182). Switzerland: Political Affairs Division IV, Federal Departement of Foreign Affairs FDFA.

Souaiaia, A. E. (2008). *Contesting Justice: Women, Islam, Law, and Society.* State University of New York Press.

*The Holy Qur'ān.* (2012). (T. ITANI, Trans.) Dallas/Beirut: ClearQuran.

Wadud, A. (1995). On Belonging as a Muslim Woman. In G. Wade-Gayles (Ed.), *My Soul Is a Witness: African-American Women's Spirituality* (pp. 253-265.). Boston: Beason Press.

Wasti, T. (2008). *The Application of Islamic Criminal Law in Pakistan* (Vol. 2). Brill | Nijhoff.

Weeramantry, C. G. (1988). *Islamic Jurisprudence.* UK: Palgrave Macmillan.

# அத்தியாயம் 4

## கிறிஸ்தவ நற்செய்தி நல்லிணக்கம்
## இலங்கையில் நிலைமாற்றுக்கால நீதி முன்னெடுப்புகளுக்கு கிறிஸ்தவ பதிலளிப்புகள்

**"நாட்டிற்கு இழைக்கப்பட்ட தீங்கு மீண்டும் இடம்பெறுவதை நாம் விரும்பவில்லை. அவர்களுக்கு மனிதாபிமானத்தை நாம் காட்ட விரும்புகின்றோம். அதன் மூலம் அவர்கள் அவர்களுக்குரிய சொந்த மனித நேயத்தை மீட்டுக் கொள்ளலாம்"[48]**

### 4.1 அறிமுகம்

நிலைமாற்றுக்கால நீதியினை அடைய நல்லிணக்கத்திற்கான அரசியல் அர்ப்பணிப்பு அவசியம். அதாவது "பாதிக்கப்பட்டவரது துன்பங்களை அங்கீகரித்தல், குற்றமிழைத்தவர்களது ஒப்புதல்கள் மற்றும் மாற்றங்கள், பகிரங்க மன்னிப்புக் கோரல்கள், மன்னிக்கும் செயற்பாடுகள், பொதுவான நினைவுச் சின்னங்கள், பல்வேறு விதமான காயங்களை ஆற்றுதல்,பகைமையையும் குரோதத்தையும் வெற்றிகொள்ளல்" போன்றவற்றின் மூலம் ஆக்கபூர்வமான உறுவுகளைக் கட்டியெழுப்புவது அவசியமாகிறது. முரண்பாடுகளைத் தீர்ப்பது தொடர்பில் மத்தியஸ்த பங்கினை கிறிஸ்தவ தேவாலயங்கள் ஏற்கவேண்டும். நல்லிணக்கம் தொடர்பான சில விளக்கங்களை கிறிஸ்தவ மரபிலிருந்து புரிந்துகொண்டமை, அதன் பொருள் விளக்கங்கள் ஆகியவற்றை மையமாகக் கொண்டு இவ் அத்தியாயத்தில் சில விடயங்கள் விளக்கப்படுகின்றன. மேலும் நல்லிணக்கமானது கிறிஸ்தவ நற்செய்தியுடன் தொடர்புடைய விடயமாகும். அது இரண்டு முக்கியமான படிமுறைகளை எடுத்துரைக்கின்றன. அவையாவன; நீதிக்கான தீர்க்கதரிசன அழைப்பு மற்றும் உண்மையை எடுத்துரைத்தல். அர்த்தமுள்ள நல்லிணக்கத்திற்கு உண்மையை கண்டறிவது முக்கியமாவதுடன், உண்மையை கண்டறிய உண்மையை எடுத்துரைத்தல் அடிப்படையாகும். மேலும், "வெளிப்படுத்தல் குணப்படுத்தும்" என்பதற்கு அமைய, நல்லிணக்கம், ஏற்றப்பட்ட வடுவை குணப்படுத்தும் எனவும் வாதிக்கப்படுகின்றது. இவ்வத்தியாயத்தில் நீதியும் நல்லிணக்கமும் பிரிக்கமுடியாது என்பதும், இதனால் நல்லிணக்கத்தின் நட்செய்தி நம்பிக்கை உருவாக்கத்தின் மையப் புள்ளியாக இருப்பதையும் எடுத்துரைக்கின்றது.

### 4.2 தேவாலயங்களும் கிறிஸ்தவ நற்செய்திதொடர்பான நல்லிணக்கமும்.

இவை கடவுளிடமிருந்து வந்தன. கிறிஸ்த்து மூலமாக அவரே நல்லிணக்கத்தில் ஈடுபட்டார். எமக்கு நல்லிணக்கத்திற்கான அமைச்சை வழங்கினார் (தியாகோனியா). கிறிஸ்த்து மூலமாக இந்த உலகத்தில் ஆண்டவன் நல்லிணக்கத்தை மேற்கொண்டார். அவர்களது அத்துமீறல்களை அவர்களுக்கு எதிராக பிரயோகிக்கவில்லை. நல்லிணக்கத்திற்கான செய்தியை நம்பிக்கையுடன் விதைத்தார் (லோகோஸ்) (2 கொரி 5:18-19).

கொரிந்தில் சென்ட் போளின் கூற்றின் பிரகாரம், ஏசுவின் நல்லிணக்கத்திற்கான அமைச்சு மற்றும் சமாதானம் ஆகியன ஆலயங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் கிருஸ்தவர்கள் நல்லிணக்கத்திற்கு உட்பட்டவர்களாவும் நல்லிணக்க சமூகத்தவர்களாகவும் திகழ்கின்றனர். நல்லிணக்கத்தின் முக்கிய உள்நாதமாக கடவுளே இருக்கின்றார். மனித நல்லிண்ககம் தொடர்பான அமைச்சை நோக்குகையிலும் கூட இந்த நல்லிணக்கச் செயற்பாடுகளானது கடவுளுக்குக் குறைந்தது அல்ல.

நிலைமாற்றுக்கால நீதி தொடர்பில் சமகால அரசியல் சொல்லாடல்களில் நல்லிணக்கம் தொடர்பில் கூறப்பட்டுள்ளவற்றை விட வித்தியாசமாகவே போள் குறிப்பிட்டுள்ளார். முதலாவதாக, நல்லிணக்கச் செயன்முறையினை கடவுளே ஆரம்பித்து வைக்கின்றார். இருப்பினும், நிலைமாற்றுககால நீதியைப் பொறுத்தவரை குற்றமிழைத்தவரே அதனை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொள்வதுடன், பாதிக்கப்பட்டவர்கள் அதனை நல் விருப்புடன் ஏற்றுக்கொள்ள வேண்டும் (மார்ஷல் 1978). இரண்டாவதாக, கொரின்ட் ஆலயங்கள் கடவுளிடம் நல்லிணக்கம் செய்துகொள்ள சமூக மற்றும் அரசியல் வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் மேற்கொள்ள் வேண்டும். மூன்றாவதாக வலிமை குன்றிய தரப்பினர் நீதியை நாடுவதிலும் பார்க்க வெற்றிகொண்டவர்கள், இழப்பீடுகளை வழங்குதல் போன்ற செயல்களை மேற்கொள்வதன் மூலம் நல்லிணக்கத்தை வெற்றிகரமாக கட்டியெழுப்ப முடியுமென போள் தெரிவிக்கின்றார். இங்கு இரண்டு விடயங்கள் பரிமாறப்படுகின்றன; "பகைமைக்கு நட்பு (நல்லிணக்கம்), பாவத்திற்கு நீதி" (2 கொரி 5: 18-21)[49].

---

[48] Ntsebeza, 2000a இல் குறிப்பிடப்பட்டுள்ளது. தனது மகன் கிறிஸ்தோபர் பீட்ஸ் கொலை செய்யப்பட்டது தொடர்பில் அவள் சாட்சியமளிக்கையில், தனது மகனின் கொலைக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரியை சியன்னியா நிக்கு மன்னித்தார். இந்த வார்த்தைகளை அவர் குறிப்பிட்டார். அதன் காரணமாக குற்றமிழைத்தவர் மனிதனாக மாறினார்.

[49] நல்லிணக்கத்திற்கான கிரேக்கச் சொல்லானது பரிமாற்றம் என்ற சொல்லின் அடிப்படையில் தோன்றியது. பகைமைக்காக நட்பை மாற்றிக்கொள்ளல் என அர்த்தப்படும் (மார்கல், 2004, பக்கம் 261). ஊழச 5:21. எனவே, மற்றுமொரு பரிமாற்றம்

ரோமன்ஸ் 5: 9-10 சமாதானமும் நல்லிணக்கமும் சமாந்தரமாகச் செல்கின்றன என்பதற்கான நியாயப்பாடுகளை போள் வலியுறுத்துகின்றார்: "நிச்சயமாக அவரது இரத்தத்தினால் நாம் நியாயப்படுத்தப்பட்டுள்ளோம், அவருடைய இரத்தம் சிந்தல் காரணமாக கடவுளின் கோபத்திலிருந்து நாம் காப்பாற்றப்படுவோம், நாம் எதிரிகளாகவிருந்த பொழுது அவருடைய மகனின் இறப்பின் காரணமாக கடவுளிடம் நாம் நல்லிணக்கம் கொண்டோம். நிச்சயமாக அதிகளவில் நாம் நல்லிணக்கத்திற்கு உட்படுத்தப்பட்டோம். அவருடைய வாழ்க்கையினால் நாம் காப்பாற்றப்படுவோம்".

ரோமன்ஸ் 5: 1-11, நியாயப்பாடுகளும் நல்லிணக்கங்களும் கடவுளிடமிருந்து ஒன்றாக பரிசில்களாகக் கிடைக்கின்றன. சமூக பொருளாதார் பலம் பொருந்தியவராகளே விளைவிக்கப்பட்ட தீமைகளுக்கு வருத்தப்பட வேண்டியவர்கள் என கூறுகின்றது. மேலும், தீமை விளைவித்தோர் நல்லிணக்கத்தை அடையும் முகமாக வருத்தவருத்தப்பட வேண்டியது பாதிக்கப்பட்டவர்களின் உரிமை என பரிந்துரை செய்யப்படுவதுடன், நல்லிணக்கத்தின் மூலம் மனிதர்கள் இறைவனின் நீதியை நாட முடியுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், செய்த செயலுக்கு வருத்தப்படுவதன் தாற்பரியம் நல்லிணக்கத்தினை அடைய எத்தனிக்கும் போது தெளிவுபடுத்தப்படும் எனவும் கூறப்படுகின்றது.

நல்லிணக்கமானது மாறுபட்ட பல மக்கள் குழுக்களுக்கு மத்தியில் இடம்பெறலாம். உதாரணமாக, "இயேசு நாதர் சிலுவையில் அறையப்பட்டதன் மூலம் யூதர்களையும் பிற சமயத்தவர்களையும் ஒன்றாக இணைத்தார். இரண்டு குழுக்களையும் ஆண்டவனிடத்லதில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தினார்" (எபெ 2:14-16)[50]. இரண்டு மானுட இனங்களுக்குப் பதிலாக அவற்றை ஒன்றாக மாற்றுவதே கிறிஸ்த்துவின் நோக்காக் காணப்பட்டது. அதன் மூல நோக்கம் சமாதானத்தை ஏற்படுத்துவதாகும். அவர்களுக்கிடையில் காணப்பட்ட பிரிவினைவாத எண்ணங்களுக்குப் பதிலாக இப்பொழுது சமாதானம் காணப்படுகிறது. கிறிஸ்த்துவே அந்த சமாதானம் (எபெ 2:14). ஆண்டவனின் இராச்சியம் நல்லிணக்கச் செய்திகளை உள்ளடக்கியுள்ளதாக வேதங்கள் தெரிவிக்கின்றன. அத்தகைய நல்லிணக்கம் ஒரு கோட்பாடோ அல்லது வெறும் எண்ணக்கருவோ அல்ல. அதுவோர் மனிதன்: கிறிஸ்த்து, கடவுளிடம் எங்களுக்காக நல்லிணக்கத்தை மேற்கொண்டவர். இவற்றின் அடிப்படையில், நல்லிணக்கத்திற்கான பொறுப்பு ஆலயங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. அவர்களுடைய பயணத்தின் நோக்கம் நல்லிணக்கம். எனவே, இலங்கையில் ஆலயங்கள் நல்லிணக்கத்தை மேற்கொள்வதற்கான தமது பொறுப்பினைக் காத்திரமாக மேற்கொள்ளல் வேண்டும். அத்தோடு, கிறிஸ்தவ நற்செய்தி நல்லிணக்கத்தை அடிப்படையாகக் கொண்டு நிலைமாற்றுக்கால நீதி தொடர்பில் பொருத்தமான வரைவுச்சட்டகங்களையும் விருத்திசெய்தல் வேண்டும்.

## 4.3 நீதி மற்றும் உண்மையை எடுத்துரைத்தல் ஆகியவற்றுக்கான தீர்க்கதரிசனம் மிக்க அழைப்பாக நல்லிணக்கம்

நீதி தொடர்பான தொனிப்பொருள் முதலாவது இசையாவின் புத்தகமெங்கும் வியாபித்துக் காணப்படுவதுடன் (அத் 1-39), பெரிய நாடுகளிடமிருந்து ஆக்கிரமிப்பு அச்சுறுத்தல்களைக் இரண்டு சிறிய நாடுகளின் மக்களுக்கு இசையவால் வலியுறுத்தப்பட்டது. இசையா நீதியை ஏற்படுத்த வேண்டுமெனக் கருதிய தருணத்தில் அந்த இரண்டு சமூகத்தினரும் உள்ளக ரீதியாக நல்லிணக்கத்திற்குட்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர்களுக்கு எதிராக யார் அநீதிகளை இழைத்தார்களோ அவர்களுடன் நல்லிணக்கத்திற்கு உட்படுத்தப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கின்றார். தீர்க்கதரிசி இசையா அவர்களும் நீதிக்கான அவரது அழைப்பும் சமூகங்கள் எவ்வாறு நல்லிணக்கத்தை முன்னெடுக்க முடியும், அதாவது மிகவும் சக்திபடைத்தவர்கள் கூட தாம் இழைத்த அநீதிகளை மறுக்கின்ற சந்தர்ப்பத்தில் கூட இதனை மேற்கொள்ள முடியுமென்பதற்கான சிறந்த உதாரணமாக இச்சம்பவம் திகழ்கிறது.

நீதிக்கான கடவுளின் அழைப்பை இசையா முழுவதும் நாம் காண முடியும். குறிப்பாக தீமை செய்வதை நிறுத்திக் கொள்ளுங்கள், நன்மை செய்வதற்கு கற்றுக்கொள்ளுங்கள், நீதியை நாடுங்கள், ஒடுக்கப்பட்டவரை மீட்டெடுங்கள், அநாதைகளை பாதுக்காப்பாக வைத்திருங்கள், விதவைகளுக்கு உதவுங்கள் போன்ற வசனங்களை இங்கு காணமுடியும். தன்னுடைய சக மனிதனை முறையாகவும் நேர்மையாகவும் நடத்துவதன் மூலமே கடவுளுக்குச் சேவகம் செய்யக்கூடிய மக்களாக தாம் திகழ முடியுமென்பதை ஜூடா மக்களுக்கு இசையா நினைவுபடுத்தினார். கடவுள் அந்த மக்களைப் பார்த்துக் கேட்டார், "என்னுடைய மக்களை அடக்குவதனால் உங்களுக்கு என்ன கிடைக்கின்றது, அவர்களைத் துன்பத்துக்கு உள்ளாக்குவதனால் உங்களுக்கு என்ன கிடைக்கிறது" (ஏசா 3:15). தமது நாட்டிலுள்ள ஓரங்கட்டப்பட்ட மக்களை துன்பத்திற்கு உள்ளாக்குவதனால் பல நாடுகள் வீழ்ச்சியடைகின்றன. இதனால், அப்பாவி மக்களது உரிமைகளைத் தடுக்க வேண்டாமென கடவுள் அழைப்பு விடுக்கின்றார். மக்களுக்கிடையில் தீர்ப்பாளராக கடவுள் செயற்படும் பொழுது யுத்தம் செய்வதற்கான, ஆயுதங்களின் தேவைகள் இல்லாதொழிகின்றன. மக்கள் தமது ஆயுதத்தையும் வாளையும் சாதாரண மக்களுக்கு

இடம்பெறுவதாக போல் குறிப்பிடுகிறார். நன்மைக்குப் பதிலாக அல்லது நீதிக்குப் பதிலாக தீமை மாற்றிக்கொள்ளப்பட்டது.

[50] பகைமைக்குப் பதிலாக அவரே சமாதானம்: அவருடைய சதையினால் இரண்டு குழுக்களையும் ஒன்றாக்கினார். பிரித்த சுவரை உடைத்திருந்தார். அதுவே எம் மத்தியில் காணப்பட்ட குரோதம் ஆகும். தனது கட்டளைகளினாலும் நியாயங்களினாலும் சட்டத்தை இல்லாதொழித்தார். இரண்டு மானுட இனங்களுக்குப் பதிலாக புதிய மானுடமொன்றைக் கட்டியெழுப்பினார். சமாதானத்தை உருவாக்கினார். சிலுவையின் மூலமாக இரண்டு குழுக்களையும் இறைவனிடம் நல்லிணக்கப்படுத்தினார். இதன் மூலமாக குரோதத்தை இல்லாதொழித்தார்.

எதிராக பயன்படுத்துவதை பல சந்தர்ப்பங்களில் நாம் கண்டிருக்கின்றோம். (ஏசா 2:4) தெய்வீக நல்லிணக்கமானது சமூகங்களைச் சாந்தப்படுத்தி, அவர்களுக்கு இடையிலான உறவுகளை மேம்படுத்தி, அவர்கள் மத்தியில் காணப்படுகின்ற அநீதிகளை வென்றெடுக்கிறது. அதுமட்டுமன்றி, ஒடுக்கு முறைக்கு மத்தியிலும் உறுதிப்பாட்டுடன் எம்மை இருக்கும்படி கடவுளின் செய்தியில் இசையா குறிப்பிடுகின்றார். அவர் குறிப்பிடுவதாவது, "நீங்கள் நம்பிக்கையுடன் நிமிர்ந்து நிற்கவில்லையென்றால் நீங்கள் எப்பொழுதும் நிமிர்ந்து நிற்கமாட்டீர்கள்" (ஏசா 7:9). உறுதியுடன் நிற்றல் என்பது பல பிரச்சினைகளுக்கு மத்தியில் நம்பிக்கையை இழக்காமல் இருப்பதாகும். இறுதியில் நீதி வெல்லும், நாட்டை விட்டு வெளியேறியவர்கள் மீண்டும் வருவார்கள் (ஏசா 10:20). இசையாவின் முறையியலானது ஒடுக்கு முறையை மேட்கொள்வோர் விமர்சிக்கப்படுவதும் நம்பிக்கையான எதிர்காலத்திற்கான தொலைநோக்கையும் கொண்டிருந்தது. இது நீட்சி பெற்ற சமூகத்திற்கான உணர்தல் ஆகும்.

திருநூல் சார்ந்த பொதுமன்றக் குற்றச்சாட்டு, முன்னறிவிப்பு ஆகியன அடக்குமுறைக்கு எதிராகப் போராடுவது தொடர்பில் சக்திவாய்ந்த முறையில் ஒன்றைத் தெரிவிக்கின்றன. மேலும் சமூகத்தில் சமாதானத்தை நிலைநாட்டுவது தொடர்பிலும் இவை அறிவிக்கின்றன. இவை அடக்குமுறையை மறுதலிப்பதோடு, வெறுப்பு மற்றும் வன்முறை ஆகியவற்றை வளர்த்துக்கொள்வதையும் நிராகரிக்கின்றன. சகல மனிதர்களும் இறைவனுக்கு முன்னால் ஒரேவிதமாகவே வரவேற்கப்படுகின்றார்கள் எனவும் நல்லிணக்க முயற்சிகளின் இரு வடிவ தன்மை பற்றியும் இவை கருத்துக்களைத் தெரிவிக்கின்றன. கடந்த காலத்தில் இடம்பெற்ற அநீதிகள் தொடர்பில் அவதானத்தைச் செலுத்துகின்ற அதேவேளை, எதிர்கால நல்லிணக்கச் சமூகம் பற்றிய தொலைநோக்கான கருத்துக்களையும் புலப்படுத்துகின்றன. கடந்த காலத்தில் என்ன நடைபெற்றது மற்றும் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு எவை அவசியம் என்பதையும் இவை புலப்படுத்துகின்றன.

பொதுமன்றக் குற்றச்சாட்டின் முதற்படிமுறையாக சமூகத்திற்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகள் ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும். மாடுகளையும் செம்மறி ஆடுகளையும் பலி கொடுப்பதை இறைவன் கண்டிக்கிறார் என முதலாவது இசையாவின் மூலம் நாம் அறிந்துகொள்ள முடியும். (ஏசா 1:12) மேலும், மக்களுடைய கரங்கள் இரத்தக்கறை நிரம்பியதாகக் காணப்பட்டது. அவர்கள் தீயவற்றைச் செய்வதிலிருந்தும் இன்னும் விடுபடவில்லை (ஏசா 1:16). ஏற்கனவே குறிப்பிடப்பட்டதன் பிரகாரம், தீயவற்றைக் கைவிடும்படி கடவுள் மக்களிடம் கோருவதுடன், நல்லவற்றைக் கற்றுக்கொள்ளுங்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார். மற்றவர்களை அவர்களுக்குரிய முழுமையான மதிப்புடனும் மரியாதையுடனும் நடத்தத் தவறுபவர்கள் அவர்களை ஒடுக்கு முறைக்கு உட்படுத்திய குற்றச்சாட்டிற்கு உரியவர்கள்.

அத்தகைய துஷ்பிரயோக முறைகளை நிராகரித்ததன் பின்னணியில் ஒடுக்கு முறை மற்றும் அநீதிகளற்ற உலகத்திற்கான தொலைநோக்கொன்றை அறிவிப்பதற்காக உடனே இசையா முன்வருகிறார். இதற்கென சில கற்பிதங்கல்ளை இசையா பாவிக்கின்றார். அதன் பிரகாரம், நீதி அதிகளவிலான நன்மைகளைத் தரும் என உணர்த்தப்படுகிறது. இறைவனின் நீதியில் மேன்மைகள் நிரம்பிக் காணப்படுவதுடன், புனிதமான கடவுள் சரியான விடயங்கள் புனிதமானவை என உணர்த்தியிருக்கின்றார். "செம்மறி ஆடு புற்தரையில் புல் மேய்கிறது ஆனால் ஆட்டுக் கடாக்களுக்கும் ஆட்டுக்குட்டிகளுக்கும் அழிந்த சிதைவுகளிலிருந்து உணவூட்டப்படுகின்றன" (ஏசா 5:16-17). அநீதிக்கெதிராக எழுந்துநிற்பதும் அநீதியை எடுத்துரைப்பதும் இறைவனின் பாதையில் எம்மைச் சாந்தப்படுத்தப்படுகின்றதென இசையா குறிப்பிடுகின்றார். இது சகல உயிரினங்களுக்கும் ஒற்றுமையையும் நீதியையும் நாடி நிற்கிறது. ஒடுக்குதலுக்கான அடிப்படைக் காரணியை பொதுமன்றக் குற்றச்சாட்டாகத் தெரிவிக்கின்ற அதேவேளை, இறைவனின் ஆசீர்வாதத்தினால் எதிர்கால அமைதி முன்னறிவிக்கப்படுகிறது.

நிலைமாற்றுக்கால நீதி தொடர்பில் பொதுமன்றக் குற்றச்சாட்டு மற்றும் முன்னறிவிப்பு தொடர்பான கருத்துரைகள் செழிப்பான ஆற்றலுடையவையாகக் காணப்படுகின்றன. நல்லிணக்கத்தின் முதற்படிமுறையாக யுத்தம் மற்றும் முரண்பாடு தொடர்பான மரபியல்கள் ஆகியவற்றைக் கண்டித்து விட்டு உண்மையை அதன் பின்விளைவுகளுடன் எடுத்துரைப்பதாகும். இது பாதிக்கப்பட்டவர்களுக்கு தகவல் ரீதியான உரிமைகளை வழங்குவதுடன், நீதியைக் கட்டியெழுப்புவதற்கான தேசத்தின் அர்ப்பணிப்பினையும் மீள் உறுதிசெய்கிறது. அதனைத் தொடர்ந்து முன்னறிவிப்பினைப் பின்பற்றலாம். இசையா தனது மக்கள் மத்தியில் இதனை எவ்வாறு மேற்கொண்டாரோ அதனடிப்படையில் இதனை மேற்கொள்ள முடியும். மேலும், பாதிக்கப்பட்டவர்கள், அகதிகள், புலம்பெயர்ந்தவர்கள், உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் ஆகிய அனைவரும் மீண்டும் வரவழைக்கப்படல் வேண்டும். மக்கள் மீண்டும் வருவார்கள் என்பதை இசையா எதிர்பார்த்தார். அவர், "சிறிதளவு மக்களே வருவார்கள், ஜேகப்பின் சிறிதளவு மக்களே வருவார்கள், எல்லா சக்தியும் இறைவனுக்கேயுண்டு" எனக் குறிப்பிட்டார், மேலும், அடிக்கட்டையிலிருந்து அம்பு போல் அவர்கள் புறப்பட்டு வருவார்கள் - இறைவனின் ஆவி அவர்கள் மீது இருப்பதாக, இறைவனின் அறிவும் புரிதல்களும் அவர்கள் மீது இருப்பதாக (ஏசா 11:1-2), அவ்வாறு வெளியேறியவர்கள் மீண்டும் வருகை தந்த பொழுது ஆழிவுக்கான காலம் முடிவுற்றது எனவும், மீண்டும் அநீதிகள் இடம்பெறாமலிருப்பதை தலைவர்கள் உறுதிப்படுத்த வேண்டும் எனவும், குற்றமிழைத்தவர்களினால் இழப்பீடுகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டவர்களுடைய தன்மானத்தை நிலைநிறுத்துவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படல் வேண்டும் எனவும் குறப்பிடப்பட்டுள்ளது.

அத்தியாயம் 10 இல், இசையா, எகிப்து மற்றும் ஆஸ்ரியா விரோதிகளை ஒன்றிணைப்பதற்கான வழிமுறையொன்றை நாம் கண்டுள்ளோம். நீதி இராஜ்யத்தில் இசையா எதிர்பார்ப்பது என்னவென்பது

பற்றி இவ் அத்தியாயத்தின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த பிரதான வழிமுறையானது சாந்திக்கும் சமாதானத்திற்குமான பாதையாகத் திகழ்வதுடன், இஸ்ரல், ஆஸ்ரியா மற்றும் எகிப்து ஆகிய நாடுகளை உலகில் ஆசீர்வதிக்கப்பட்ட பிரதேசமாக மாற்றுகிறது. கடவுள் அவர்களிடம் இவ்வாறு கூறுகின்றார், "எகிப்து மாற்று ஆஸ்திரியவில் இருக்கும் என் மக்கள் என் கரங்களால் ஆசீர்வதிக்கப்படுவதுடன் இஸ்ரேல் எனது பாரம்பரியத்தை பறைசாற்றுவதாகவும் அமையட்டும்" (19:25). இதன்பொழுது, நீதியான ஆட்சியானது சமாதானத்தை ஏற்படுத்துகின்றது, நாடுகள் ஒன்றுடனொன்று இறைவனின் பாதையில் பிணைக்கப்படுகின்றன. இசையாவின் கதையிலிருந்து நாம் பெற்றுக்கொள்கின்ற அடிப்படைத் தகவல் என்னவெனில், நல்லிணக்கம் என்பது நீதியாகும்.

### 4.4 கேட்பதற்கு துணிச்சல் மிக்க நல்லிணக்கம்

நிலைமாற்றுக்கால நீதிக்கு உண்மையைக் கண்டறிதல், உண்மையைக் குறிப்பிடுதல் ஆகியன முக்கியமானவைகள். ஆனால், அத்தகைய செயற்பாடுகளுக்கு பாதிக்கப்பட்டவர் மற்றும் குற்றமிழைத்தவர் ஆகிய இரு தரப்பினரதும் பங்களிப்பு அவசியமாகும். உண்மையைக் குறிப்பிடுவதற்கான துணிச்சல் வேண்டும். அதேபோல் உண்மையைச் செவிமடுப்பதற்கான துணிச்சலும் வேண்டும்.

இரத்தம் வடிந்த நிலையில் வருகை தந்த பெண்ணுடைய கதை பற்றி மாக்ஸின் கிறிஸ்தவ நற்செய்தி குறிப்பிடுகின்றது (5:24-32). இந்தப் பெண்ணிடம் உண்மையைப் புலப்படுத்துவதற்கான துணிச்சலும் அவசியமும் காணப்பட்டன. பெயர் குறிப்பிடப்படாத இந்தப் பெண் சமூகத்திலிருந்து ஒதுக்கப்பட்டவள். முரண்பாடுகளினால் பாதிக்கப்பட்டவர்கள் போல இவளிடமும் உண்மையைக் கதைப்பதற்கான அச்சம் காணப்பட்டது, அதாவது அவ்வாறு கூறினால் சமூகத்திலிருந்து ஓரங்கட்டப்பட்டு விடுவோம், ஆவதூறுக்கு உள்ளாக்கப்படுவோம் என்ற அச்சம். இப் பெண்ணிற்காக யாரும் பரிந்துரைகளை மேற்கொள்ளவில்லை. நிர்க்கதியான நிலையில் இவள் காணப்பட்டாள். இவள் யாரும் அறியாத வகையில், இயேசு நாதருடைய ஆடையைத் தொட்டதன் மூலம் வேண்டுகோள் விடுத்தாள். இவ்வாறு செய்ததன் மூலம் சமய சட்டங்களை மீறியவளாக இவள் கருதப்பட்டாள். ஏனெனில், குணப்படுத்தல்களை நாடுவதற்கு அக்காலத்தில் அனுமதி அவசியம். இவ்வாறு துணிகரமான நடவடிக்கையை மேற்கொண்டதன் காரணமாக அவளது செயல்கள் குணப்படுத்தல் மற்றும் மீட்பு ஆகியவற்றுக்கு உதாரணமாகத் திகழ்கிறது. கடும் நிர்க்கதியான நிலை துணிகரமிக்க நம்பிக்கைக்கும் மாற்றங்களுக்கும் இட்டுச்செல்லலாம். நற்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ள இந்தப் பெண்ணானவள் தனது அமைதிகாத்த நிலையிலிருந்து விடுபட்டுவிட வேண்டும் என்பதையும் தனிமையிலிருந்து தான் விடுபட்டு விடுவேண்டுமேன்பதையும் உணர்ந்திருந்தாள். அப்போதே தன்னால் குணப்படுத்தலைப் பெற்றுக்கொள்ள முடியுமென்பதையும் அறிந்திருந்தாள். குணப்படுத்தலைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் அந்தப் பெண்ணிடம் காணப்பட்ட துணிச்சல் இயேசு நாதருடைய கவனத்தை ஈர்த்தது. எனவே, "என்னைத் தொட்டது யார்" (ஆம. 5:30-31) என வினவினார். அவள் நீண்டகாலமாகப் பாதிக்கப்பட்டிருந்தாள். அவளுக்கு நீதி மறுக்கப்பட்டிருந்தது. ஆனால், அவள் நீதியைப் பெற்றுக்கொள்வதற்கு இது இறைவனின் இடையீடாகும். அவ்வாறு குணப்படுத்தப்பட்ட பெண் மீண்டும் தனது பாரம்பரிய சமூகத்திற்குச் செல்ல அனுமதிக்கப்பட்டாள். கடவுள் தீர்க்கமாக யாருடனும் பக்கச்சார்புடன் நடந்துகொள்வதில்லை என்பதை இது எடுத்துரைத்தது. நீதி இங்கு முதன்மை பெறுகின்றது. இந்தப் பெண் நீதிக்கு அருகதையுடையவள் என்பதை கிறிஸ்த்து உணர்ந்தார். எனவே, அவள் குணப்படுத்தப்பட்டாள்.

வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்களுடைய பிரச்சினைகளை ஆலயங்கள் செவிமடுத்து காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். அவர்களை குணப்படுத்துவதற்கான சேவைகளை நல்கவேண்டும். சமூகத்தில் வன்முறை காணப்பட்டது என்பதை அறிந்துகொள்ள வேண்டும். ஒருவரை நாம் செவிமடுக்கின்ற பொழுது மற்றவர்களும் முன்வந்து தமக்கு இழைக்கப்பட்ட வன்முறை மற்றும் அநீதிகள் தொடர்பில் எடுத்துரைப்பார்கள். இயேசு நாதரைப் போல் ஆலயங்களும் சவால்களை எதிர்கொள்ள வேண்டிய நிலையிலுள்ளன. ஓரங்கட்டப்பட்ட மக்கள் தொடர்பில் கரிசனையைச் செலுத்தி அவர்களைக் குணப்படுத்துவதற்கான துணிச்சல் நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வரவேண்டும். இது நீதியை ஏற்படுத்துகின்ற செயலாகும். இறைவனின் நீதியில் ஒரு சிறந்த சான்றாக இது காணப்படுகிறது.

### 4.5 நினைவுகளைக் குணப்படுத்துகின்ற நல்லிணக்கம்

நல்லிணக்கம் நினைவுகளைக் குணப்படுத்த வேண்டும். குணப்படுத்தாத நினைவுகள் புகைக்கின்ற தீயைப் போன்றது, நல்லிணக்கம் தொடர்பான முன்னெடுப்புக்களை இது அழிக்கக் கூடியதாகவும் அச்சுறுத்தக் கூடியதாகவும் இருக்கலாம். இனவாதிகளினால், மக்கள் கண்டத்தகால நினைவுகளில் சிறைப்பிடித்துக் கொள்ளப்படுகின்றனர். இவை இனவாதிகளின் இனவாத பேச்சுக்கள் உண்மையாகவிருக்கலாம், மிகைப்படுத்தப்பட்டவையாகவிருக்கலாம் அல்லது கற்பனையாகவிருக்கலாம். எனவே, நல்லிணக்கம் தொடர்பான கிறிஸ்தவ மதச் செய்தியில் வெறுப்பானது மனிதனுக்கு எதிரானதாவும் மக்கள் நல்லிணக்கமடைவதுக்கு சவாலாகவும் குறிப்பிடப்படுகின்றது. பாதிக்கப்பட்டவர்கள் தமது நினைவுகளை மீட்டுப்பார்த்தலானது ஒரு வலியை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வாகும். நல்லிணக்கம் குணப்படுத்தலை ஏற்படுத்துகிறது.

கிறிஸ்தவ மரபில் இறைவனின் இராச்சியத்தில் குணப்படுத்தலானது தொடர்ச்சியாக ஒரு குறியீடாகப் பிரயோகிக்கப்பட்டுள்ளது. மனித சமூகத்தைக் குணப்படுத்துவது, துண்டு துண்டாக உடைந்த நிலையில் காணப்படுகின்ற சமூகத்தைக் குணப்படுத்துவது ஆகியன கிறிஸ்த்துவின் தொலைநோக்காகும். கிறிஸ்த்து உடல் ரீதியான மற்றும் உள ரீதியான நோய்களைக் குணப்படுத்தினார். குணப்படுத்தல் செயற்பாடானது நேசியானிய பணிநோக்கு எனக் குறிப்பிட்டார். கிறிஸ்த்து அவர்கள் ஆண்டவனின் இராச்சியம் பற்றிய நற்செய்தியை போதிப்பதற்காக தனது சீடர்களை அனுப்பிவைத்த பொழுது, அவர்களுக்கு குணப்படுத்துவதற்கான அதிகாரத்தையும் வழங்கியிருந்தார். இதன் மூலம், அப்போது நிலவிய சமூக, மத முறைமைகளை கிறிஸ்த்து திசை திருப்பினார். அதேபோல் அப்போதைய சட்டத்தையும் அவர் மாற்றியமைத்தார். சபாத்தினை குணப்படுத்துவதால் மூலம் அழுக்கானவர்களைத் தனது கரங்களினால் தொட்டார். மத ரீதியாக காயப்பட்டவர்களின் பாவங்களை மன்னித்தருளினார். அதன் காரணமாக தனது குணப்படுத்தல் பயணத்தை விரிவாக்கினார். வரி சேகரிப்பாளர்களுடன் அமர்ந்து உணவு உட்கொண்டதன் காரணமாக சமூகப் பொருளாதார எல்லைகளுக்கு அப்பால் அவர் செயற்பட்டார். நோயாளர்களையும் சமூகத்தினால் தீண்டத் தகாதவர்கள் எனக் கருதப்பட்டவர்களையும் அவர் தொட்டார். வேறுவிதமாகக் கூறினால், கிறிஸ்த்து அவர்கள் தனது முழுப் பயணத்தின் பொழுதும் நேர்மையான மானுட சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதற்கு முயன்றார்.

வலி ஏற்படுத்துகின்ற அல்லது துன்பம் தருகின்ற நினைவுகள் தொடர்பில் செயற்படும் பொழுது இரண்டு வகையான முடிவுகள் எமக்கு உதவாது : (அ) வன்முறையை இழைத்தவர்கள் மத்தியிலிருந்து தாம் அட்டூளியங்களையும் வன்முறைகளையும் இழைத்துள்ளோம் என்பது தொடர்பிலான மிதமிஞ்சிய உணர்வு. அல்லது மேலாதிக்கத்தை வெளிப்படுத்துகின்ற அத்தகைய மனப்பாங்குகளுடன் கூடிய ஊகங்கள். (ஆ) பாதிக்கப்பட்ட மக்களது மனங்களிலிருந்து உதயமாகின்ற காயங்கள் தொடர்பான ஊகங்கள். அதாவது, முரண்பாட்டிற்கு பின்னால் பாதிக்கப்பட்டு தொடர்ந்தும் துன்பகரமான நிலையில் வாழ்கின்ற மக்கள். இத்தகைய உணர்வுகள் பல சந்தர்ப்பங்களில் உண்மையான யதார்த்தத்துடன் ஒத்துப் போகாமலிருக்கலாம். அவற்றை மாற்றி அதற்கு மீள் பொருள் கோடல்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். ஒட்டுமொத்த நினைவுகளையும் குணப்படுத்தக்கூடியவர்களாக நாம் இருத்தல் வேண்டும்.

### 4.6 நல்லிணக்கம்: தண்டனை மற்றும் மறுசீரமைப்பு நீதி

தென்னாபிரிக்காவின் உண்மை மற்றும் நல்லிணக்கச் செயற்பாட்டின் பொழுது யார் யாரை மன்னிப்பது, எந்த நிலைமையின் கீழ் மன்னிப்பது போன்ற கேள்விகள் எழுந்தன. சில குற்றங்களை எப்பொழுதும் மன்னிக்க முடியாது என்ற கோரிக்கையின் பிரகாரம் நல்லிணக்கத்தில் மன்னித்தல் செயற்பாடானது விமர்சனத்திற்குள்ளாக்கப்பட்டது. குறிப்பாக குற்றமிழைத்தவர்கள் தனது குற்றங்களுக்காக தான் தண்டிக்கப்படுவதை விரும்பாத பொழுது பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடுகள் வழங்க மறுக்கின்ற பொழுது இத்தகைய பிரச்சினைகள் எழுந்தன. இன்னும் சிலர் கிறிஸ்தவ மதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மன்னிப்பளித்தல் முறைகளை தம்மால் ஏற்றுக்கொள்ள முடியாதெனவும் தெரிவித்தனர். இத்தகைய சூழமைவில் தான் பிசப் டெஸ்மன் துடு அவர்கள் தண்டனை சார் சட்டம் மற்றும் மறுசீரமைப்புச் சட்டம் ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாட்டினைப் பிரித்து விளக்கமளித்தார்.

தண்டனைச் சட்டம் தொடர்பான இறையியலானது குறிப்பிடுவதாவது, சரியானவர்களுக்கு கடவுள் வெகுமதி வழங்குகின்றார். தீயவர்களை அவர் தண்டிக்கின்றார். பொருள் ரீதியான சுபீட்சம் மற்றும் சிறந்த சுகாதாரம் ஆகியன ஆண்டவனால் ஆசீர்வதிக்கப்பட்ட சரியான விடயங்களுக்கான குறிகாட்டியாகக் கருதப்படுகின்றது. வறுமை, நோய் ஆகியன பாவங்களின் சின்னமாகவும் இறைவனின் தண்டனையாகவும் கருதப்படுகின்றன. “ஜொப்ஸின் பிரகாரம் சரியானவர்களுக்கு சுபீட்சமும் சிறந்த உடல் நலமும் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். அதற்குப் பதிலாக அவர் துன்பப்பட்டார். அவருடைய மந்தைகளை இழந்தார். வேலையாட்கள், பிள்ளை, மகன்கள், மகள்கள் யாவற்றையும் இழந்தார். அவருடைய உடம்பு புண்கள் நிரம்பியதாகக் காணப்பட்டது. அவருடைய காலிலிருந்து தலை வரை புண்கள் நிரம்பியதாகக் காணப்பட்டது” (யோ 2:7b). ஜொப்ஸின் துன்பப்படல் மற்றும் சுபீட்சம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில் தண்டனைச் சட்டம் தொடர்பான இறையியல் பிழையானது என்பதை உணர்ந்துகொள்ள முடியும். அதாவது, நீதி பற்றிய மனித புரிதல்களின் அடிப்படையிலேயே இது எடுத்துரைக்கப்பட்டுள்ளது. நாம் சரியான செயல்களை மேற்கொண்டோம் என்பதற்காக எல்லாச் சந்தர்ப்பங்களிலும் கடவுள் எமக்கு வெகுமதிகளை வழங்குவதில்லை. அதேபோல் நாம் மேற்கொண்ட பிழையான நடவடிக்கைகளுக்கான எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அவர் எமக்குத் தண்டனை வழங்குவதுமில்லை. தண்டனையானது முடிவில்லாத வன்முறைக்கு இட்டுச்செல்லலாம். சமூகத்தை ஒழுங்கான நிலைக்குக் கொண்டு வருவது எமக்கு அவசியமாகும். பரஸ்பரம் மற்றுமு மன்னிக்கும் செயலானது உள், வெளிநிலைக் காயங்களைக் குணப்படுத்துகிறது. மற்றும் புதிய உறவுகளுக்கான ஆரம்பமாகவும் இது திகழ்கிறது.

நல்லிணக்கமானது செய்த குற்றத்திற்கு வருத்தப்படல், மன்னித்தருளல் ஆகியவற்றை உள்ளடக்கியதொரு செயன்முறையாகும். இது மறுசீரமைக்கப்படக் கூடியதாகவிருத்தல் வேண்டும். மறுசீரமைத்தலானது சில பண்புகளைக் கொண்டுள்ளது. இங்கு பாதிக்கப்பட்டவர்கள் மையப் பொருளாகக் காணப்படுகின்றனர். அவர்களுக்கு இழைக்கப்பட்ட காயங்களைக் குணப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்ற அதேவேளை, தனிப்பட்ட பழிவாங்கல் நோக்கங்களிலிருந்து அவர்களைத் தடுத்து நிறுத்தவும் வேண்டும். குற்றமிழைத்தவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக, சட்ட

நடவடிக்கைகளின் பொழுது பாதிக்கப்பட்டவர்களுக்கு வெளிப்படைத் தன்மை அவசியம். அவர்களது குரல்கள் செவிமடுக்கப்படல் அவசியமாகும். குற்றங்களினால் ஏற்பட்ட காயங்களைக் குணப்படுத்துவதற்கு உதவி அவசியம். பொருத்தமான சந்தர்ப்பங்களில நட்டஈடு வழங்கப்படல் வேண்டும். இரண்டாவதாக, இது சமூக மையச் செயலாகும், அரச மையச் செயல் அல்ல. பாதிக்கப்பட்ட சகல தரப்பினர், குற்றமிழைத்தவர், குடும்பங்கள், சமூகம், பொலிஸ், நீதித்துறைப் பிரதிநிதித்துவங்கள் ஆகிய சகலவற்றையும் உள்ளடக்கிய பல்வேறு விதமான சமூகப் பரிமாணங்களைத் தன்னகத்தே உள்ளடக்கியதாக மறுசீரமைப்பு நீதி காணப்படுகிறது. மூன்றாவதாக குற்றமிழைத்தவர் தான் இழைத்த குற்றத்திற்குப் பொறுப்புக் கூறக்கூடியவராக இருத்தல் வேண்டும். மரபு சார்ந்த நீதித்துறைச் செயற்பாடுகளின் பொழுது குற்றமிழைத்தவர் நீதிபதி, நடுவர்கள், சாட்சிகள், தண்டனை போன்ற பல விடயங்களை எதிர்கொள்ளக் கூடியவராகவிருக்கின்றார். ஆனால் சமூக மைய நீதித்துறை அமைப்பில் குற்றமிழைத்தவர் பாதிக்கப்பட்டவருடைய வலியையும் அவருடைய குடும்ப உறுப்பினர்கள் எதிர்கொண்ட வலியையும் நேரடியாக உணர்கின்றார். இதன் மூலமாக குற்றமிழைத்தவர் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பினை உணர்ந்துகொள்வதுடன், அவற்றைச் சீர்செய்வதற்கான நடவடிக்கைகளில் காத்திரமாக ஈடுபடுவதற்கான வாய்ப்புகளும் உள்ளன. நான்காவதாக, சீர்செய்தல் நீதியானது பைபிள் சார்ந்ததாகும். திருமறை சார்ந்த நீதி மரபுகள் நீதி நிலைநாட்டப்படுவதையும் உறவுகள் கட்டியெழுப்பப்படுவதையும் வலியுறுத்துகின்றன. வெறும் தண்டனைக்குப் பதிலாக இது ஷாலோம் நீதியாகக் காணப்படுகிறது.

தண்டனை சார் நீதி நடவடிக்கை முறைகளானது மறுசீரமைப்பு நீதிச் செயற்பாடுகளுடன் இணைந்து செல்லல் வேண்டும். நல்லிணக்கம் இல்லாத வெறும் தண்டனை நீதியானது கொடுங்கோன்மைக்கு நிகரானதாகும். உண்மையான நீதி, பிரச்சினைகளை தீர்ப்பது தொடர்பில் ஆராய்கின்றது. எனவே, கிறிஸ்தவர்களானவர்கள் இவை தொடர்பில் செயற்படுகின்ற பொழுது தண்டனை சார் நீதிக்குப் பதிலாக மறுசீரமைப்பு சார்ந்த நீதியை எடுத்துரைக்கக் கூடியவர்களாகவிருத்தல் வேண்டும். மேலும், மனிதாபிமானம், மனித மேன்மைகள் ஆகியவற்றைப் பேணக்கூடியதாகவிருத்தல் வேண்டும். அதாவது, பாதிக்கப்பட்டவர் மற்றும் குற்றமிழைத்தவர் ஆகிய இரு தரப்பினருடனும் மனிதமேன்மைகளைக் கருத்திற்கொண்டு சமாதானமான சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதற்காக தொழிற்படல் வேண்டும். வெறும் தண்டனையினால் மாத்திரம் மிக அரிதாகவே இதனை அடைய முடியும். சில சந்தர்ப்பங்களில் தண்டனை பங்களிப்புகளை நல்கினாலும்கூட, தண்டனை மூலம் முழுமையாக எதிர்பார்த்ததை அடைய முடியாது. கடவுள் எப்பொழுதும் எமது பாவங்களை மன்னிக்கின்றார். எமது பாவங்களை அன்பினாலும் பாவமன்னிப்பினாலும் மன்னிக்கின்றார். எனவே, மக்கள் மன்னிப்பதற்கு முன்வரல் வேண்டும்.

துன்பப்பட்ட மக்களது மனங்களில் காணப்படுகின்ற காயங்களைக் குணப்படுத்தல் வேண்டும். அவர்களை ஆரோக்கியம் மிக்கவர்களாக மாற்றுகின்ற அதேவேளை, எதிர்காலம் பற்றிய நம்பிக்கையுடன் செயற்படக்கூடியவர்களாக மாற்றுகின்ற பொறுப்பும் இன்றைய கட்டத்தில் ஆலயங்களுக்கு உண்டு. இவர்கள் வெறும் துன்பங்களை பதிந்து வைத்திருப்பவர்களாக இருக்காமல் துன்பங்களைக் குணப்படுத்துகின்ற மனிதர்களாக இருத்தல் வேண்டும். அந்தப் பொறுப்பு இவர்களுக்கு உண்டு.

### 4.7 நல்லிணக்கம் ஒரு தீர்க்கதரிசனம் மிக்க கலந்துரையாடல்

சமாதானம், நீதி, நல்லிணக்கம் ஆகியவற்றை அடைவதற்காக ஏனைய மதங்களுடனும் மதச் சார்பற்ற சித்தாந்தங்களுடனும் கூட்டிணைந்து கிறிஸ்தவ மக்கள் இயங்குதல் வேண்டும். அதாவது, தமது மத ரீதியாகவும் ஏனைய மதங்களுக்கிடையிலும் கலந்துரையாடல்களை மேற்கொள்வது தொடர்பில் ஆலயங்கள் தமது கவனத்தைச் செலுத்துதல் வேண்டும். மதங்களுக்கிடையில், கிறிஸ்தவ மதத்தினுள், இனங்களுக்கிடையில் காணப்படும் முரண்பாடுகள் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் ஒற்றுமையைத் தடைசெய்கின்றது.

சமாரியன் பெண்ணுடன் கிறிஸ்த்து மேற்கொண்ட கலந்துரையாடலானது சவால் மிக்க சில விடயங்களைப் புலப்படுத்துகின்றது. இது மதங்களுக்கிடையிலான கலந்துரையாடல் மற்றும் மதத்தினுள் மேற்கொள்ளப்படும் கலந்துரையாடல் ஆகியவற்றை வினைத்திறன் மிக்க முறையில் சாந்தப்படுத்துகிறது. கிறிஸ்த்து அவர்கள் இங்கு மேற்கொண்ட முன்னெடுப்பு எமக்கு ஓர் அகத்தூண்டலாகக் காணப்படுகிறது. அந்தப் பெண்மணியுடன் கலந்துரையாடிய கிறிஸ்த்து அவர்கள் தண்ணீரை அருந்தும்படி அவளிடம் கேட்டார்கள். இங்கு உறவுகளும் ஒற்றுமைகளும் மேம்படுத்தப்பட்டன. சமாரியன் பெண்மணியுடன் கிறிஸ்துவின் கலந்துரையாடலானது யூதர்கள் மரபு ரீதியாக சமாரியன்களை பாரபட்சத்திற்கு உட்படுத்தியதை விஞ்சிச் செல்கிறது. இவர்கள் ஒருவருடன் ஒருவர் பங்காளர்களாக இணைந்து கலந்துரையாடலில் ஈடுபட்டதுடன் ஒற்றுமையை நோக்கிய பயணத்தை மேற்கொண்டனர். கலந்துரையாடலில் ஈடுபடுபவருடைய மதிப்பு, கருத்து, நம்பிக்கை, அனுபவம் ஆகியவற்றை கிறிஸ்த்து மதித்தார். அதேவேளை, யூத மதம் மற்றும் சமாரியர்களுடைய மதம் ஆகியவற்றை விமர்சிக்கக்கூடிய துணிச்சல் கிறிஸ்த்துவிடம் காணப்படடது. கலந்துரையாடல் எனப்படுவது பொது நலன், பொது இலக்கு மற்றும் மனிதாபிமானம் ஆகியவற்றை நோக்கியும் ஒன்றாக இயங்குவதாகும்.

நபர்களை மையமாகக் கொண்ட இவ்விதமான அணுகுமுறைகள் தாம் மேம்பட்டவர்கள் என்ற சிந்தனை மனப்பாங்கு மேலாதிக்கப் போக்குகள் ஆகியவற்றைக் கலந்துரையாடலின் பொழுது இல்லாதொழிக்கின்றது. இந்த அணுகுமுறை மற்றவர்களது தனிப்பட்ட ஆளுமைகளை மதிக்கின்றது. வேற்றுமைகளுக்கு மத்தியிலும் அவர்களை சமத்துவம் மிக்கவர்களாகக் கருதுகின்றது. சமாதானம்

மற்றும் நல்லிணக்கம் ஆகியன ஒரு தனி நபரின் அடிப்படை உரிமைகளின் அடிப்படையாகத் திகழ்தல் வேண்டும்.

குரோதம் சார்ந்த அணுகுமுறைகள் மனித சமூகத்தின் பண்மைத்துவ அம்சங்களை அழித்துவிடும். கலாசார, சமய ரீதியான குரோதங்கள் ஆகியவற்றுக்கு அப்பால் சுதந்திரமாகப் பயணிக்க வேண்டிய தேவை எமக்கு உண்டு.

இன்றைய காலகட்டத்தில் மதங்களுக்கு இடையிலான கலந்துரையாடலானது வரட்டுத்தனம் மற்றும் இறையியல் சார்ந்த கோட்பாடுகள் ஆகியவற்றின் அடிப்படையில் ஆரம்பிக்கக்கூடாது என அனுபவம் கற்றுத்தருகிறது. மதங்களுக்கு இடையிலான கலந்துரையாடல்களின் பொழுது, மதங்கள் விமா்சிக்கப்படல் கூடாது. கிறிஸ்த்து அவா்கள் யூத மதம் மற்றும் சமாரியன் மதம் ஆகியவற்றின் நடைமுறை சார்ந்த சில விடயங்கள், பிரிவினை அம்சங்கள், சமூக நடைமுறைகள் ஆகியவற்றை மாத்திரமே விமா்சித்தார். கிறிஸ்த்து அவா்களின் விமா்சனம் விடுதலையை நோக்கிய புதிய வாழ்க்கைக்கு இட்டுச் சென்றது. இங்கு உண்மை மற்றும் ஒற்றுமை ஆகியவற்றின் அடிப்படையில் தந்தை வணங்கப்பட்டார். இது அனைத்துப் பிள்ளைகளையும் இறைவனுடைய பிள்ளைகளாக ஒற்றுமைப்படுத்தியது. ஒவ்வொரு சமயத்திலும் அதற்கேயுரிய விடுதலை ரீதியான ஆற்றல்களும் அதேவேளை ஒடுக்குமுறை அம்சங்களும் காணப்படுகின்றன.

சமயங்களை விமா்சனம் செய்கின்ற பொழுது ஒவ்வொரு சமயமும் விடுதலை ரீதியான அம்சங்களையும் மானுட மேம்பாடுகள் நோக்கிய அம்சங்களையும் காத்திரமாக கண்டுணா்வதற்கு வாய்ப்புகள் கிடைக்கின்றன. அத்தோடு, அதனுடைய ஒடுக்குமுறை அம்சங்கள் தொடா்பில் ஆக்கபூா்வமாகவும் செயற்பட முடியும். எனவே, சமூக கலந்துரையாடலுக்கும் இந்த கலந்துரையாடலானது புதிய வாழ்க்கை முறைக்கு இட்டுச்செல்லக் கூடியதாகவும் ஆலயங்கள் அழைப்பு விடுக்க வேண்டும். இன்றைய காலகட்டத்தில் கலந்துரையாடல் முக்கியமானதாகும். நிலைமாற்றுக்கால நீதியில் ஒழுக்கம் சார்ந்த விடயங்களில் இது தவிா்க்கப்பட முடியாத அம்சமாகும்.

## 4.8 நல்லிணக்கம் ஒரு மத்தியஸ்தமாக

நிலைத்து நிற்கக் கூடியதொரு நல்லிணக்கம் தொடா்பான முயற்சிகள் யாவும் பாதிக்கப்பட்டவா்களுடைய தேவையை எடுத்துரைக்கக் கூடியதாகவிருத்தல் வேண்டும். வெற்றி பெற்றவா்களினால் திணிக்கப்படும் தீா்மானங்கள் பாதிக்கப்பட்டவா்களுடைய தேவையை நிவா்த்தி செய்ய முடியாது. இது உறுதியற்ற சமாதானத்திற்கு இட்டுச் செல்லும். மத்தியஸ்த்தம், நீதியை உருவாக்குதல் ஆகியன தொடா்பில் முக்கியமான வகிபாகம் ஆலயங்களுக்கு உண்டு. கிறிஸ்தவ மதத்தின் மையமாக ஆலயங்கள் திகழ்கின்றன.

தனி நபருடைய மொத்த நலன்கள் மற்றும் குடும்பத்திற்கும் தேசத்திற்கும் இடையிலான நலன்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக ஷாலோம் காணப்படுகிறது. மனிதா்களதும் சகல உயிரினங்களினதும் நலன்களை உள்ளடக்கியதாக ஷாலோம் காணப்படுகிறது. இது நீதியையும் சரியான நடத்தையையும் பின்பற்றுவதற்கான வழிமுறையாகும். கிடியோனின் பீடம் குறிப்பிடுவதாவது, 'யாப்வே ஷாலோம்' அதாவது, கடவுளே சமாதானம் (நியா 6:24). அவரே சமாதானத்தின் மூலமாகத் திகழ்கின்றார். மேலும், கடவுளுக்கு நன்மை செய்வது கிறிஸ்தவா்களுக்கான சவாலாகும். நீதியையும் சரியான நடத்தையையும் பின்பற்றுவதன் மூலம் இவா்கள் சமாதானத்தைத் தோற்றுவிப்பவா்களாகவும் மத்தியஸ்த்தவா்களாகவும் இருக்க முடியும்.

கிறிஸ்த்தவா்களைப் பொறுத்தவரையில், வன்முறையினால் பாதிக்கப்பட்டவா்களது உண்மையான அனுபவங்களைக் கொண்டு நீதி காணப்படுவதுடன், வன்முறைகளையும் குற்றங்களையும் அமைதியாக சரணடையச் செய்து இல்லாதொழிக்கப் பது அவசியமாகும். ஒருவரது அதிருப்தி, வலி மற்றும் கோபம் ஆகியவற்றை வார்த்தைகளில் வெளிக்கொணரல் வேண்டும். மத்தியஸ்தம் செய்பவா்கள் இத்தகைய துன்பகரமான நிலைமைகளைக் கருத்திற்கொள்ளல் வேண்டும். உதாரணமாக, ஆம்ஸ் துன்பம் என்பதில் கற்பனை ரீதியான இடமொன்று காணப்படுகிறது. இங்கு ஒருவரது வன்முறை சார்ந்த அனுபவங்களை இனங்காண முடியும். எது தெரியாது மற்றும் செவிமடுத்தல் தொடா்பான அனுபவமற்ற தன்மைகள் ஆகியன பற்றி இங்கு எடுத்துரைக்கப்படுகின்றன. பொது வாழ்க்கை மற்றும் தனிப்பட்ட வாழ்க்கை ஆகியவற்றிலிருந்து விலகி, திறந்த மனதுடன் விடயங்களைப் புலப்படுத்தும் படியும், அச்சுறுத்துகின்ற, குணப்படுத்துகின்ற விடயங்களை எடுத்துரைக்கும் படியும் தனது வாசகா்களை இது கோருகின்றது. பாதிக்கப்பட்டவா்கள் தம்மைத்தாமே செவிமடுக்கும் படியும் தமது குரல்களை ஒலிக்கச் செய்யும்படியும் ஆம்ஸ் பாதிக்கப்பட்டவா்களுக்கு அழைப்பு விடுக்கின்றது. அமைதிக்கு எதிரான போராட்டமாக இது காணப்படுகிறது. கவலைப்படுவதிலிருந்து விலகி அமைதியை உடைத்து முன்வருகின்ற பொழுது நீதிக்கான பாதைகள் திறக்கின்றன. புலம்பலை கைவிடுவதானது அச்சத்துடன் கடவுளை இனங்காண்பதாகும். வெறும் புலம்பல் கடவுள் தொடா்பான சவால்களை எதிா்கொள்ளச் செய்கின்றது. கடவுள் மீது நம்பிக்கை வைக்கின்ற பொழுது வன்முறை தொடா்பான விடயங்களை எடுத்துரைக்க முடியும். குற்றமிழைத்தவா்களைப் பொறுப்புக் கூறச்செய்ய முடியும். வன்முறை நிறைவுபெற்று நம்பிக்கை தோன்றுமென நம்ப முடியும். ஒவ்வொரு மனிதனும் வன்முறையைக் கைவிட வேண்டுமென நாம் கோருவதற்கான படிமுறையாக இது காணப்படுகிறது.

புலம்பல் செவிமடுப்போருக்கு சவால்களை விடுக்கின்றது. ஆலயங்கள் பொதுவாக குற்றங்களைப் பெயரிடுவதற்கோ அல்லது துஷ்பிரயோகம் பற்றி எடுத்துரைப்பதற்கோ அல்லது அவை காணப்படுகின்றன என்பதை மறுப்பதற்கோ பொதுவாக தயங்குகின்றன. எனவே, பாதிக்கப்பட்டவர்கள் அமைதியாகவிருக்கின்றார்கள். தனிப்பட்டவர்களையும் குழுக்களையும் மதிக்கக் கூடியதொரு கலாசாரம் எமக்கு அவசியம். கருத்தொருமையுடன் வாழ்கின்ற மாறுபட்ட சமூகங்களுக்கு மத்தியில் ஓர் சமாதான கலாசாரம் அவசியம். சமூக உணர்வுகளும் தனிப்பட்ட உணர்வுகளும் மேலோங்கியிருத்தல் வேண்டும். மனித சமூதாய மேம்பாட்டு நடவடிக்கைகளில் பங்குபற்றுவோர்களாகவும் அவற்றின் பிரதிநிதியாகவும் இருத்தல் வேண்டும். சட்டரீதியான பல்வகைமை மறுக்கப்படுவதே மக்களுக்கும், சமூகங்களுக்கும் இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு அடிப்படையாகும். மதம் மற்றும் கலாசார கொள்கையின் செயற்பாடினதும், ஒருமைப்பாட்டினதும் முக்கிய அம்சமாக ஒற்றுமை பல தருணங்களில் இருப்பதை நாம் அறிந்ததே. நல்லிணக்கத்தின் பால் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்ற ஆலயங்கள் அத்தகைய கருத்தியல்களுக்கு எதிராகச் செயற்படுவதுடன், பல்வகைமை மிகுந்த நல்லிணக்கத்தை அதற்குப் பதிலாக தழுவுதல் வேண்டும். நல்லிணக்கத்திற்குட்பட்ட பல்வகைமையின் பிரதிபலிப்பானது சகல மக்களும் பலமான பல்வகைமைக்கு மத்தியில் கடவுளின் பாதையை ஆரத்தழுவுகிறார்கள் என்பதை உணர முடியும். இந்த நாட்டில் காணப்படுகின்ற கூட்டு வன்முறை தொடர்பான பதிலளிப்புகளில் இத்தகைய விடயங்கள் நிச்சயமாக இல்லாத நிலைமையை காண முடிகின்றது.

அர்த்தமுள்ள எத்தகைய நல்லிணக்கக் கலந்துரையாடல்களுக்கும் மத்தியஸ்த்தம் அவசியம். சட்ட ரீதியான நீதிமன்றச் செயற்பாடுகளுக்கு அப்பால், நிவாரணங்களை வழங்கக் கூடிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தக்கூடிய மறுசீரமைப்பு நீதி முறைகள் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். பல மட்டங்களைத் தழுவக்கூடிய பூரணத்துவம் மிக்கதாக இது திகழ்தல் வேண்டும். மத்தியஸ்த்தம் முக்கியமான செயற்பாடாகவிருக்கின்ற அதேவேளை, ஆலயங்கள் நேர்மையான பண்மைத்துவத்தையும் பிரதிபலித்தல் வேண்டும்.

## 4.9 தொகுப்பு

தனிநபர்கள் மத்தியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதும் மனித இனத்தை கடவுளின் பால் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதும் ஆலயங்களின் முக்கிய பணியாகும். இத்தகைய நல்லிணக்கத்திலிருந்து ஒற்றுமையை மேம்படுத்துகின்ற கலாசாரத்தை உட்சாகப்படுத்துவது ஆலயங்களின் முக்கிய வகிபாகங்களாகும். மற்றவர்கள் முன்னிலையில் ஆலயங்கள் நேர்மை மிக்கவையாக இருத்தல் வேண்டும். நல்லிணக்கம் மற்றும் நீதி ஆகியவற்றை வெளிப்படுத்தல் தொடர்பான பிரகடனப்படுத்தலுக்கு சமமாக நற்செய்தி மேற்கொள்ளப்படல் வேண்டும். நல்லிணக்க ரீதியான தொடர்பு முறைகள் முறிகின்ற பொழுது, கிறிஸ்த்துவின் பாதையில் அவற்றை மத்தியஸ்தம் செய்வதற்கான வகிபாகத்தை ஆலயங்கள் ஏற்க முடியும். இந்த சந்தர்ப்பத்தில் இழைக்கப்பட்ட வன்முறைகள் தொடர்பில் நகராமல் இருக்க வேண்டுமென வலியுறுத்தப்படுகிறது. மன்னிப்பைக் கோருகின்றவர்கள் நேர்மையாக நடந்து கொள்வது, நல்லிணக்கத்தின் பால் செயற்படுவது ஆகியன அனுமதிக்கப்படல் வேண்டும். அப்பொழுது தான் பழி வாங்கலுக்குப் பதிலாக பரிகார நீதிகளை நடைமுறைப்படுத்தி உண்மை பற்றிய செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும். உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்கள் தாமாக விரும்பி முன்வருவது இதில் தங்கியுள்ளது. அதேபோல் உரிமை மீறப்பட்டவர்களும் இதனை ஏற்றுக்கொள்ளல் வேண்டும். அத்தகைய சந்தர்ப்பத்தில் தான் உண்மையான மன்னிப்பளித்தல்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான நீதி ஆகியன வெளிச்சத்திற்கு வரும்.

கடவுள் பற்றிய யதார்த்தம், எம்மைப்பற்றிய சிந்தனைகள், நாம் ஒருவருடன் ஒருவர் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் போன்ற விடயங்கள் தொடர்பான எமது எண்ணக்கருக்களில் குறிப்பிடத்தக்க பாரிய மாற்றத்தை கிறிஸ்த்து கொண்டுவந்தார். “நீங்கள் உங்களில் ஒருவர் மீது மற்றொருவர் அன்பு செலுத்துங்கள், நான் உங்கள் மீது அன்பு செலுத்துவேன்” இதுவே இவரது எளிய நெறிப்படுத்தலும் கட்டளையும் ஆகும். அவர்கள் மீது அன்பு செலுத்துங்கள். இன்று பல விடயங்கள் உங்களைப் பிரித்து வைத்திருக்கிறது. மனித சமுதாயத்தை கடவுளின் மக்களால் கட்டியெழுப்புங்கள். மனித உரிமைகள் மீது நாம் தெரிவிக்கின்ற வெறும் அழுத்தங்களோ நீதிமன்றங்களினால் வழங்கப்படும் பாதுகாப்போ அல்லது ஆயதங்களினால் தொடர்ச்சியாக வழங்கப்படுகின்ற பாதுகாப்புகளோ வினைத்திறனற்றதாகக் காணப்படுகிறது. உலகில் இன்று பல்வேறு விதமான மக்கள் வியாபார ரீதியான ஆர்வங்களையுடையவர்கள் உள்ளடங்கலாக, கிறிஸ்தவ நற்செய்தியை மாற்றீடாக ஏற்றுக்கொள்கின்றனர். அவர்கள் ஒன்றுகூடல், வலையமைப்புகளை மேற்கொள்ளல், அயலவர் உறவுகளைக் கட்டியெழுப்புதல், சமுதாயமாகச் செயற்படல், கலந்துரையாடல், ஒருவரில் மற்றொருவர் தங்கியிருத்தல், ஆகியவற்றின் மூலம் சமூக நல்லுறவுகளையும் சமூக பிணைப்புகளையும் கட்டியெழுப்புகின்றனர். இத்தகைய பாரிய மாற்றமானது எமது சிறிய மனித உரிமைகளை நல்லிணக்கம் தொடர்பிலான கிறிஸ்தவ நற்செய்தி என்ற பாரிய கண்ணோட்டத்தினுள் இட்டுச் செல்லும்.

## Bibliography


Arriaza, L. J., & Roht-Arriaza, N. (2010). Weaving a Braid of Histories: Local Post-Armed Conflict Initiatives in Guatemala. In R. Shaw, & L. Waldorf, *Localizing Transitional Justice: Interventions and Priorities after Mass Violence* (pp. 205-227). Stanford,CA: Stanford University Press,.

Assefa, H. (2005). Reconciliation. Challenges, Responses and the Role of Civil Society. In P. van Tongeren , *People Building Peace 2, Successful Stories of Civil Society* (pp. 637-645). London: Lynne Rienner.

Bar-On, D. (2007). Reconciliation Revisited for More Conceptual and Empirical Clarity. In J. Bec-Neumann, *Darkness at Noon. War Crimes, Genocide and Memories* (pp. 62-84). Sarajevo: Centre for Interdisciplinary Postgraduate Studies.

Bar-Tal, D., & Bennink, G. (2004). The Nature of Reconciliation as an Outcome and as a Process. In Y. Bar-Siman-Tov, *From conflict resolution to reconciliation* (pp. 11-38). Oxford: Oxford University Press.

Bash, A. (1997). *Ambassadors for Christ: An Exploration of Ambassadorial Language in the New Testament.* Mohr Siebeck.

Bell, C. (2009). Transitional Justice, Interdisciplinarity and the State of the 'Field' or 'Non-Field'. *The International Journal of Transitional Justice*, Vol.3,No.1,pp.5-27.

Bloomfield, David; Barnes , Teresa ; Huyse , Luc. (2003). *Reconciliation after Violent Conflict. A Handbook.* Stockholm: International IDEA.

Burn, G. L. (2010). Land and Reconciliation in Australia: A Theological Approach. University of Exeter: Doctoral Theses.

Dorr, D. (2000). *Mission in Today's World.* Dublin: Columba Press.

Fischer, M. (2011b). Transitional Justice and Reconciliation: Theory and Practice. In B. Austin, M. Fischer, & H. J. Giessma, *Advancing Conflict Transformation: The Berghof Handbook II* (pp. 405-430). Opladen, Farmington Hills: Barbara Budrich Publishers.

Gowing, R. (2016, August 18). *LST International Development.* Retrieved from www.lse.ac.uk/depts/ID: http://www.lse.ac.uk/internationalDevelopment/pdf/WP/WP138.pdf

Isaacs, A. (2009). Truth and the Challenge of Reconciliation in Guatemala. In J. R. Quinn, *Reconciliation(s): Transitional Justice in Postconflict Societies* (pp. 116-146). Montreal:: McGill-Queen's University Press.

Kriesberg, L. (2004). From Conflict Resolution to Reconciliation. In Y. Bar-Siman-Tov, *From Conflict Resolution to Reconciliation* (pp. 81-110). Oxford: Oxford University Press.

Kritz, N. (2009). Policy Implications of Empirical Research on Transitional Justice. In H. van der Merwe, V. Baxter, & A. R.Chapman, *Assessing the Impact of Transitional Justice. Challenges for Empirical Research* (pp. 13-22). Washington : Washington DC: USIP.

Lobo, G. (1993). *Church and Social Justice.* Gujarat: Gujarat Sahitya Prakash.

Lundy, P., & McGovern, M. (2008). Whose Justice? Rethinking Transitional Justice from the Bottom Up. *Journal of Law and Society*, Vol.35,No.2, pp.265-292.

Marshall, C. (2001). *Beyond Retribution: A New Testament Vision for Justice, Crime, and Punishment.* Grand Rapids: Eerdmans.

Marshall, I. H. (1978). The Menaing of Reconciliationin. In R. Geulich, *Unity and Diversity in New Testament Theology* (pp. 117-32). Grand Rapids: Eeerdmans.

Martha, M. (1998). *Between Vengeance and Forgiveness. Facing History after Genocide and Mass Violence.* Boston: Beacon Press.

McCandless, E. (2001). The Case of Land in Zimbabwe: Cuase and Conflict, Foundation for Sustained Peace. In M. Abu-Nimer, *Reconciliation, Justice, and Coexistence: Theory and Practice* (pp. 209-234). New York, Oxford: Lexington Books.

Mendez, J. (2001;15(1)). National Reconciliation, Transnational Justice, and the International Criminal Court. *Ethics and International Affairs* , 25-44.

Merkel, H. (2004). χαταλλάσσω, ἀποχαταλλάσσω, χαταλλάγή. In h. Balz, & G. M. Schneider, *Exegetical Dictionary of the New Testament volume 2* (p. 261). Eerdmans.

Ntsebeza, D. (2000a). A Lot More to Live For. In W. James, & L. Van de Vijver, *After the TRC, Reflections on truth and reconciliation in South Africa* (pp. 103-108). Cape Town: David Philip Publishers.

Philpott, D. (2010). Reconciliation: A Catholic Ethics for Peacebuilding in the Political Order. In R. J. Schreiter, G. Powers, & R. Scott Appleby, *Peacebuilding,Catholic Theology, Ethics, and Praxis* (pp. 92-124). New York: Maryknoll:Orbis Books.

Philpott, D. (Fall 2007; 61,1). What Religion Brings to the Politics of Transitional Justice. *Journal of International Affairs*, 93-110.

*Puvath Reader.* (2016, August 18). Retrieved from http://puvath.lk/: http://www.puvath.lk/news.php?newsid=183929&hl=en

Quinn, J. R. (2009). What of Reconciliation? Traditional Mechanisms of Acknowledgment in Uganda. In J. R. Quinn, *Reconciliation(s): Transitional Justice in Postconflict Societies* (pp. 185-187). Montreal: McGill-Queen's University Press.

Stover, E., & Weinstein, H. (2004). *My Neighbour, My Enemy. Justice and Community in the Aftermath of Mass Atrocity.* Cambridge: Cambridge University Press.

Thurston, A. (1998). *Knowing Her Place: Gender and the Gospel.* New York: Paulist Press.
Totu, D. (1999). *No Further without Forgiveness.* London: Rider.
Volf, M. (1996). *Exclusion and Embrace: A Theological Exploration of Identity, Otherness, and Reconciliation.* Nashville: Abingdon Press.
Volf, M. (2001). Forgiveness, Reconciliation, and Justice: A Christian Contribution to a More Peaceful Social Environment. In R. Helmick, *Forgiveness and Reocnciliation: Religion, Public Policy, and Conflict Transformation* (pp. 27- 49). Pensylvania: Templeton Foundation Press.
Wilson, R. (2001). *The Politics of Truth and Reconciliation in South Africa: Legitimizing the Post-Apartheid State.* Cambridge : Cambridge University Press .

# முடிவுரை

"அகிம்சை என்பது அதிகாரத்திற்கானதல்ல, அது உண்மைக்கானது. அது நடைமுறையியல் அல்ல, தீர்க்கதரிசனமானது" (தோமஸ் மார்டன்)

வன்முறைக் கலாசாரம், இறத்தல் ஆகியன வாழ்க்கை முறையாகக் காணப்படுகின்றதொரு நாட்டில் நிலைமாற்றுக்கால நீதியானது புதிய சிந்தனைகளுக்கு அழைப்பு விடுக்கின்றது. இது புதிய மக்கள் கருத்துக்களைக் கோரி நிற்கின்றது. சமாதானத்திற்காக புதிய தத்துவார்த்த மற்றும் இறையியல் சார்ந்த விடயங்களைக் கட்டியெழுப்புகின்றது. ஆரம்பத்தில் நாம் எம் மத்தியில் இந்த ஆக்கிரமிப்புகளுக்கான அடிப்படைக் காரணிகளைக் கண்டறிதல் வேண்டும். எங்களுடைய உள்ளத்திலிருந்து அநீதியையும் தீமையையும் கண்டறிந்ததன் பின்னர் ஆன்மீக விடயங்களில் எம்மை ஈடுபடுத்தி இந்த சமூகத்தில் காணப்படுகின்ற தீய சக்திகளை இனங்கண்டு அவை தொடர்பில் காத்திரமாகச் செயற்பட்டு சமாதானத்தை மேம்படுத்துதல் வேண்டும். சமாதான மேம்பாட்டாளர்கள் என்ற செயற்பாடு இந்த நாட்டில் பிரபல்யமாகக் காணப்படுகின்றதொரு விடயமல்ல. போராளியே நீதிக்காக போராடுவதாவும், மனித உரிமை நாயகனாகவும் வணங்கப்படுகிறது. கடந்த சில தசாப்தங்களாக உருவாக்கப்பட்ட கருத்தியலிலும் அரசியலிலும் இத்தகைய மொழிநடைகளைக் காணமுடியும்.

இன்று எமக்கு அவசியம் வெறுமனே நீதிக்காகப் போராடுபவர்கள் அல்ல. சமாதானத்தை உருவாக்குபவர்கள் எமக்கு அவசியம். தமது சரியான நடத்தை, விவாதங்களின் உண்மைத் தன்மை, மனங்களை மனிதாபிமானம் மிக்கவையாக மாற்றும் வல்லமை படைத்தவர்கள் மிகவும் மோசமான நிலைமைகளில் கூட இவற்றைக் காத்திரமாக முன்னெடுக்கக் கூடியவர்கள், தமது அகங்காரங்களை ஒதுக்கி வைத்துவிட்டு உண்மையான பிரச்சினைகளை இனங்காணக்கூடிய ஆற்றல் படைத்தவர்கள், அவர்களால் கடைப்பிடிக்கப்பட்ட இறுக்கமான கருத்தியல்கள், பொருத்தமற்ற கருத்தியல்கள் மற்றும் அவர்கள் ஏற்றுக்கொண்ட முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட நிலைமைகள் ஆகியவற்றை உடையவர்களே இன்று எமக்கு அவசியம். துணிவுமிக்க எமது கலாசாரம், நாகரீகம் ஆகியவற்றிலிருந்து இதற்கான மூலங்களை நாம் கண்டறிதல் வேண்டும். எமது சிறப்பான நாகரீகம் மீதும் மரபுரிமைகள் மீதும் காணப்படுகின்ற பெருமைகள் ஆகியவற்றை நாம் சரியாக இனங்கண்டு எமது சமய ரீதியான மரபுகள் மற்றும் மரபுரிமைகள் ஆகியவற்றை முறையாக உணர்ந்து செயற்படாதவரை வரை இத்தகைய விடயங்களினால் கிடைக்கக் கூடிய பயன் குறைவாகவேயிருக்கும். நீதியான சமாதானம் மிக்க நாடொன்றைக் கட்டியெழுப்புவதற்கு சகல மக்களதும் அமைப்புகளதும் ஒற்றுமை அவசியம்.

சகல மதங்களையும் கலாசாரங்களையும் சேர்ந்த வளங்களை நாம் அகத்தூண்டலாக இங்கே பிரயோகிக்க முடியும். மதம் சார்ந்த சமுதாயங்களை நாம் முறையாக அணிதிரட்டுகின்ற பொழுது, நீதியை அடைவதுடன் மனித உரிமை மீறல்களுக்கான பொறுப்புக் கூறல்களையும் மேற்கொள்ள, தங்களது சமூகங்களை பங்குபற்றுதல் ஆட்சியை மேற்கொள்வதற்காக மேம்படுத்த, சமாதானக் கல்வியியலாளர்களாக செயற்பட முடியும். மத ரீதியாக சமூகங்களில் காணப்படுகின்ற ஆன்மீக, தாற்பரிய, சமூக ரீதியான விழுமியங்களை பயன்படுத்தி நிலைமாற்றுக்கால நீதிப் பொறிமுறைகளுக்கு தலைவர்கள் நேரடியாக உதவ முடியும். மேலும் தனிப்பட்ட, குழுக்களுக்கு இடையிலான, சமூகங்களுக்கு இடையிலான நல்லிணக்கச் செயன்முறைகளுக்கும் இவர்களால் உதவ முடியும். மதத்தை அடிப்படையாகக் கொண்ட சமூகங்கள் ஆன்மீக ரீதியான எண்ணக்கருக்களையும் நீதியையும் கட்டியெழுப்புவதற்குப் பங்களிப்புச் செய்ய மற்றும் சமாதானத்திற்கான சமயக் கல்வி தொடர்பிலும் இவர்கள் பங்களிப்புகளை நல்க முடியும். மனித உரிமைகள், நீதி தொடர்பான விடயங்களை வரையறை செய்வதில் எல்லா மதங்களுக்கும் அவற்றுக்கேயுரிய பாரம்பரிய, ஆன்மீகம் சார்ந்த விடயங்கள் உண்டு. உண்மையைக் கண்டறிதல், நீதி, இழப்பீடுகள், நல்லிணக்கம், மீண்டும் நிகழாமை போன்ற நிலைமாற்றுக்கால நீதியுடன் தொடர்புடைய பிரதான விடயங்களை உறுதிப்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்வதற்கு இவை தொடர்பிலான அகத்தூண்டல்களை ஏற்படுத்துவதற்கு சமய ரீதியான கற்கைகள் உதவுவதாக அமையும்.

குணப்படுத்தலை ஏற்படுத்துவதற்கான ஆற்றல், பாரிய மனித உரிமை மீறல்கள் ஏற்பட்டுள்ள சமூகங்களை நல்லிணக்கத்திற்கு கொண்டுவருதல் உள்ளடங்கலாக ஆன்மீகம் சார்ந்த பல நல்ல விடயங்கள் சமயம் சார்ந்த சமூகங்களிடம் காணப்படுகின்றன. மதத்தை அடிப்படையாகக் கொண்ட சமூகங்கள் மன்னிப்பு, பாவமன்னிப்பு, குற்றங்களை மறத்தல் ஆகியவற்றுக்குத் தயாராகவிருக்கின்றன. தாற்பரிய ரீதியான கொள்கைகள் மற்றும் விழுமியங்களால் நிலைமாற்றுக்கால நீதியை செப்பனாக வடிமைத்து மேம்படுத்த, பொதுமக்களுக்கு சிறந்த நன்மைகள் பயக்க முடியும். தண்டனை சார்ந்த மற்றும் மறுசீரமைப்பு சார்ந்த சட்டங்களுக்கு அப்பால் சென்று மனங்களில் மாற்றத்தை ஏற்படுத்தவும் ஆன்மீக ரீதியான மேன்மை மிக்க கொள்கைகளை நடைமுறைப்படுத்தவும், அதன் மூலம் நிலைமாற்றுக்கால நீதி மற்றும் மனித உரிமைகள் ஆகிய செயற்பாடுகளில் சமயம் சார்ந்த சமூகங்கள் ஈடுபட முடியும்.

நிலைமாற்றுக்கால நீதி மற்றும் ஜனநாயகம் தொடர்பான செயன்முறைகளில் சமயம் முக்கிய வகிபாகத்தை மேற்கொள்ள முடியும். இதன் உள்ளீட்டை நான்கு பிரதான விடயங்களில் அவதானிக்கலாம். அவையாவன; உண்மை, நீதி, நல்லிணக்கம், மீண்டும் நிகழாமை ஆகியவற்றுக்கான ஆணைக்குழு, உண்மையைக் கண்டறிவதற்காக காணாமற்போன நபர்கள் தொடர்பான அலுவலகம்,

விசேட சபையுடன் கூடிய நீதி சார் பொறிமுறைகள் மற்றும் இழப்பீடுகள் வழங்குவதற்கான அலுவலகம். சர்வதேச நீதிமன்றம், மனித உரிமைகள், நீதி, சமாதான ஆணைக்குழுக்கள் ஆகியவற்றின் நடைமுறைகள் தொடர்பில் பரிந்துரைகளை மேற்கொள்வதோடு, அவை தொடர்பான விழிப்புணர்வுகளை தமது சமூகத்தில் கட்டியெழுப்புவதன் மூலம் சமயத் தலைவர்கள் நிலைமாற்றுக்கால நீதியை முன்னெடுத்துச் செல்ல மற்றும் இவர்கள் நல்லிணக்கத்திற்கான முயற்சிகளை மேற்கொள்கின்ற அதேவேளை, பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகளையும் வழங்க முடியும். உண்மை மற்றும் நல்லிணக்கச் செயன்முறைகளில் சமயம் சார்ந்த உட்கட்டமைப்புகளை நாம் பிரயோகிக்கலாம். மதம் சார்ந்த சமூகங்கள் தொடர்பிலான சமய, சமூக நிறுவனங்கள் விரிவான முறையில் தமது உதவிகளை நல்கி சமூக மையச் செயற்பாடுகளை மேம்படுத்தலாம்.

முரண்பாட்டின் பரிணாமம் தொடர்பான சகல மட்டங்களிலும் கலந்துரையாடல், சமாதானம், நல்லிணக்கம் ஆகியவற்றை இலகுபடுத்தும் பொருட்டு தேசிய மட்டங்களில் சமயங்களுக்கு அழைப்பு விடுக்க முடியும். பொதுவாக சமாதானச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கும் அவை தொடர்பான பின்னூட்டல்களை மேற்கொள்வதற்கும் அரசாங்கத்தின் சார்பில் வினைத்திறன் மிக்க பங்களிப்புகள், அர்ப்பணிப்புகள் ஆகியன மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. முரண்பாட்டிற்கான அடிப்படைக் காரணிகளை நிவர்த்தி செய்யாத வரை மனித உரிமை மீறல்கள் தொடர்ந்துகொண்டேயிருக்கும். நிலைபேறான சமாதானம், நீதி, நேர்மையான நல்லிணக்கம், சிவில் சமூகத்தை மீளக்கட்டியெழுப்புதல், அரசுக்கும் மக்களுக்கும் மத்தியில் நம்பிக்கையைக் கட்டியெழுப்புதல் ஆகியன தொடர்பில் உதவிகளை நல்குவதற்கும், மதங்களை நாம் ஒரு சாலச்சிறந்த கருவியாக பயன்படுத்தமுடியும். இவற்றுள் மிக முக்கியமான விடயம் என்னவெனில், உண்மையைக் கண்டறிவதும் கடந்த காலங்களில் நடைபெற்ற அநீதிகள் தொடர்பில் நேர்மையான முறையில் செயற்படுவதுமாகும். அவ்வாறு நாம் செய்யாதபட்சத்தில் எதிர்கால சந்ததிகள் இவ்விதமான முரண்பாடுகளுக்கு முகம்கொடுப்பதட்கான சாத்தியக்கூறு அதிகம் எனக் கருதலாம்.

இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் தெடர்பாக மாற்றத்தினை அணுகும் பொது, சமதநதி பிரச்சாரம் செய்வதும், சம்தந்தை நெறியாக கட்டியெழுப்புவதும் கணத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்களாகும். முரண்பாடுகளில் ஈடுபட்டுள்ள சமூகங்களுக்கு மத்தியில் பரவலாக மனித உரிமை மீறல்கள் காணப்படுகின்றன. மதம் மற்றும் இனத்தை அடிப்படையாகக் கொண்டு பாரியளவு மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றுள்ளன. இதுதகைய நடவடிக்கைகள் எதிர்கால தலைமுறையின் சமூக கட்டமைப்பையே பாதிக்கும். மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்கள் தண்டனையிலிருந்து விதி விலக்குப் பெறுவதானது வினைத்திறன் மிக்க முறன்பாட்டு நிலைமாற்றம், நல்லிணக்கம், சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் ஆகியவற்றுக்கு அடிப்படைத் தடையாகக் காணப்படுகின்றன. தண்டனையிலிருந்து விதிவிலக்குப் பெறுதல், மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றவாளிகள், அநீதிகளை இழைத்தோர் ஆகியோர் தமது செயல்களுக்குப் பொறுப்புக் கூறக்கூடியவர்களாக இருப்பது தொடர்பில் சமயம் காத்திரமான பங்களிப்பினை நல்க வேண்டும். மனித இனத்திற்கு எதிராக குற்றமிழைத்தவர்களாக சாட்டியுரைக்கப்பட்டவர்களுக்கு எதிராக சட்ட நடடிவக்கை மேற்கொள்ளும் செயற்பாட்டினை இலகுபடுத்துவதற்கான நிரந்தர குற்றவியல் நீதிமன்றமொன்றைத் தாபிப்பதற்கு சமயங்கள் உதவ முன்வரவேண்டும். மேலும் இவ்விலக்கிற்கு ஆதரவாக பொருத்தமான பரிந்துரைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

எனவே, சமாதானம், நிலைபேறான அபிவிருத்தி மற்றும் ஒற்றுமை ஆகியவற்றைக் கட்டியெழுப்பும் முகமாக பல மதங்களுக்கிடையிலான கலந்துரையாடல்களை முன்னெடுப்பதற்கு சமயத் தலைவர்கள் முன்வரவேண்டும். முரண்பாட்டினை மாற்றுதல், நிலைபேறான அபிவிருத்தியை நோக்கிப் பயணித்தல்,சமாதானம் மிக்க சகவாழ்வினை ஏற்படுத்தல், மத ரீதியான பல்வகைமையை மதித்தல், மத்தியஸ்தத்தை இலகுபடுத்தி மேம்படுத்தல், மதம் சார்ந்த சமூகங்களுக்கு மத்தியிலும் அற்றுக்கு வெளியிலும் முரண்பாடு தீர்வுகளை மேம்படுத்தல், பேச்சுவார்த்தை, பகிரப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகியவற்றின் மூலம் மதங்களுக்கு இடையிலான உறவுமுறைகளை மேம்படுத்தல், சிவில் சமூகங்களுக்கு மத்தியில் ஒற்றுமைகளை ஏற்படுத்தல் ஆகிய முயற்சிகளை உள்ளடக்கியதாக இதன் நோக்கம் இருத்தல் வேண்டும். ஆட்சியின் அல்லது அரசாங்கத்தின் நிறுவன ரீதியான ஆற்றல்களைக் கட்டியெழுப்புதல், அரச சார்பற்ற நிறுவனங்களது ஆற்றல்களைக் கட்டியெழுப்புதல், மதம் சார்ந்த சமூகங்கள், அதன் ஆற்றல்களைக் கட்டியெழுப்புதல், சட்ட முறை, ஆட்சிக் கட்டமைப்புகள் ஆகியவற்றை வலுப்படுத்தல், நீண்டகால கல்விப் பரிந்துரைகள், நிலைபேறான சமாதானத்தை மேம்படுத்தக்கூடிய செயல்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக சமாதானத்தைக் கட்டியெழுப்பும் செயற்பாடு இருத்தல் வேண்டும். நீதியையும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக் கூறுகின்ற செயற்பாடுகளையும் மேம்படுத்துவது தொடர்பான முயற்சிகளில் சமயம் சார்ந்த சமூகங்கள் முக்கிய வகிபாகத்தினை மேற்கொள்ள முடியும். தமது சமூகங்களை பங்குபற்றுதல் ரீதியான ஆட்சியை மேம்படுத்துவதற்கு இட்டுச் செல்வதோடு,சமாதானக் கல்வியியலாளர்களாகவும் செயற்பட முடியும்.

இங்கு மிக முக்கியமான விடயம் என்னவெனில், மதத் தலைவர்கள் நல்லிணக்கத்தை வழங்குவதற்கு முன்வரவேண்டும். நல்லிணக்கம் குணப்படுத்தலை ஏற்படுத்துகிறது. ஆபிரிக்காவிலே நிற பாகுபாடு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதன் பின்னர், ஒவ்வொரு மாவட்டத்திலும் உண்மையைக் கண்டறிவதற்கான ஆணைக்குழு மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழு ஆகியன தாபிக்கப்பட்டது. அத்தகைய சந்தர்ப்பங்களில் சமயத் தலைவர்கள் ஊக்கியாகவும் குணப்படுத்துவதற்கான பிரதிநிதியாகவும் செயற்படமுடியும். போலியான வதந்திகள் பரவுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள்

மேற்கொள்ளப்படல் வேண்டும். சமயம் தொடர்பான நல்ல விம்பத்தைக் கட்டியெழுப்புதல், குரோதங்களை அகற்றுதல், கடந்தகால நினைவுகளைக் குணப்படுத்துவதற்கான முயற்சிகள் ஆகியன தொடர்பில் இலங்கையில் மதங்களுக்கு இடையிலான கலந்துரையாடல் நிலையங்கள் சிறப்பாக பங்களிப்புச் செய்ய முடியும். பாதிக்கப்பட்டவர்கள் அடிமட்ட மக்களாகவிருக்கின்ற பொழுது நல்லிணக்கம் தொடர்பில் அக்கறைகளைச் செலுத்துகின்ற பொழுது சமயத் தலைவர்கள் அடிமட்ட மக்கள் பற்றியும் சிந்தித்தல் வேண்டும்.

மதத் தலைவர்களது பங்களிப்பானது, நிலைமாற்றுக்கால நீதி தொடர்பான முன்னெடுப்புகளுக்கு ஒரு தார்மீக அதிகாரத்தை வழங்குகிறது. பல சந்தர்ப்பங்களில் அரசியல்வாதிகளுக்கு இல்லாத செல்வாக்கும் நம்பிக்கையும் சமயத் தலைவர்களுக்கு சமூகத்திலுண்டு. சமாதானக் கல்வி மூலம் சமயம் சார்ந்த தீவிரவாதம், பொறுமையின்மை ஆகியவற்றை மதம் சார்ந்த சமூகங்கள் எதிர்க்க முடியும். உள ரீதியான மாற்றத்தைக் கொண்டு வருவதே இவ்விதமான கற்கைகளின் மூல நோக்கமாகும். செவிமடுத்தல், உறுதிப்படுத்தல், பாராட்டுதல், கேள்வி கேட்டல் ஒன்றாக இணைந்து தேடுதல், தமது எதிராளிகளுடன் கூட ஆரோக்கியமான கலந்துரையாடலில் ஈடுபடல், இவ்வகையான சில பணிகளை சமயத் தலைவர்கள் தமது கடமைகளை நிறைவேற்றுகின்ற பொழுது மேற்கொள்ள முடியும். சமய உணர்வுகள், சமுதாய இசைவு, குடும்பம் மீதான விசுவாசம், அன்பு, கருணை, சகல உயிரினங்கள் மீதான அக்கறை, வாழ்க்கை மீதான பூரண மதிப்பு, மத்திய பாதையை தெரிவுசெய்தல், மிதமான தன்மை, சமநிலை, உயரிய இலக்குகளை கைவிடல் போன்றன எமது கலாசார விழுமியங்களாகக் காணப்படுகின்றன. இலங்கையில் நிலைமாற்றுக்கால நீதி தொடர்பான கலந்துரையாடல்கள் இடம்பெறுகின்ற பொழுது, இத்தகைய பாரம்பரியம் சார்ந்த விழுமியங்களை நாம் உள்ளடக்க முடியும். மதச்சார்பற்ற ஒழுக்க நெறிகள் தனிநபர் சார்ந்தவையாகும். சமயம் சார்ந்த கோரிக்கைகள் தனிப்பட்ட விருப்பத்திற்குரியதாகும். அதாவது தீர்க்கதரிசிகள் அவசியப்படுகின்றனர்; குணப்படுத்தலை நோக்காகக் கொண்டு செயற்படுபவர்கள் அவசியம். துன்பங்களை வெறுமனே பதிந்து வைத்திருப்பவர்கள் அவசியமல்ல. சமூகத்தை நீதியின்பாலும் சமாதானத்தின் பாலும் இட்டுச்செல்லக்கூடிய சீர்திருத்தவாதிகள் அவசியம். நிலைமாற்றுக்கால நீதி தொடர்பான ஆன்மீக ரீதியான அடிப்படைக் காரணிகள் மற்றும் அதன் முக்கிய தூண்கள் ஆகியவற்றைப் புரிந்துகொள்ளக் கூடிய தீர்க்கதரிசிகள் அவசியம். இன்றைய தருணத்தில் சமயம் மற்றும் சமயத் தலைவர்களது பணி இதுவாகும்.